
குரல் 3, நோக்கு 3
செப்டெம்பர் - ஒக்டோபர் 2003

சமாதானமும், பெண்களும்


# சமாதான நோக்கு

S. Jothi...

விசேட இதழ்



மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்



*எல்லாம் ஒரு தடவையில்......*
*இப்படத்தை பார்க்கும் போது உங்கள் எண்ணங்களில்*
*தோன்றுவதை கவிதையாக எழுதி, எமது முகவரிக்கு அனுப்பி*
*வையுங்கள், அடுத்துவரும் இதழ்களில் பிரசுரிப்போம்.*

**வந்துடைந்து கவிதையில்.....**



**இன்னும் எத்தனை நாட்களுக்கு இங்கே....**
**துவண்டு கிடக்கும் இரவுகளில் – நீண்ட**
**நீர் எம்மை நம்பீரோ... நாம் உம்மை?**
**எம்மை... எம்மிருப்பை... எம்பிள்ளைகளை...**
**வாழ விடும்.... நீவிர் வாழ.... எம்மை...**
**நீவீர்கள் உம்மை தொலைத்துவிடும்... நாம் சமாதானத்தை?**

**புனிதன்**
**வல்வெட்டித்துறை**

'சமாதான நோக்கு' மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வுப் பிரிவின் வெளியீடு. மா.கொ.நி பொதுமக்கள் கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பும், அதனை பலப்படுத்தலும் அவசியமென கருதுகின்றது. முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மா.கொ. நி ஆட்சிமுறை மற்றும் மோதல் தவிர்ப்புக் குறித்தான பிரச்சினைகளில் அவதானம் செலுத்துகிறது. 'சமாதான நோக்கு' வெளியீடு இன நெருக்கடியைத் தீர்க்க பங்களிப்புச் செய்யும் பிரச்சினைகள் குறித்தும், பொது மக்கள் மத்தியில் ஒரு கூட்டான செயற்பாட்டை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டும் செயற்படுகின்றது. மேலதிக விபரங்களுக்கு...


ஒருங்கிணைப்பாளர்,
முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வுப் பிரிவு,
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்,
32/3, பிளவர் வீதி, கொழும்பு– 07
தொ.பே: 011–2565304/6, பக்ஸ் : 4–714460,
..–மெயில்: cpa@sri.lanka.net
வெப்தளம் : www.cpalanka.org

மாற்றுக் கண்ணோட்டம் — 2

பாதிக்கப்பட்டவர்களுக்கே சமாதானம் தேவை : பேச்சுக்கள் தொடர வேண்டும்.... —சரோஜா சிவச்சந்திரன்— — 5

சமாதானம் வெறுமனே அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியலமைப்பு உத்தரவாதங்களை நோக்குவது அல்ல.... —செல்வி திருச்சந்திரன்— — 8

பால்நிலை உப—குழு சம்பந்தமாக... —குமாரி ஜயவர்த்தன— — 12

போரில் பாதிக்கப்படும் பெண்கள் சமாதானத்தில்.... —எம்.தேவகௌரி— — 15

எமது குரலை எழுப்புவதற்கு கடினமாகப் பாடுபடவேண்டியுள்ளது... —ஈராக் அமைச்சர் நஸ்ரீன் முஸ்தபா சித்தீக்— — 18

பயணமோ நீண்டது, இன்னமும் முதல் அடி வைத்த நிலையில்.... —சிரால் லக்திலக— — 22

சுடுகாட்டுச் சாம்பலிலிருந்து மீண்டும் உயிர்பெற்றெழுதல்... —ரொஜலினா டூயூக்கி— — 25

சமாதானத்தில் பெண்கள் வகிக்கும் துணிச்சல் மிக்க பாத்திரம் —சுமிகா பெரேரா— — 27

பெண்கள் குழு: சமாதானப் பேச்சுவார்த்தைகள் எது எத்தகையது? —சீதா ரஞ்சனி— — 31

சமாதானச் செயல்முறையில் பெண்கள்... —அமீனா மோஹின்— — 34

உதிர்வதால் எறி..... —பாவிசா— — 38

தெற்காசிய பெண்களின் சந்திப்பு —2001 நேபாள், காத்மண்டுவில் நடைபெற்ற பயிற்சிப்பட்டறையிலிருந்து— — 39

முரண்பாட்டின் வகைப்பாங்கு —நேபாள், காத்மண்டுவில் நடைபெற்ற பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றியவர்களின் எண்ணக்கோர்வை— — 44

சுவிஸில் நடந்த பெண்கள் சந்திப்பு — 47



சமாதான நோக்கு

குரல் 3, நோக்கு 3

செப்டெம்பர் - ஒக்டோபர் 2003

## மாற்றுக் கண்ணோட்டம்

# பெண்களும், சமாதானமும்

பெண்களும், சமாதானமும் என்னும் தலைப்பு, அத்தோடு தொடர்புற்ற ஏனைய எண்ணிறந்த பிரச்சினைகளிலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டு ஒரு விசேட பிரச்சினையாகக் கையாளப்பட வேண்டுமா என்பது உண்மையில் விவாதத்துக்குரிய ஒரு விடயமாகும். இதை ஒரு விசேட பிரச்சினையாகக் கருதிக்கையாளுவதும், அதன் முக்கியத்துவத்தையும், நோக்கெல்லையும் விஸ்தரிப்பது என்று கூறிக்கொண்டு உண்மையில் அவற்றை மட்டுப்படுத்தும், உள்ளார்ந்த ரீதியில் அதற்குரியதைவிடக் குறைவான கவனத்தை வழங்கும் வகையில் அதைச் கீழ்நிலைப்படுத்துவதாகும் என்று வாதிடுவோரும் உள்ளனர். பால்நிலை என்பது போராளிகள் மற்றும் சிவிலியன்கள் என்போரின் பிரச்சினைகள், பாரிய மனித உரிமை மீறல்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் நிவாரண மற்றும் புனர்வாழ்வு, ஆயுதக்களைவு மற்றும் படைக்கலைப்புக் குறித்த பிரச்சினைகள் மற்றும் போரினால் மிகமோசமாய் பாதிப்புற்ற ஜனசமூகங்களின் மீளிணக்கம் போன்றபோர் மற்றும் சமாதானத்தின் ஒவ்வொரு பரிமாணத்தினதும் பிரிக்கமுடியாத ஓர் அம்சமாகும். அது சமாதானம் தீர்வு காணவேண்டிய எண்ணிறந்த பிரச்சினைகளின் ஓர் முக்கியமான அங்கமாகும்.

மறுபுறத்தில் பால்நிலை பிரதான பிரவாகப்படுத்தல் மூலம் பால்நிலைப் பிரச்சினைகளின் உள்ளார்ந்த மதிப்பும், முக்கியத்துவமும் அற்றுப்போய்விடுகின்றனவென்றும், ஆணாதிக்கப்போக்கில் தீர்மானமெடுப்போர் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயல்முறையில் அவை மங்கி, மறைந்து விடுமென்றும், ஓர் அடையாள ரீதியிலான முக்கியத்துவத்துக்கு அப்பால் அவை ஒருபொழுதும் செல்வதில்லையென்றும் வாதிப்போர் உள்ளனர். இப்பிரச்சினையை நீதியாகக் கையாளும் வகையில் விசேடமான அம்சங்களைக் கருத்தில்கொள்ளுதல் வேண்டுமென்பதோடு, அது அங்கீகரிக்கப்பட்டு, தீர்வுகள் காணப்பட்டு, ஒன்றிணைக்கப்படுவதற்காக வலியுறுத்தப்படுதலும் வேண்டும்.

ம.ப.பா

ஆசிரியர் : பா.விஜயசாந்தன்

ஆசிரியர் குழு : பாக்கியசோதி சரவணமுத்து,
கேதீஸ்வரன் லோகநாதன், ரோஹான் எதிரிசிங்க, சுனந்த தேசப்பிரிய

சமாதான நோக்கு
24/3, 28வது ஒழுங்கை, ஒவ் பிளவர் வீதி, கொழும்பு 7.
தொ.பே : 011-565304/6, பக்ஸ் : 4-714460

உண்மையில் இரு பக்கவாதங்களிலும் அனுகூலமான, பெறுமதிவாய்ந்த அம்சங்கள் உள்ளன. இந்த விடயம் கௌரவத்தோடு கூடிய சமாதானம், நீதி மற்றும் ஜனநாயகத்துக்கு அடிப்படையான ஒன்றாகும். ஆகவே இப்பிரச்சினைக்கான அணுகுமுறை அதன் பொருள்பொதிந்த முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதாக அமைதல் வேண்டும். இதன் பிரகாரம் "சமாதான நோக்கு" என்ற இந்த இதழ் பெண்கள் மற்றும் சமாதானம் குறித்த உள்ளார்ந்த முக்கியத்தவம் பற்றிய, அதிகரித்த விழிப்புணர்வுக்குப் பங்களிப்புச் செய்யும் என்ற எதிர்பார்ப்பில் வெளிவருகின்றது. அத்தோடு அது கவனக்குவிப்புடன் கூடிய செயற்பாடு, கொள்கை, திட்டமிடல் மற்றும் நடைமுறையாக்கம் குறித்த விவாதத்தை முன்னேற்றுவதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

இச்சூழமையில், எல்ரீரீஈ பிரதிநிதிகளையும், இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய பால்நிலை உப-குழு வொன்று நிறுவப்பட்டமை சமாதானம் குறித்த பேச்சுவார்த்தைகளில் பால்நிலை அடிப்படையானதென்றும், முதலாம் சுவட்டு மட்டத்திலான பேச்சுவார்த்தைகளில் உத்தியோகபூர்வமாகப் பெண்கள் எவருமே பங்கேற்கவில்லையென்றும் நீண்டகாலம் வாதிட்டு வந்தபெண்களுக்கு ஒரு வெற்றியென்று வரவேற்கப்பட்டது. (திருமதி.அடேல் பாலசிங்கம் இத்தகைய சகல சந்தர்ப்பங்களிலும் பிரசன்னமாகவிருந்தபோதிலும் அவர் அங்கு பெண்களின் பிரச்சினைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒருவராகவோ, எல்ரீரீஈ பேச்சுவார்த்தைக் குழுவின் விதிமுறையான அங்கத்தவராகவோ இருக்கவில்லை.) ஆகவே, உப-குழுவென்பது செயல்முறையிலான இந்த வெற்றிடத்தை அங்கீகரிக்கும் ஒன்றாகவே விளங்குகின்றது. உண்மையில் அது இதைவிட அதிகமாகச் சாதிக்க வேண்டுமென்பதே நோக்கமாகவிருந்தது. அதன் பணிப்பாணை அது சமாதானச் செயல்முறையில் தரப்பினராக விளங்குவோருக்கு விதந்துரைப்புகளையும், ஆலோசனைகளையும் முன்வைப்பதை அனுமதிக்கின்றது. ஆயினும், ஏப்ரல் மாதத்தில் எல்ரீரீஈ அமைப்பு பேச்சுவார்த்தைகளில் பங்கபற்றுவதை இடைநிறுத்தத் தீர்மானித்ததையடுத்து சமாதானச்செயல்முறையில் ஏற்பட்ட தேக்கநிலையும், பொ.ஐ.மு-ஐ.தே.மு அதிகாரப்போட்டிகளும், பெண்கள் உப-குழு தனது பணிகளில் முன்னேற்றம் கண்டு தனது பூரண சாத்தியவளங்களை வெளிப்படுத்துவதில் தடையாக அமைந்துவிட்டன.

எப்படியாயினும், நம்பிக்கையும், விசுவாசமும் கட்டியெழுப்பப்பட வேண்டியுள்ளதால் இதற்குக் காலமெடுக்கும். மேலும், உப-குழுவின் அங்கத்தவர்களின் வாழ்க்கை அனுபவங்களை நோக்குமிடத்து, உப-குழு பொதுவான தேடல் முடிவுகளை எட்டும் வகையில் பணியாற்றுவதற்கு நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதாயின் மேலும் அதிகமான கூட்டங்கள் அடிக்கடி இடம்பெறவேண்டியிருக்கும். பேச்சுவார்த்தைகள் தேக்கநிலையில் இருக்கும் வேளையில், வடக்கு-கிழக்குப் பெண்களின் வாழ்க்கை நிலைமைகளைப் பாதிக்கும் எண்ணற்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காணப்படவேண்டியுள்ளது. இருதரப்பிலும் பரஸ்பர நம்பிக்கை மற்றும் நட்புணர்வைக் கட்டியெழுப்பும் காலச்சட்டகம் எதுவாக விருந்தபோதிலும் இப்பணிகள் ஆற்றப்பட வேண்டியுள்ளன.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளிக்கள ஆய்வுகள் காட்டியுள்ளது போன்று, உள்நாட்டில் இடம்பெயர்வு மற்றும் சுய-விருப்பின்பேரில் திரும்பி வருதல் போன்ற சூழ்நிலைகளினால் எழும் பெரும் எண்ணிக்கையிலான பிரச்சினைகள் உள்ளன. உதாரணமாக. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான, பிரத்தியட்சமான "பால்நிலைக் குருட்டுத்தனம்" நிறைந்த உரித்துத் திட்டங்கள் பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட, பெற்றோர்களில் ஒருவர் மாத்திரம் உயிருடனுள்ள குடும்பங்களுக்குப் பிரதிகூலமாகவே அமைந்துள்ளன. தமக்காகவும், தமது குடும்பங்களுக்காகவும் ஜீவனோபாயங்களை மீளமைத்துக்கொள்ளும் அவர்களின் இயலுமை, வீடுகளைத் திருத்தியமைக்கவும், மீண்டும் கட்டியெழுப்புவதற்குமான அவர்களின் வல்லமையைப் பொறுத்துள்ளது. அத்தோடு, காணி உறுதிகள் மீளப்பெறமுடியாத விதத்தில் தொலைந்துபோயுள்ள சூழ்நிலையிலும், மரபுவழிச்சட்டங்கள் பெண்களின் சொத்துரிமை குறித்த சுதந்திரத்தையும், இயலுமையையும் மட்டுப்படுத்துவதாலும் உரிமை உறுதிகளைத் தெளிவாக நிலைநாட்டுவது கஷ்டமாகவுள்ளது.

உண்மையில், கடைசியாகக் கூறப்பட்ட இந்த விடயம் பரந்ததும், விந்தையானதுமான ஓர் அம்சத்தோடு

தொடர்புற்றதாகும். யுத்தகாலத்தில் பலியானோராகவும், ''மற்றவரின்'' சின்னமாகவும் இலக்கு வைக்கப்படும் பெண்கள் யுத்தகாலத்தின் தேவைகளின் விளைவாக தந்தை வழி அமைப்பு முறைகளின் பிணைப்புகளிலிருந்து பெரிதும் விடுபட்டோராகவம் காணப்படுகின்றனர். யுத்த அனுபவம் உண்மையில் பால்நிலை உறவுகளில் ஒரு சமூகப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளதா என்பது சமாதானம் ஏற்பட்டதும் இது எவ்வளவு தூரத்துக்கு நிலைத்து, வலுப்படுத்தப்படும் என்றும் பாரிய சவால் மற்றும் முக்கிய அளவுகோளில் தங்கியுள்ளது. ஏனைய நாடுகளின் முரண்பாட்டு விடயப்பரப்புகளிலான சாதனை பல அம்சங்களும் கலப்புற்ற ஒன்றாகவுள்ளது. சமாதானக்காலத்தில் தந்தைவழி ஆதிக்கம் மீண்டும் நிலைநாட்டப்பட்டு, பல்வேறு சூழ்நிலைகளில் பால்நிலை சமத்துவத்தை மீளவும் நிலைநாட்டுவதற்கான போராட்டம் தொடரவேண்டியுள்ளது. பால்நிலை சமத்துவம் மற்றும் அதை நிலைமாற்ற மற்றும் முரண்பாட்டுக்கும் பின்னரான காலகட்டத்தினதும் வடிவமைக்கப்படவேண்டிய புதிய சமுதாயத்தினதும், அத்திவாரக் கோட்பாடாக ஆக்கிக்கொள்ளுதல் குறித்த சவால் இன்னமும் உள்ளது.

சமாதானப்பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதை நாடு எதிர்பார்த்துக் காத்திருக்கையில் அன்றாட அடிப்படையில் எதிர்நோக்கவேண்டிய, தெளிவான, கணிசமான பால்நிலை அம்சம் குறித்த எண்ணிறந்த பிரச்சினைகள் உள்ளன. அவற்றுடன் சிலவற்றுக்குத் துரிதமான, அல்லது இலகுவான தீர்வுகள் கிடையாது. இதன் காரணமாக, அவற்றுக்குத் தீர்வுகாண்பதைத் தள்ளிவைப்பதோ, தாமதிப்பதோ கூடாது. பிரத்தியேகமாக, அகதிமுகாம்களிலுள்ள உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் நிலைமை மற்றும் மீளிணக்கம் குறித்த முழுவிடயமும், அவசரமாகக் கையாளப்படவேண்டும்.

மீளிணக்கச் சாத்தியவள இயலுமைகளைக்கொண்ட நபர்களாகவும், நிகழ்ந்த விடயங்கள் குறித்த அங்கீகாரம் மற்றும் செவ்வை பார்த்தல் இயலுமைகளைக் கொண்ட நபர்களாகவும் பெண்களின் பாத்திரம் ஊக்குவிக்கப்படவும், விஸ்தரிக்கப்படவும் வேண்டும் இவை மிகவும் தீர்மானகரமான பிரச்சினைகளாக விருந்தபோதிலும், துரதிருஷ்டவசமாக முதலாம் சுவட்டு மட்டத்தில் அனுகூலமான விதத்தில் ஏற்றுக்கொள்ளப்படாதவகையாகவும், வரவிருக்கும் சிறிது காலத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும் சாத்தியமற்றவையாகவும் காணப்படுகின்றன. இதன் விளைவாக, உண்மைக்கும், நடந்தது குறித்த செவ்வைபார்த்தலுக்கும் மீளிணக்கத்துக்குமான பொறுப்பு பெருமளவுக்கு சிவில் சமூகத்தையும், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களையும் சார்ந்ததாகும். இது கௌரவம், பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் சகிப்புத்தன்மையோடு கூடிய எதிர்கால இலங்கைக் கலாசாரத்தை உருவாக்கி, வகுத்தமைக்கக்கூடிய சாத்தியவளத்தைக்கொண்ட முக்கியமான விடயப்பரப்பு ஆகும்.

இது இந்த நாட்டின் பெண்களுக்கு மாத்திரமன்றி ஆண்களுக்குமுரிய ஒரு சவாலாகும். ஆயினும் இது பெண்கள் தெளிவாகவே முன்னோடிகளாக விளங்கக் கூடியதும், ஆதரவு திரட்டும் நடவடிக்கைகளில் அண்களைவிடக் கூடுதலான வலியுறுத்தல் மற்றும் திடசித்தம் என்பவற்றை வெளிப்படுத்தக் கூடியதுமான ஒரு விடயமாகும்.


-கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து-

''உயர் மட்டங்களில் உச்ச கட்ட நிலைப் பேச்சுவார்த்தைகளில் பேசப்படவேண்டிய விடயங்கள் ஒவ்வொரு முறையும் கைநளுவுவதும்: கண்ணுக்கு எட்டும் தூரம் வரையும்: அல்லது புனிதத்தைக் கெடுத்துவிடும் என்றவையெல்லாம்! தரப்புகள் என ஜனநாயக ரீதியான மக்கள் கருத்துக்கள் முன்வைக்கப்படும் இடங்கள்.... எட்டாக்கனி அல்லது எட்டாகுழி அல்லது எட்டா? என ஆதிக்கக்குழுக்கள் தம்மைப் போர்த்திக்கொள்கிறது... இவை ஆண்களாகலாம் அல்லது ஆயுதம் தரித்தவர்களாகலாம். ஆமாம் நாம் அருந்த வைத்தவையெல்லாம்

மனிதாபிமானம் + ஜனநாயகம் = துன்பியல்

- இணேசன் -

# பாதிக்கப்பட்டவர்களுக்கே சமாதானம் தேவை : பேச்சுக்கள் தொடர வேண்டும்



**யாழ்ப்பாண பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர், திருமதி சரோஜா சிவச்சந்திரன் உடனான உரையாடல்..**

உங்கள் அமைப்பின் செயற்பாடு தொடர்பாக?

சமாதானம் தொடர்பான எண்ணக்கரு வலுவடைவதற்கு முன்னராக அதாவது யுத்தம் நடந்துகொண்டிருக்கும் காலகட்டங்களிலும், முரண்பாடுகளைத் தவிர்த்துகொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி வந்துள்ளோம். பாடசாலை, வெளிக்கள மட்டங்களில் நடாத்தப்படும் கருத்தரங்குகளில் எப்படி முரண்பாடுகளற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதில் மிகவும் கவனம் செலுத்தி நடாத்தி வருகின்றோம். இனங்களுக்கிடையில் சமாதானத்தின் புரிந்துணர்வை ஏற்படுத்தும் முகமாக மக்கள் தொடர்பாடல் கருத்தரங்குகள், மற்றும் வடக்கு தெற்கு உணர்வுப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்திவருகின்றோம். இதனுடாக சமஷ்டி, அரசியலில் பெண்களின் பங்களிப்பு, மற்றும் சமாதானத்தை வலுவூட்ட இனங்களுக்கிடையில் எவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கலாம் என்பன போன்ற தொனிப்பொருளை கொண்டதாகும்.

> "ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையை சீர்செய்ய ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இக்காலகட்டங்களில் நியாயமான, நிலையான அரசியல் தளம் ஒன்று தேவைப்படுகிறது"

> "ஒப்பந்தத்தின் பின்னர் பெண்கள் தொடர்பான மாற்றங்கள், எதிர்பார்ப்புகள் திருப்தியடையாத நிலையில், பல மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் அந்த மாற்றங்கள் வாழ்க்கையின் எதிர்காலத்தை நல்ல முறையில் அடைவதற்கான மாற்றங்களாக கருதவிடமுடியாது"

**மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தின் பின் யாழ்ப்பாண பெண்களின் சூழ்நிலை?**

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தமானது மோதலை தவிர்ப்பதற்கேயன்றி அது சமாதான ஒப்பந்தமாகாது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் பலவிதமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. மக்கள் தமது வாழ்க்கையை சீரமைத்துக்கொள்வதற்கான வழிவகைகளை உருவாகியது. இந்த இடைவெளியிலும் பலவிதமான கருத்துக்கள் பலதரப்பில் இருந்தும் உருவாகியுள்ளது. அதாவது போர் நடாத்திய தரப்பினர் தமது பலத்தினை உயர்த்தலாம் என்றும் அரசியல் இலாபங்களை சிலர் சம்பாதித்துக்கொள்ளலாம் என்ற கருத்துக்கள் உருவாகியிருக்கிறது.

இந்த ஒப்பந்தத்தின் பின்னர் பெண்கள் தொடர்பான மாற்றங்கள் எதிர்பார்ப்புகள் திருப்தியடையாத நிலையில் பல மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் இந்த மாற்றங்கள் வாழ்க்கையின் எதிர்காலத்தை நல்ல முறையில் அடைவதற்கான மாற்றங்களாக கருதிவிடமுடியாது. குறிப்பாக இடம்பெயர்ந்த காலங்களில் கூடுதலான பெண்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். அதிகமானவர்கள் முகாம்களில் முடங்கிக்கிடக்கிறார்கள். தமது சொந்த இடங்களுக்குச் செல்லவும் முடியாத நிலை. 24,178 குடும்பங்களின் காணிகள் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் சிக்குண்டுள்ளது. இக்குடும்பங்களில் அரைவாசிக்குமேல் பெண்களே தலைமை தாங்குகின்றார்கள். சுமார் 25,000 மேற்பட்ட பெண்கள் கணவனை இழந்துள்ளார்கள். அங்கவீனமான கணவர்களைக் கொண்ட குடும்பங்களும் அதிகம். இச்சூழ்நிலையோடு, மீண்டும் அவர்களின் சொந்த இடங்களுக்குச் சென்றால் என்ன தொழிலை மேற்கொண்டு குடும்பங்களை காப்பாற்றுவார்கள். குறிப்பாக இடம்பெயர்வுக்கு முன்னர் பெண்கள் ஈடுபட்டிருந்த தொழில்களில் கூட மாற்றங்கள் காணப்படுகின்றது. பொதுவாக மீன்பிடித்தொழில் செய்துவந்தவர்கள் மீண்டும் சரியான முறையில் மேற்கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. ஆண்கள் கூட மேசன், கூலி, தச்சுவேலைகளுக்கே தற்போது செல்கிறார்கள். அவர்களுக்குக் கூட அவ்வாறான மாற்று வேலைகளில் சரியாக ஈடுபடமுடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் பெண்களுக்கான மாற்று தொழிலில் ஈடுபடுவது மிகவும் சிக்கலான விடயமாகும். யாழ்ப்பாண கலாச்சார முறையில் கணவனை இழந்த பெண்கள் மீளத்திருமணம் செய்வது தற்போதைய நிலைமையில் சாத்தியமான ஒன்றல்ல. ஏனெனில் ஆண்கள் குறைவு அத்துடன் திருமணமாகாத பெண்கள் பலர் இருக்கிறார்கள். ஆகவே குடும்பத் தலைமைத்துவத்தில் இருக்கும் பெண்களுக்கு வருமானத்தைத் தேடிக்கொடுக்கும் சேவையை அரசாங்கமும், மற்றும் தொண்டர் நிறுவனங்களும் மேற்கொள்ள வேண்டும்.

சிறப்பான அம்சம் என்னவென்றால் இந்த ஒப்பந்தத்தின் பின் முஸ்லீம் சகோதரர்கள் படிப்படியாக யாழ்ப்பாணத்தில் தமது சொந்த இடங்களுக்கு வந்து குடியேறி வருகின்றனர். தற்போது 153 குடும்பங்கள் வந்து குடியேறியிருக்கிறார்கள். சிலர் தங்களுடைய வர்த்தக முயற்சிகளை தொடங்கியிருக்கின்றார்கள்.

**மோதல் தவிர்ப்பு சூழ்நிலையில் பேச்சுவார்த்தையின் வேகம் இடைநிறுத்தப்பட்டது தொடர்பாக?**

இந்த இரு தரப்புக்குமிடையிலான பேச்சுவார்த்தை இடைநிறுத்தம் கூட மக்கள் மத்தியில் பாரிய அச்ச உணர்வை உருவாக்கியிருக்கிறது. அந்த உணர்வை நாம் போக்க வேண்டும். சமாதானத்தேவையை நாம் வலியுறுத்தவேண்டும். போர் காலத்தில் ஏற்பட்டுள்ள அழிவுகள், துன்பங்கள் சிங்கள, முஸ்லீம் சமுதாயத்தினருக்கும் நடந்திருக்கின்றது. ஆகவே போரைத்தவிர்த்துக்கொள்ளும் தேவை எல்லா மக்களுக்கும் இருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்குத்தான் சமாதான தேவை என்பதல்ல, சமாதான நடவடிக்கைகளில் அனைத்து மக்களும் செயற்படவேண்டும். பேச்சுவார்த்தைக்கு வந்துள்ள இரு தரப்பினரும் சாதுர்யமாக போரைத் தவிர்க்க வேண்டிய சந்தர்ப்பங்களை உருவாக்கி சமாதான சூழ்நிலையை வலியுறுத்தியே வந்திருக்கின்றனர். இது இரு தரப்பினரும் சமாதான தேவையை நன்கு உணர்ந்திருக்கின்றார்கள் என்பதை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

**இப்பேச்சுவார்த்தையில் பெண்களின் பங்களிப்பும், பெண்கள் உப-குழு தொடர்பாக உங்கள் கருத்து?**

பேச்சுவார்த்தைகளின் போது பெண்களின் பங்களிப்பு தேவையென்ற அடிப்படையில் பெண்கள் அமைப்புகள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக இருதரப்பிலும் பெண்கள் பிரதிநிதிகளைக் கொண்ட உபகுழுவொன்றைக் கூட்டியிருக்கிறார்கள். 10 உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவில் ஐந்து ஐந்துபேர்கள் இருதரப்பிலும் பிரதிநிதித்துவப்படுத்தி மார்ச் மாதம் கிளிநொச்சியில் கூடி பெண்கள் பிரச்சினை தொடர்பாக கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர். இவை காலதாமதமாக இருந்தாலும் கூட பெண்கள் பிரச்சினைக்கு ஒரு புதிய மாற்றத்தை நோக்கிய நகர்ந்தது என்று கூறலாம். புலிகள் தரப்பு பிரதிநிதிகள் தமிழ்ப்பெண்களின் அரசியல் அபிலாசைகள், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவர்களுக்கான சுதந்திரம் போன்றவற்றை கொள்கை ரீதியல் அரச பிரதிநிதிகளுக்கு தெளிவாக விளக்கினர். ஆயினும் நடைபெற்றுக்கொண்டிருந்த பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இக்குழுவின் சந்திப்புகளும் நிறுத்தப்பட்டமை தேவையற்ற ஒன்றாகவே கருதுகின்றேன்.


விடுதலைப் புலிகளால் கையளிக்கப்படவுள்ள இடைக்கால வரைபு மாதிரியில் பெண்கள் தொடர்பான எதிர்பார்ப்புகள் பற்றி?

பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை இரு பகுதியினரும் பலமட்டங்களில் இன்னும் பல குழுக்களை நியமித்து பிரச்சினைகளை ஆராய்ந்து அது தொடர்பான விதப்புரைகளை நேரடியாக அரசியல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருப்போரிடம் வழங்கப்பட்டிருப்பின் நிச்சயமாக இடைக்கால நிர்வாகம் தொடர்பான வரைபுகளில் பெண்கள் தொடர்பான பிரச்சினைக்கு கூடிய அழுத்தத்தை கொடுத்திக்கும். அதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

அண்மைக்காலங்களில் விடுதலைப் புலிகளினால் வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளும் குழுவில் விடுதலைப் புலிகளின் பெண் உறுப்பினர்கள் அல்லது பிரதிநிதிகள் அங்கம் வகிப்பது அரசியல் பின்னணியில் பெண்கள் பலமான நிலையில் காலடியெடுத்து வைக்கின்றார்கள் என்பதற்கு முன்னோடி நிகழ்வாக அமைகிறது. சமக்ஷ்டி பற்றிய தெளிவான விளக்கங்களை பெற்றுக்கொள்ளும் பயணத்தின்போதும் பெண்கள் பிரதிநிதிகள் பங்குகொண்டிருக்கலாம்.

தற்போது யாழ்ப்பாணச் சூழ்நிலைகளைப் பார்க்கும்போது சட்டம், ஒழுங்குகளில் நிலையற்ற அல்லது ஒழுங்கற்ற போக்கு காணப்படுகின்றது. ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையை சீர்செய்ய ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இக்காலகட்டங்களில் நியாயமான, நிலையான அரசியல் தளம் ஒன்று தேவைப்படுகிறது. இந்த அரசியல் தளத்தை விரைவாக ஏற்படுத்தும்போதுதான் மக்களுடைய வாழ்வு முறையாக சீர்அமைந்து இயல்பு வாழ்க்கை உருவாக வழிசமைக்கும்.

உரையாடல் : பா.விசாந்தன்



# சமாதானம் வெறுமனே அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியலமைப்பு உத்தரவாதங்களை நோக்குவது அல்ல...



பெண்கள் கல்வி ஆய்வு நிலையத்தின், நிறைவேற்றுப் பணிப்பாளர்
கலாநிதி செல்வி திருச்சந்திரன்

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை 20 மாதங்களாக நீடிப்பதோடு, சமாதானப்பேச்சுவார்த்தைகள் ஒரு தற்காலிக தேக்கநிலையை அடைந்துள்ளது. புரிந்துணர்வின் பின்னரான பேச்சுவார்த்தைச் செயல்முறையில் எல்ரீரி·· அமைப்பைச் சேர்ந்த அடேல் பாலசிங்கம் அவர்களைத் தவிர, இரு தரப்பினரிடையிலும் நேருக்கு நேர் பேசிக்கொள்வதற்கு எந்தப்பெண்ணின் பங்களிப்பும் இல்லாத நிலையே இருந்து வந்துள்ளது. இது குறித்து தங்களின் கருத்து? சமாதானச் செயல்முறையில் பெண்களின் பங்களிப்பு குறித்து உங்கள் கருத்து?

> "போரிட வேண்டிய அவசியம் இல்லாதபோது பெண்போராளிகள் வழமையான வாழ்க்கைக்குச் செல்வதையே விரும்புகின்றனர். அவர்களும் மனிதப்பிறவிகள் என்பதையும், அவர்களுக்கும் தேவைகள் உண்டு என்பதையும் நாம் நினைவில் இருத்துதல் வேண்டும்".

முதலில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பெண்களும் சாமாதானமும் என்ற பிரச்சினையொன்றைக் கையாள முன்வந்திருப்பது குறித்து எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பக் கட்டங்களில் பெண்களின் இயக்கங்கள் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி, பெண்கள் அமைப்புகளும் இது விடயத்தில் கலந்தாலோசிக்கப்பட வேண்டுமென்று தெரிவித்தன. துரதிருஷ்டவசமாக எம்மோடு

தொடர்புகொள்ளவோ, எம்மைக் கலந்தாலோசிக்கவோ எதுவித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. சமாதானச் செயல்முறையில் பெண்களையும் சேர்த்துக்கொள்ளும் பிரச்சினை பல்வேறு மேடைகளிலும், கருத்தரங்குகளிலும் எழுப்பப்பட்டபோதிலும், இதுவரை எதுவுமே செய்யப்படவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எல்ரீரீ தரப்பிலிருந்து அடேல் பாலசிங்கம் மாத்திரம் பங்கேற்பது போதாது. அவர் எல்ரீரீ தரப்பின் பிரதிநிதியாவார். அவரின் கருத்துகள் தென்னிலங்கைப் பெண்களின் கருத்துக்களிலிருந்து வேறுபடக்கூடும். அவர் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவது குறித்துப் பெண்கள் இயக்கம் மகிழ்ச்சியடைந்தபோதிலும், மேலும் கூடுதலான பெண்கள் பிரதிநிதித்துவம் இடம்பெறுதல் வேண்டும். நாம் செய்துகொண்ட பல விண்ணப்பங்களின் பின்னர் பால்நிலை உப-குழு நிறுவப்பட்டது.

பால்நிலை உப-குழுவின் இரண்டு கூட்டங்கள் கிளிநொச்சியில் இடம்பெற்றபோது, பெண்கள் குறித்த பல்வேறு பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன. மூன்றாவது கூட்டம் மட்டக்களப்பில் இடம்பெறவிருந்தது. ஆயினும், சமாதானச் செயல்முறை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டமையால் இந்தக்கூட்டம் பிற்போடப்பட்டது. சமாதானச் செயல்முறையில் பால்நிலை உப-குழுவின் பாத்திரம் எத்தகையதாக இருத்தல் வேண்டும்?

பால்நிலை உப-குழுக்கு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டோர் எல்ரீரீ பெண்களைச் சந்திக்க முன்னர் பெண்கள் இயக்கத்துடன் கலந்தாலோசனைகளில் ஈடுபட்டனர். பல பெண்கள் இவற்றில் பங்குபற்றினர். அனைவரது கருத்துக்களும் செவிமடுக்கப்பட்டன. இப்பெண்கள் மட்டக்களப்பு, புத்தளம் மற்றும் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தோராவர். இக்கலந்தாலோசனைக் கூட்டங்களில் நாம் யாழ்ப்பாணத்தின் சம்பிரதாயச் சட்டங்கள், அவற்றின் தந்தைவழிப் பக்கச்சார்பு என்பன குறித்து நாம் கலந்துரையாடினோம். வடக்கு, கிழக்கில் மேலும் பல கூட்டங்களை நடத்தவும், அவர்களுக்கு வாசிப்பு பொருட்களை அனுப்பி வைக்கவும் தீர்மானித்தோம். பால்நிலை உப-குழு சமாதானச் செயல்முறையில் பெருமளவு பணிகளை ஆற்ற முடியும். வடக்கு, கிழக்கின் பெண்கள் பலவருடகாலமாகத் தனியாகப் பணியாற்றி வருகின்றனர். ஆயினும் இது ஒரு பொதுவான மேடையை அமைப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகும். இக்கூட்டங்கள் பதற்ற நிலைகளைத் தனித்து, முன்பே ஏற்படுத்திக்கொண்ட தவறான கருத்துக்களைக் களைய உதவும் பால்நிலை உப-குழு பெண்கள் குறித்த பிரச்சினைகளில் ஒரு வகையான முற்போக்கு கூட்டணி சக்தியை உருவாக்கலாம்.

வட-அயர்லாந்து மற்றும் தென்னாபிரிக்கா போன்ற உலகின் ஏனைய பல சமாதானச்செயல்முறைகளை நோக்கும்போது இவை ஒவ்வொன்றிலும் பெண்களின் பாத்திரம் மிகவும் பாரிய ஒன்றாகக் காணப்படுகின்றது. இச்சமாதானச் செயல்முறைகளில் பெண்கள் நேரடிப்பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டுள்ளனர். சமாதானப் பேச்சுவார்த்தைகளின் ஆரம்பக்கட்டத்தில் இலங்கை ஏன் பெண்களை ஈடுபடுத்தவில்லை? சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பெண்களையும் சேர்த்துக்கொள்வதற்கு என்ன செய்யவேண்டும்?

இலங்கையில் தந்தைவழி அமைப்பு விழுமியங்கள் அரசியல் பங்கேற்பு, கல்வி நிலையங்களைப் பெண்களுக்குத் திறந்துவிடுதல், போன்ற விடயங்களில் மிகவும் பலமானவையாக இருந்துவருகின்றன. இலங்கை ஏனைய தெற்காசிய நாடுகள் பின்தங்கியுள்ள விடயப்பரப்புகளில் முன்னேற்றம் கண்டுவருகின்றது. குறித்துரைத்த பெண்ணிலைப் பிரச்சினைகளில் பெண்களை ஒரு விசேட ஆக்கக்கூறாக எண்ணும் வகையில், அல்லது அவர்களின் விசேட நலன்களைக் கருத்தில் கொள்ளும் வகையில் அரசு மட்டத்தில் அல்லது நீதித்துறை மட்டத்திலான கலந்தாலோசனைகள் இல்லாத நிலையே உள்ளது. ஆகவே நாம் இன்னமும் ஒரு தீவிர தந்தைவழிச் சமூகமாகவே உள்ளோம். அதனால்தான் இதன் முக்கியத்துவம் உணரப்படவில்லை. சமாதானச் செயலமுறையில் பல பால்நிலைப் பிரச்சினைகள் உள்ளடக்கம் பெற்றுள்ளன. அது பால்நிலை வித்தியாசங்களற்ற ஒன்று எனக்கூறமுடியாது. பெண்களின் கரிசனைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்முயற்சிகள் எடுக்கப்படாதவரையில் பேச்சுவார்த்தைகளில் தீர்மானிக்கப்படும் எதுவும் பெண்களுக்குப் பயனுள்ளதாக அமையமாட்டாது. பெண்களின் பிரச்சினைகளைக் கருத்தில்கொள்ளவேண்டிய அவசியம் உள்ளது. தாய்மார், மனைவிமார் மற்றும் குடும்ப

"அடேல் பாலசிங்கம் மாத்திரம் பங்கேற்பது போதாது. அவர் எல்ரீரீ தரப்பின் பிரதிநிதியாவார். அவரின் கருத்துகள் தென்னிலங்கைப் பெண்களின் கருத்துக்களிலிருந்து வேறுபடக்கூடும்"

அங்கத்தினர் என்றவகையில் பெண்கள் குறித்துரைப்பாகப் போரினால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். போரின் காரணமாகப் பல பெண்கள் கவன்மாரையும், பிள்ளைகளையும் இழந்துள்ளனர். அது அவர்களுக்கு மன அதிர்ச்சி வடுக்களை ஏற்படுத்தியுள்ளது. பலரைக் குடும்பங்களின் தலைவர்களாக்கியுள்ளது. இவை போரின் விளைவாக எழுந்த, தனித்தனியாகத் தீர்வு காணப்படவேண்டிய பால்நிலைப் பிரச்சினைகளாகும். பெண்களின் அரசியல் பங்கேற்பு, அதிகாரப்பகிர்வு செய்யப்பட்ட அலகுகளில் அவர்களின் பிரதிநிதித்துவம், பெண்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகான உதவும் கோட்டா முறைமை போன்ற தீர்வு காணப்படவேண்டிய ஏனைய பிரச்சினைகளும் உள்ளன. புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், மற்றும் மீள் குடியேற்றம் போன்ற விடயங்களிலும் பெண்களைக் கலந்தாலோசித்தல் வேண்டும். பல்வேறு கருத்தரங்குகளிலும், கூட்டங்களிலும் இடம்பெற்ற பலதேவை மதிப்பீடுகளில் பெண்களின் குறித்துரைப்பான பிரச்சினைகளுக்குக் கவனம் செலுத்தப்படவில்லை. பெண்களின் பிரச்சினைகள் எழுப்பப்பட்டபோதெல்லாம், அதைத்தனியாகப் பிரஸ்தாபிக்கக் கூடாதென்றும், காலப்போக்கில் அவர்களின் பிரச்சினைகளுக்குக் கவனஞ்செலுத்தப்படுமென்றும் கூறப்பட்டது.

### பால்நிலை உப–குழு ஆற்றும் பணியும், பெண்கள் பொதுவாக ஆற்றிவரும் பணிகளும் எவ்வாறு சமாதானச் செயல்முறைக்கு உதவ முடியும்?

சமாதானம் வெறுமனே அதிகாரப்பகிர்வு மற்றும் அரசியலமைப்பு உத்தரவாதங்களை நோக்குவது அல்ல. நாம் இலங்கையில் வாழ வேண்டுமெனில் பல பிரச்சினைகளை ஆய்வுசெய்து, கலந்துரையாடி, பல்வேறு மட்டங்களில் இடைத்தொடர்பாடல்களை ஏற்படுத்த வேண்டும். இது வாழ்வாதாரமான முக்கியத்துவம் கொண்ட விடயமாகும். இதை ஒரு மிருதுவான செயல்முறையாக்கும் விதத்தில் இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கைச் சேர்ந்த பெண்களிடையே பால்நிலைப் பிரச்சினைகள் குறித்த அரசியலமைப்பு உத்தரவாதங்கள் சம்பந்தமான கருத்தொருமிப்பு அவசியமாகும். பெருமளவிலான பெண்களிடையே கருத்தொருமிப்பு உடன்பாடு ஏற்படும்போது, அது சமாதானச் செயல்முறையின் ஒரு பகுதியாகலாம்.

### பெண்கள் உரிமைகள், சிறுவர் உரிமைகள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் உரிமைகள் பற்றி நீங்கள் கூறுவதென்ன?

புனர்வாழ்வு குறித்து எதுவுமே செய்யப்படவில்லையென்பதே வடக்கு, கிழக்கில் நிலவும் பொதுவான கருத்தாகும். ஆசிய அபிவிருத்தி வங்கி(ADB) மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்(UNDP) போன்ற நிறுவனங்கள் பண உதவி குறித்த பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளபோதிலும், அடிமட்டங்களில் இதுவரை எதுவுமே நடைபெறவில்லை. வீடுகள் கட்டப்படவேண்டும். மன அதிர்ச்சி வடுக்களுக்குள் சிகிச்சைகள் அவசியம். சிறுவர்களின் கல்விப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் அவசியம். வடக்கில் கல்வியறிவற்ற பெண்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. நாம் பெண்களுக்கு வருமானம் பிறப்பிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். இதற்கு பெண்களுக்குக் கல்வியறிவூட்ட வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் பெண்களிடையே விபசாரத் தொழிலும் அதிகரித்துவருகின்றது. இத்தோடு தொடர்புற்ற எச்.ஐ.வீ மற்றும் எயிட்ஸ் மற்றும் ஏனைய சமூகரீதியில் பரவும் நோய்கள் என்பவை குறித்த அறிவும் அவசியமாகின்றது. இவற்றைக் கையாளுவதற்கான எந்த நிகழ்ச்சித்திட்டமும் இல்லை. சில நிலையங்களில் மன அதிர்ச்சிவடுக்களுக்கான சிகிச்சை வழங்கப்படுகின்றது. ஆயினும் அது போதாது. இந்த நாட்டில் மனோவியல் வைத்தியர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும். உள அதிர்ச்சி வடு குறித்த ஆலோசனைச் சேவைகளைத் தமிழில் அல்லது சிங்களத்தில் தேர்ச்சி பெற்றோரே மொழிபெயர்ப்புகள் மூலம் வழங்க முடியும். ஆலோசனைச் சேவை பயனளிக்க வேண்டுமெனில் அது பாதிப்புற்றவர்களின் சொந்த மொழியிலேயே இடம்பெறுதல் வேண்டும். பெண்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் எவ்வித நிகழ்ச்சித்திட்டங்களும் இல்லை. இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும். பெண்களுக்கெதிரான வன்செயல்களும் மேலுமொரு பிரச்சினையாகும். அகதிமுகாம்களிலுள்ள பெண்கள் பாலியல் தொல்லைகள் இடம்பெறுவதாகவும், அங்கு அந்தரங்கம் பேணும் வசதிகள் எதுவுமில்லையென்றும் முறையிடுகின்றனர். பெண்கள் அகதிமுகாம்களில் இருக்கும் வரை இந்த நிலைமைகள் தொடரும். அதனாலேயே இபபிரசசினைகளுக்கு உடனடித் தீர்வுகள் அவசியமாகும். இவற்றின் காரணங்கள் குறித்து ஆய்வுகளும் அவசியமாகும். வறுமையா, கல்வியின்மையா அல்லது ஏனைய காரணங்களா என்பது கண்டறியப்படவேண்டும். ஆய்வுகள் மூலம் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு, அவற்றுக்குத் தீர்வுகள் வழங்கவேண்டும். இப்பிரச்சினைகள் அனேகமானவை பால்நிலை குறித்தவையாகும்.

### இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என்ன செய்யப்படல் வேண்டும்?

ஆய்வுகள் மூலம் அவை இனங்காணப்பட்டு, அவற்றைத் தீர்ப்பதற்கான சிறந்த மார்க்கங்களை அறிதல் வேண்டும். அரசு முகவர் நிலையங்கள், சர்வதேச அமைப்புகள் சிவில் சமூகம், மற்றும் பொதுமக்களோடு கலந்தாலோசனைகள் இடம்பெறுதல் வேண்டும். பொதுமக்களிடையே கலந்துரையாடல்களும், விவாதங்களும் இடம்பெறுதல் வேண்டும்.

எல்.ரீ.ரீ. அமைப்பில் பல பெண் போராளிகள் உள்ளனர். சமூகத்தில் மீண்டும் மீளிணைப்புப் பெறுவது குறித்து அவர்கள் என்ன எண்ணுகின்றனர்? மீளிணைப்புக்கு எத்தகைய நடவடிக்கைகள் அவசியம்?

பெண்களோடு நான் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடியுள்ளோம். அவர்கள் சமாதானம் குறித்து ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். சமூகத்தில் மீண்டும் இணைந்துகொள்ளவும், வழமையான வாழ்க்கைக்குச் செல்லவும் ஆவலாகவுள்ளனர். போரிட வேண்டிய அவசியம் இல்லாதபோது பெண்போராளிகள் வழமையான வாழ்க்கைக்குச் செல்வதையே விரும்புகின்றனர். அவர்களும் மனிதப்பிறவிகள் என்பதையும், அவர்களுக்கும் தேவைகள் உண்டு என்பதையும் நாம் நினைவில் இருத்துதல் வேண்டும். சில குறிப்பிட்ட சூழ்நிலைமைகள் அவர்களை யுத்தத்தினுள் தள்ளின. இப்பிரச்சினைகள் குறித்த ஒரு பரந்த விளக்கம் எமக்கு இருத்தல்வேண்டும். முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வளிக்கும் ஒரு விசேட நிகழ்ச்சித்திட்டம் அவசியம் ஒரு ஜனநாயக அரசை அமைப்பதாயின் ஆயுதப்போராட்டங்கள் இடம்பெற்ற ஏனைய நாடுகளிலிருந்து எமக்கு மதியுரை அவசியம்.

பல்வேறு நலன் பிரதிநிதிகளிடையே ஒரு கேள்வி எழுகின்றது. இது மீளிணக்கம் மற்றும் முன் செல்லுதல் குறித்த கேள்வியாகும். முன்னாள் யூகோஸ்லாவியா போன்ற ஒரு பழிதீர்க்கும் மாதிரியைப் பின்பற்றுவதா அல்லது தென்னாபிரிக்க உண்மை ஆணைக்குழு போன்ற மீளாக்க மாதிரியைப் பின்பற்றுவதா என்பதே இக்கேள்வியாகும். இது சம்பந்தமாகத் தங்களின் கருத்து என்ன?

மனித குலத்துக்கெதிரான குற்றச்செயல்கள் சரியாகக் கையாளப்பட வேண்டும். போரின்போது ஆண்களுக்கும், பெண்களுக்கும் என்ன நடந்தது என்ற உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். முழு மனித குலத்துக்கும் எதிராகப் புரியப்பட்ட குற்றங்கள் எவையென்பதும் கண்டறியப்பட வேண்டும். பாலியல் வன்செயல் மற்றும் பாலியல் தொந்தரவுகள் போன்றவை பாரிய பிரச்சினைகளாக நோக்கப்படுதல் வேண்டும். அது ஒரு மீளாக்க நீதி மாதிரியாக அமைதல் வேண்டும். நாம் மீண்டும் வெறுப்பு, மற்றும் பழிக்குப்பழி என்பவற்றுக்குப் புத்துயிர் கொடுக்க விரும்புகிறோமா என்னும் கேள்விக்குப் பதில் அவசியமாகும். உண்மை குறித்த ஆணைக்குழுவொன்றை ஏற்படுத்தினால் மக்கள் கடந்த காலக்குற்றச்செயல்களை மிண்டும் வாழ்ந்து பார்க்கும் அவசியம் ஏற்படும். இது பகையுணர்வை மீண்டும் ஏற்படுத்த மாட்டாதா? அது சமூகத்தைப் பிளவடையச் செய்யுமா? கிருஷாந்தி குமாரசாமி வழக்கில் இப்பிரச்சினைகள் சில மேலெழுந்தன. இவை நன்கு ஆய்வு செய்யப்பட வேண்டிய விடயப்பரப்புகளாகும்.

பெண்கள் மற்றும் சமாதானச் செயல்முறையின் எதிர்காலம் எவ்வாறு அமையும்?

பால்நிலை உப-குழுவின் அங்கத்தவர்கள் அல்லது பெண்கள் இயக்கத்தின் அங்கத்தவர்கள் சமாதானப்பேச்சுவார்த்தைச் செயல்முறையில் இணைந்துகொள்ள வேண்டுமென்பது எனது கருத்தாகும். இதுவே இலங்கை அரசாங்கத்துக்கும், எல்ரீரீ. அமைப்புக்கும் பொருந்துவதாகும். பெண்கள் சமாதானப் பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்து பல்வேறு பிரச்சினைகளைக் கலந்துரையாடவேண்டும். இவை அதிகாரப்பகிர்வு, நிலைமாற்ற நீதி, மற்றும் மனித உரிமைகள் போன்ற பிரச்சினைகளாகும். பேச்சுவார்த்தைச் செயல்முறைகளிலிருந்து பெண்கள் ஓரங்கட்டப்படாமல், அவர்களும் கலந்தாலோசிக்கப்படுதல் வேண்டும்.

உரையாடியவர் : பவானி
(ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கப்பட்டது)

"பெண்களின் கரிசனைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்முயற்சிகள் எடுக்கப்படாதவரையில் பேச்சுவார்த்தைகளில் தீர்மானிக்கப்படும் எதுவும் பெண்களுக்குப் பயனுள்ளதாக அமையமாட்டாது"



# பால்நிலை உப-குழு சம்பந்தமாக கலாநிதி குமாரி ஜயவர்த்தனவுடன் இடம்பெற்ற நேர்முகம்

சமாதானச் செயல்முறையில் பால்நிலை உப-குழுவின் பாத்திரம் எத்தகையது?

பால்நிலை உப-குழு தாபிக்கப்பட்டதிலிருந்து இதுவரை இரு தடவைகள் கூடியுள்ளது. மூன்றாவது கூட்டம் மட்டக்களப்பில் இடம்பெறவிருந்தது. ஆயினும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டதால் இது சாத்தியப்படவில்லை. உப-குழுவில் இருதரப்பினரும் சமாதானச் செயல்முறையில் பெண்களுக்கு இயைபுள்ளவையாகக் காணப்பட்ட முதலாவது கூட்டத்தில் இருதினக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. கலந்துரையாடப்படவேண்டிய விடயப்பரப்புகள் குறித்து நாம் உடன்பாட்டுக்கு வந்தோம். இவை புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் சௌக்கியம் போன்ற பிரச்சினைகளாகும். இரு தரப்புகளையும் சேர்ந்த பெண்கள் பொதுவான விடயங்கள் குறித்து உரையாடி, உடன்பாடுகளை எட்டியது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். பால்நிலை உப-குழு பிரதானமாக உருவாக்கப்பட்டது. முரண்பாடு மற்றும் சமாதானச் செயல்முறையில் பெண்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்துப் பரிசீலனை செய்வதற்காகும். இதில் முன்னேறுவதற்கு எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்றபதைப் பரிசீலிப்பதும் இன்னுமொரு

"உப-குழுவின் கூட்டங்களின் நோக்கம் தீர்வுகாணப்பட வேண்டிய விடயப்பரப்புகளை இனங்காணுவதாகும். ஆகவே உப-குழு இருதரப்பினரதும் சம்மதம் கிட்டிய பிரச்சினைகள் குறித்து மாத்திரமே கலந்துரையாடியது."

நோக்கமாகும். இப்பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதன் மூலம் கையாளப்படவேண்டிய விடயப்பரப்புகளைத் தீர்மானித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிக்கை சமர்ப்பிக்கலாம்.

**இக்கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரல் எவ்வாறு தயாரிக்கப்பட்டது?**

தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலொன்று இருக்கவில்லை. இயைபுள்ளவையாகக் காணப்பட்ட பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள், அகதிகள், மீள்குடியேற்றம் மற்றும் மனிதப்பாதுகாப்பு என்பவை குறித்துப்பேசினோம். பாதுகாப்புச் சோதனைச் சாவடிகள் குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டுமென்று எல்ரீரீ தரப்புப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். தற்போதைய சட்டங்கள் பாரபட்சங்கள் நிறைந்தவையாக இருக்கின்றன என்னும் விடயம் குறித்தும் இங்கு பிரச்சினை எழுப்பப்பட்டது. தேசவழமைச் சட்டம் பாரபட்சம் நிறைந்ததாகவும், சந்தை வழிமுறைமையைப் பாதுகாப்பதாகவும் இருக்கக்கூடும். தேசவழமைச்சட்டங்கள் யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களுக்கும் பொருந்துபவையாக இருந்தபோதிலும், சில குழுக்கள் இதன்கீழ் வருவதில்லை. அது யாழ்ப்பாணத் தமிழர் ஒருவர் யாரைத் திருமணம் செய்கின்றார் என்பதைப் பொறுத்தவிடயமாகும். அரசாங்கப்பிரதிநிதிகள் சட்டத்தையும், இயைபுள்ள வழக்குகளையும் பரிசீலனை செய்து சட்டத்திருத்தத்துக்கு விதந்துரைப்புகளைச் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். தெற்கைச்சேர்ந்த நாங்கள் எம்மால் இயன்றதைச் செய்து, காட்சிகளுக்கு விதந்துரைப்புகளைச் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

**இந்தக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட ஏனைய விடயப்பரப்புகள் எவை?**

> “சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் இடம்பெறும் பட்சத்தில் பால்நிலை உப-குழுவின் அடுத்த கூட்டத்தைத் திட்டமிட்டு, மேலும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று, விதத்துரைப்புகளைச் செய்யும் வாய்ப்புக் கிட்டுமென்று எதிர்பார்க்கின்றோம்”

பாடசாலைப் பாடப்புத்தகங்கள் குறித்த பிரச்சினையை நாம் கலந்துரையாடினோம். வடக்கிலுள்ள பாடப்புத்தகங்கள் தெற்கின் பாடப்புத்தகங்களைவிட வித்தியாசமானவையாகும். இப்பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். அரசாங்கத்துதுக்குழுவில் இரு முஸ்லீம் பெண்கள் இடம்பெற்றிருந்தனர். அவர்கள் முஸ்லீம்களின் பிரச்சினைகள் உதாசீனப்படுத்தப்படக்கூடாதென்றும், அவற்றுக்குத் தீர்வுகள் காணப்படவேண்டுமென்றும் வற்புறுத்தினர். அவர்கள் பெண் அகதிகள், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் மற்றும் மீள்குடியேற்றம் குறித்த கரிசனைக் கவலைகளை வெளியிட்டனர். மீள்குடியேற்றத்தின்போது முஸ்லீம் பெண்கள் எவ்வாறு நடத்தப்படுபவர் என்பது குறித்து அவர்கள் கவலை தெரிவித்தனர்.

**மீளிணக்கம் குறித்த பிரச்சினை கலந்துரையாடப்பட்டதா?**

இல்லை. மீளிணக்கம் குறித்த பிரச்சினை இக்கூட்டங்களில் எழுப்பப்பட்ட போதிலும், எல்ரீரீ பிரநிதிகள் அது குறித்துக் கலந்துரையாடுவதற்குச் சம்மதிக்கவில்லை. காலம் அதற்குப் பொருத்தமானதல்லவென்று அவர்கள் தெரிவித்தனர். உப-குழுவின் கூட்டங்களின் நோக்கம் தீர்வுகாணப்படவேண்டிய விடயப்பரப்புகளை இனங்காணுவதாகும். ஆகவே உப-குழு இருதரப்பினரதும் சம்மதம் கிட்டிய பிரச்சினைகள் குறித்து மாத்திரமே கலந்துரையாடியது.

**பெண்போராளிகளின் பிரச்சினை குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றதா?**

இல்லை

**சமாதானச் செயல்முறையில் பெண்களின் பாத்திரம் எத்தகையதாக அமைதல் வேண்டும்? சமாதானச்செயல்முறையில் தற்போது பெண்களுக்குச் சமமான பிரதிநிதித்துவம் இருப்பதாக எண்ணுகின்றீர்களா?**

அடேல் பாலசிங்கம் எல்ரீரீ சமாதானத் தூதுக்குழுவில் ஒரு பிரதிநிதியாகவுள்ளார். எல்ரீரீ அமைப்பில் தீர்மானங்களை மேற்கொள்வதில் முக்கிய பங்கேற்கும் வலுவான, பெண்கள் அலகு ஒன்று உள்ளது. சமாதான முன்முயற்சியிலும், அரசியல் முறையிலும், மேலும் அதிகமான பெண்கள் துடிப்பான பாத்திரத்தை வகிக்கவேண்டிய தேவையுள்ளது.

**பெண்கள் குறித்த ஒப்பீட்டுச் சமாதானச்செயல்முறைகள் சம்பந்தமான ஆய்வு எதையாவது**

**மேற்கொண்டிருக்கின்றீர்களா? வேறு எங்காவது பால்நிலை உப-குழுக்கள் சம்பந்தமாக அறிந்துள்ளீர்களா? இதற்கு முந்திய மாதிரிகளிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட விடயங்கள் எவை?**

நான் அறிந்த வரையில் வேறு எந்தச் சமாதானச் செயல்முறையிலும் இத்தகைய பால்நிலைக் குழு மாதிரிகள் இருக்கவில்லை. சமாதான ஒப்பந்தமொன்றின் பின்னர் சில குழுக்களும், ஆணைக்குழுக்களும் தாபிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக தென்னாபிரிக்காவில் சமாதான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட பின்னர் உருவாகிய பால்நிலை ஆணைக்குழுவைக் குறிப்பிடலாம். பாலநிலை உப-குழு இலங்கைக்கு மாத்திரம் உரிய ஒரு செயற்பாடாகும்.

**பால்நிலை உப-குழுக் கூட்டத்துக்குச் சென்றிருந்தவேளையில் சாதாரண தமிழ்ப்பெண்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியதா? அவர்களின் உணர்வுகள் குறித்து அறிந்துகொண்டீர்களா?**



நாங்கள் கிளிநொச்சியில் இரண்டு தினங்கள் மாத்திரமே தங்கியிருந்தோம். சாதாரண தமிழ்ப்பெண்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டவில்லை. எம்மை ஓர் அநாதை ஆச்சிரமத்துக்கு அழைத்துச் சென்றார்கள். கிளிநொச்சியையும் சுற்றிக்காட்டினார்கள். அனைத்துமே எல்ரீரீ. அமைப்பினாலேயே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. வடக்கு, கிழக்குப் பெண்களுக்கு இயைபான பிரச்சினைகள் குறித்து எல்ரீரீ. பிரதிநிதிகளாகிய பெண்களே எமக்கு எடுத்துக்கூறினர். அரசாங்கத் தரப்பில் தூதுக்குழுவில் இடம்பெற்ற அனேகமான பெண்கள் இதற்கு முன்னரே வடக்கு, கிழக்குக்குச் சென்று சாதாரண தமிழ்ப்பெண்களைச் சந்தித்துள்ளனர். ஆகவே தீர்வுகாணப்படவேண்டிய பிரச்சினைகள் குறித்து அவர்கள் நன்கு அறிவர். அரசாங்கத் தரப்பில் தூதுக்குழுவில் அங்கம் வகிக்கும் டாக்டர்பஸீலா ரியாஸ் அக்கறைப்பற்றில் பணியாற்றும் ஒரு வைத்தியராவார். அக்கறைப்பற்றுப் பெண்களை அவர் நேரடியாகவே நன்கு அறிவார்.

**மொழிப்பிரச்சினை எழுந்ததா? மொழிபெயர்ப்பாளர்கள் இருந்தனரா?**

விடயங்கள் மொழிபெயர்க்கப்பட வேண்டியிருந்தது. அரசாங்கத்தரப்பில் தமிழில் உரையாற்றக் கூடிய இரு பெண்கள் இருந்தனர். இது பெரிதும் உதவிகரமாக அமைந்தது. தனிப்பட்ட முறையில் நாம் உரையாடிய வேளைகளிலும் ஒரே மொழியில் பேசியவர்கள் இருந்தமையால் எமக்கு உதவியாகவிருந்தது.

**கடைசியாக இடம்பெற்ற கூட்டத்தின் பின்னர் எல்ரீரீ. பிரதிநிதிகளை எங்காவது சந்தித்தீர்களா?**

தொடர்புகளைப் பேணி வந்துள்ளோம். எமக்கு ஈ-மெயில்களை அனுப்பியதோடு, இணையத்தில் ஏப்ரல் புதுவருட வாழ்த்து அட்டைகளையும் அனுப்பி வைத்துள்ளனர். சிலர் ஐரோப்பாவுக்குப் போகும் வழியில் சில தினங்கள் கொழும்பில் தங்கிச்சென்றனர். அந்தவேளையில் நாம் அவர்களைச் சந்தித்தோம்.

**அடுத்த நடவடிக்கைகள் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?**

அவை அனைத்தும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஏற்படும் முன்னேற்றத்தைப் பொறுத்த விடயங்களாகும். அக்டோபரில் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்குமென்று பேசப்படுகின்றது. எமது எதிர்பார்ப்பும் அதுவேயாகும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் இடம்பெறும் பட்சத்தில் பால்நிலை உப-குழுவின் அடுத்த கூட்டத்தைத் திட்டமிட்டு, மேலும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று, விதந்துரைப்புகளைச் செய்யும் வாய்ப்புக் கிட்டுமென்று எதிர்பார்க்கின்றோம்.

நேர்காணல் : பவானி
(ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கப்பட்டது)

# போரில் பாதிக்கப்படும் பெண்கள் சமாதானத்தில்.........

-எம்.தேவகௌரி-
பத்திரிகையாளர்



எல்லாக் கலாசாரங்களிலும் "பெண் என்றால் சமாதானம், ஆண் என்றால் போர்", இதை அரசியல் தொடர்பூடகம், கல்வி, சமூகவாக்கம் என அனைத்து இடங்களிலும் பிரதிபலித்து வருகின்றனர்?

மறு உற்பத்தியுடன் இணைந்த பெண்ணின் வாழ்வு ஆக்கத்தில்தான் அதிக நாட்டம் கொள்கிறது. அழித்தலில் விலகி நிற்கிறது. இதனால்தான் போர்க்காலங்களில் எந்த நாட்டிலும் அதிகளவான பாதிப்புகளை பெண்ணே எதிர்கொள்ள நேரிடுகிறது. முக்கியமாக ஆண்களை பெண்களிடம் இருந்து விலக்குவதன் மூலம் பெண்களை அந்த சமூகத்தை வலுவற்றதாக்க முடிகிறது.

இங்கே ஒட்டுமொத்த இலங்கைப் பெண்கள் என்றளவிற்கு இல்லாமல் தமிழ்ப் பெண்கள் என்று பார்க்க வேண்டிய தேவை உண்டு. ஏனெனில் போரில் பெண்கள் எவ்வளவுக்கு பாதிக்கப்பட்டார்களோ அந்தளவுக்கு போரில் ·டுபட்ட பெண்களும் உண்டு இதுவரைக்கும் 3,710 பெண் போராளிகள் மரணித்துள்ளனர். கலாசாரம், இயல்பு என்று சொல்லப்படுகின்ற பெண்ணின் அமைதிக் குணங்கள் எல்லாம் போர்க்குணமாக மாற்றமடையும் அளவிற்கு பெண்கள் போரை எதிர் கொண்டிருக்கின்றனர். இதனால் ஆதிக்கத்திற்கு எதிராக நடத்தப்பட்ட விடுதலைப் போராக தமிழ்த் தரப்பில் போரை நாம் இனங்காண முடியும். இதுவே பின்னர் சமூகத்தின் ஒரு பிரிவினரான பெண்களையும் அதிகளவு உள்ளிழுக்க ஏதுவாயிற்று. எனவே போரின் பாதிப்பிற்குட்பட்ட பொதுமக்கள் சார்ந்த

பெண்களையும், போரில் நேரடியாக போராளிகளாக இயங்கிய பெண்களையும் தமிழ்ச்சமூகம் கொண்டுள்ளது. இங்கே ஒன்றை நாம் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறேன். வடக்கு கிழக்கில் போரின் பின் விளைவாகவோ, அல்லது போரின் விளைச்சலாகவோ பெண்கள் பாதிக்கப்படவில்லை. நேரடியாக, கண்ணுக்கு முன்னால் போரை எதிர் கொண்டவர்கள். அவர்கள் மீதுதான் போர் புரியப்பட்டது. அதாவது வடக்கு கிழக்கு வாழ் தமிழ் சமூகத்தின் மீது போர் தொடுக்கப்பட்டது. நவாலி தேவாலயமும் சரி, கொக்கட்டிச் சோலை அனர்த்தமும் சரி, குமுதினி படகு அழிப்பும் சரி ஒவ்வொரு முறையும் வீசப்பட்ட குண்டுகளும், அடிக்கப்பட்ட செல்களும் தடுக்கப்பட்ட உணவுகளும், பொருட்களும் நேரடியாக வடக்கு கிழக்கு மக்களைப் பாதித்தது. இந்த மக்களில் பெண்கள் பெருமளவு அடக்கம். போரில் இணைந்த ஆண்கள், புலம்பெயர்ந்த ஆலயங்கள், காணாமல் செய்யப்பட்ட ஆண்கள் என ஆண்கள் குடும்ப அலகு, சமூக உறவில் இருந்து பிரிக்கப்பட பெண்கள் அதி கூடிய குடும்பச் சுமையுடன் இழப்புகள், இடப்பெயர்வு, வறுமை, பாதுகாப்பின்மை, பாலியல் வன்முறை என பல முனைத்தாக்கங்களையும் அனுபவிக்க நேர்ந்தது. இதுவே போரிலும் மிக மூர்க்கமாக அவர்கள் இயங்க வழிவகுத்தது. அனைத்துப் பெண்களும் ஒரு தற்காப்பு பயிற்சி எடுக்க வேண்டிய நிலையை உருவாக்கியது மட்டுமல்லாமல் போரை மக்கள் மயப்படுத்தவும் இந்த அனர்த்தங்கள், தாக்கங்கள் அதனிடு எழுந்த தேவைகள் தூண்டின.

இத்தகைய ஒரு நிலை, இதுவரை காலமும் இருந்த தமிழ்ச் சமூக பெண்பற்றிய கலாசார முறைமைக்கு மாறுபட்டதாக அமைந்தது. அதாவது பெண்ணின் நடவடிக்கைகள் வாழ்வின் நோக்கு, அதனால் ஏற்பட்ட குணாம்சங்கள். எனவே கலாசாரக்காவிகளாக எந்நேரமும் நோக்கப்படுகின்ற பெண்கள் தமது நடவடிக்கைகள், குணாம்சங்களில் பாரிய

"போரில் இணைந்த ஆண்கள், புலம்பெயர்ந்த ஆண்கள், காணாமல் செய்யப்பட்ட ஆண்கள் என ஆண்கள் குடும்ப அலகு, சமூக உறவில் இருந்து பிரிக்கப்பட பெண்கள் அதி கூடிய குடும்பச் சுமையுடன் இழப்புகள், இடப்பெயர்வு, வறுமை, பாதுகாப்பின்மை, பாலியல் வன்முறை என பல முனைத்தாக்கங்களையும் அனுபவிக்க நேர்ந்தது. இதுவே போரிலும் மிக மூர்க்கமாக அவர்கள் இயங்க வழிவகுத்தது"

மாறுபாட்டை காட்டவேண்டிய நிலைக்கு போர் அவர்கள் மீது தாக்கம் புரிந்துள்ளது.

குடும்பத் தலைமைகளாக, முக்கிய உழைப்பாளார்களாக, போராளிகளாக, மறு உற்பத்தியில் தம்மை இணைக்காதவர்களாக, அல்லது இணைக்க முடியாதவர்களாக பெண்களின் வாழ்நிலை கட்டமைக்கப்பட்டது.


இந்த நிலையில் உருவாக்கப்படுகின்ற சமாதான சூழ்நிலைக்குள் பெண்கள் பற்றிய அக்கறை எப்படி இல்லாமல் போனது? சமாதானம் உருவாக்கப்பட்டுள்ளது. இனி எல்லோரும் தம் குடும்ப அலகை மீள் கட்டமைத்து ஸ்திரப்படுத்தலாம் என்று கூறப்பட்டதுபோல், பெண்கள் பொது வேலைத்தளத்தில் இருந்து குடும்ப அல்லது சுய தளத்திற்கு தள்ளப்பட்டதுபோன்ற நிலை உருவாகியிருக்கின்றது. சமாதான காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சில நடவடிக்கைகள் இதற்கு நல்ல உதாரணங்கள். அதாவது இடப் பெயர்வு, இழப்பு, இரட்டைச் சுமை, வறுமை இவற்றுக்கு சமாதான தீர்வாக சுயதொழில் வாய்ப்பு கோழிவளர்த்தல், தையல்மெஷின் கொடுத்தல், வீட்டில் இருந்து எதையாவது செய்து விற்பனை செய்வதற்கு ஊக்குவித்தல் என்பன NGO க்களாலும் ஏனைய நிறுவனங்களாலும், செயற்படுத்தப்பட்டது. இவ்வாறான நடவடிக்கைகள் சமாதான எண்ணப்பாட்டிலிருந்து பெண்களை பெருமளவிற்கு தள்ளிவைக்கும் செயல்களே. இதையே பொது வேலைத்தளத்தில் ஒரு பெரும் கோழிப்பண்ணையாகவோ, ஆடைத் தொழிற்சாலையாகவோ, ஒரு கட்டமைக்கப்பட்ட பொருளாதார வளத்தை அந்த பெண்களுக்கு உறுதிப்படுத்தி அதனிடு பிரதேச வளத்தை ஸ்திரப்படுத்தும் முயற்சியாக மேற்கொள்ளும் போது, சமாதானத்தின் பிரக்ஞை பெண்களில் குடிகொண்டு இருப்பதுடன் அதை நோக்கிய உழைப்பும் அவர்களிடம் இருந்து பெறக்கூடியதாக இருக்கும். இதன்போது சின்னாபின்னப்பட்ட பெண்கள் ஒன்றிணையவும், ஏற்கனவே ஒன்றிணைந்து வேலை செய்த பெண்களின் ஆளுமைக்கு இன்றும் உரமூட்டவும் அதன் மூலம் சமாதானத்தை நிலை நிறுத்தவும் இவை ஏதுவாகலாம். இதைவிட்டு பொதுத் தளத்திற்கு வந்த

பெண்களை பிரித்து மீண்டும் தனிமைப்படுத்தி வாழவைப்பது சமாதானம் பற்றிய பிரக்ஞையை அவர்களிடம் இருந்து அழிப்பதற்கு ஏதுவாகின்றது.

இதேவேளை சமாதான காலங்களில், பெண்கள் பற்றி அக்கறை இல்லாததால், அபிவிருத்தி, அல்லது மீள் கட்டமைப்பு என்று வருகின்ற போது சுகாதாரம், போஷாக்கு கவனிக்கப்படாமலே இருக்கிறது. சமூக உற்பத்தியில் ..டுபடுகின்றவர்கள் பெண்கள். இனிவரும் சமூகம் ஆரோக்கியமானதாக இருக்கவேண்டும் என்ற அக்கறை சுகாதாரத்திலும், போஷாக்கிலும் பெண்களை அவர்களின் மறு உற்பத்தியை வளமுள்ளதாக்க வேண்டும். சமாதான காலத்தில் முக்கியமாக இது கவனிக்கப்படுகின்றபோது சமாதானத்தின் வலிமையை பெண்கள் என்றும் நிலை நிறுத்திக் கொள்ள தமது நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுக் கொண்டே இருப்பர்.


அடுத்த முக்கியமான விடயம் போர்க்காலங்களில், ஒன்றிணைந்த அகதி வாழ்வில் அல்லது தலைமறைவு வாழ்வில் பெற்ற பாதுகாப்பைக் கூட சமாதான காலத்தில் பெறமுடியாத துர்ப்பாக்கியம் ஏற்படக்கூடாது. ஆனால், தமிழ்ப் பிரதேசங்களில் மக்கள் குடியிருப்பில் படையினரின் முகாம் இருப்பது இயல்பு வாழ்வை பெண்களுக்கு என்றைக்குமே கொண்டுவரப்போவதில்லை. சமாதான காலத்தை அனுபவிக்க முடியாத மனநிலையில் எந்நேரம் போர் வெடிக்குமோ என்ற அச்சத்தை அந்த முகாம்கள் கொடுத்த வண்ணமே இருக்கும். இதைவிட ஆக்கிரமிப்பு சக்திகளாக இயங்குகின்ற படைத்தரப்பு பெண்களின் மீதான பாலியல் வன்முறையை சந்தர்ப்பம் கிடைக்கும்போது மேற்கொள்ளும் சாத்தியம் உண்டு அத்துடன் சமாதான நோக்கில் பெண்களுடன் சினேகபூர்வ உறவை வளர்த்து இலகுவாக பாலியல் தேவைகளை பூர்த்தி செய்தல், கைவிடல் என்பன சமாதானத்தை பெண்கள் முழுமையாக உணரமுடியாத நிலையைத் தோற்றுவிக்கின்றது.

சமாதான காலத்தில், இருப்பின் மீதான நம்பிக்கையையும், வாழ்வின் மீதான ..டுபாட்டையும் பரஸ்பர உறவு ஊடாட்டங்களையும் சுதந்திரமாக செயற்படுத்த முடியுமாயின் அதைநோக்கிய நகர்வு பெண்களிடம் இருக்கும். அதுவே சமாதானத்தின் மீதான பற்றுதலை பெண்களுக்கு கொடுக்கும். இதேவேளை போராளிகளாக இருக்கின்ற பெண்கள் சமாதானத்திற்காக ஏற்படுத்தப்படுகின்ற சகல நடவடிக்கைகளிலும் ..டுபடுத்தப்படவேண்டும். அதன்போதுதான், போர்க்களத்தில் இயங்கிய பெண்கள் சமாதான தளத்தில் இயங்குவதன் மூலம் தம் இயங்குநிலையின் தொடர்ச்சியை பேணிக் கொள்ள முடியும். இதன் மூலம் பெண்கள் பெற்றிருக்கின்ற மாற்றங்கள் தமிழ் பெண்களுக்கே உரியதாக கட்டமைக்கவும் முடியும். அதாவது பொது வேலைத்தளத்தில் போரின்போது இவர்கள் எவ்வாறு இயங்கினார்களோ அதேபோல் சமாதானத்தின் போதும் இயங்கவேண்டும். மிக இலகுவாக இப்படி விளங்கிக் கொள்ளலாம். அதாவது போரின்போது எப்படி போராளிகளாக இயங்கினார்களோ, அதேபோல் சமாதானத்தின்போது சமாதானத்தை கட்டமைக்கும், அல்லது வழிநடத்தும் வலுவுள்ள பங்காளிகளில் இவர்களும் அடங்கவேண்டும். போரின்போது போராளிகளாக இருந்தவர்கள் சமாதானத்தின்போதும் போராளிகளாகவே இருப்பார்களானால் இவர்களது இயங்குதளம் மட்டுப்படுத்தப்படுவதுடன் பெருமாற்றத்தை பெற்றிருக்கின்ற இந்த தமிழ்ச் சமூகம் அந்தமாற்றத்தை கட்டமைக்க முடியாமல் சிதைந்து பலவீனப்படும் நிலை உருவாகும். அந்த பலவீன நிலையை பயன்படுத்த ஆதிக்க சக்திகள் எந்நேரமும் தயாராகவே உள்ளன.



எனவே சமாதானத்தை ஏற்படுத்தும் போது பெண்கள் பற்றிய அக்கறையை உறுதிப்படுத்துகின்றபோது பெண்களுக்கும் அதுபற்றிய சிந்தனையும், தேவையும் அதை நோக்கி அவர்களை நகரவைக்கும். போரில் எந்தளவிற்கு பெண்கள் பாதிப்பும், ..டுபாடும் கொண்டிருக்கிறார்களோ அந்தளவிற்கு சமாதானத்தை அவர்கள் அனுபவிக்கவும் சமாதானத்தில் அவர்களை ..டுபடுத்தவும் வேண்டும்.

# எமது குரலை எழுப்புவதற்கு கடினமாகப் பாடுபட வேண்டியுள்ளது...



## பொது விவகாரங்களுக்கான ஈராக்கிய அமைச்சர் நஸ்ரீன் முஸ்தபா சித்தீக் உடனான நேர்முகம்.

(நஸ்ரீன் சித்தீக் – புதிய ஈராக்கிய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள ஒரேயொரு பெண் அமைச்சர், 14 வயதில் ஈராக்கின் பாத் அரசாங்கத்தின் அரசியற் கைதியாக இருந்தவர் குர்திஷ் பிராந்திய அரசாங்கத்தில் மீள் கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைச்சராக முன்னர் பணியாற்றியவர். நஸ்ரீன் சித்தீக் Bitter lemons - International இனால் நேர்முகம் காணப்பட்டார்)

**உங்களுடைய சமூகத்தில் பாரம்பரியமாக பெண்கள் எவ்வாறான அரசியற் பாத்திரத்தை வகித்திருக்கின்றார்கள்?**

சித்தீக் : முதலாம் உலகப் போருக்குப் பின்னர் மீள் கட்டியமைக்கப்பட்டதிலிருந்து ஈராக் இன்னும் இயல்பு நிலைக்கு வரவில்லை. குறிப்பிடத்தக்க ஸ்திரமற்ற தன்மை இன்னும் தொடர்கின்றது. ஈராக் இப்போது இருப்பதை விட, 60களில் சமூக, கலாசார அறிவு ரீதியில் மிகுந்த முன்னேற்றமானதாக இருந்தது. தற்போது பதவி கவிழ்க்கப்பட்டுள்ள அரசாங்கம் அன்று ஆட்சிக்கு வந்த போது நிலைமை மேலும் மோசமடைந்தது. கடந்த 30 வருடங்களில் முன்னைய அரசாங்கத்தின் கீழான ஈராக்கிய சமூகத்தில் பெண்களது

பங்கு துஷ்பிரயோகம் செய்யப்பட்டது. பெண்கள் பயன்படுத்தப்பட்டனர். அரசியல் ரீதியாக அவர்களுக்கு இடம் வழங்கப்பட்டபோதும், ஈராக்கிய பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குரிய சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதும் கூட அவர்கள் முன்னைய அரசாங்கத்தின் செல்வாக்கிற்கு அதிகளவில் உட்பட்டிருந்தனர்.

1991ம் ஆண்டு இரண்டாவது வளைகுடாப் போரின் பின்னர், ஈராக்கின் ஏனைய பகுதிகளிலிருந்து ஈராக்கிய குர்திஸ்தான் பிரிக்கப்பட்டது முதல், அது வித்தியாசமாக அபிவிருத்தியடைந்தது. பெண்கள் அரசியலில் பங்கெடுப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்கிய சர்வதேச சமூகத்தால் ஒரு சமூகசூழல் உருவாக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டது. குர்திஷ் சமூகத்தில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்திலும் ஜனநாயகத்திற்கான போராட்டத்திலும் பெண்கள் பங்கெடுத்தனர். பாராளுமன்றத்திலும், அரசாங்கத்திலும் கல்வித்துறையிலும், சிவில் சமூகத்திலும், அரசசார்பற்ற நிறுவனங்களிலும் அங்கு பெண்கள் மிகச் சிறப்பாக பங்கெடுத்துவருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. அவர்கள் கொள்கைகளில் பாதிப்பை ஏற்படுத்த முயல்கின்றனர். ஆனால் அவ்வாறான பெண்களது பங்கெடுப்பு மிகவும் குறைந்த வீதத்திலேயே இருக்கின்றது. பெண்களது பிரதிநிதித்துவம் 3 சதவீதமாகத்தான் இருக்கின்றது. அரசியல் ஸ்திர நிலையுடன் சுயபாதுகாப்பும் பேணப்படுவது எமக்குத் தேவையாக உள்ளது.

சில பெண்களது அனுபவங்களை நோக்கும் போது (உதாரணமாக பாலஸ்தீனத்திலும் அல்ஜீரியாவிலும்), தேசிய இயக்கங்களில் அவர்கள் குறிப்பிடத்தக்கதான பாத்திரத்தை வகித்துள்ளனர். ஆனால் அரசாங்கம் ஒன்று உருவாகும் போது, அவர்களது செயற்பாடு குறைந்து போகிறது. ஈராக் அதிலிருந்து வித்தியாசமாக இருக்கும் என்று நீங்கள் கருதுவது போல் தெரிகிறது.

சித்தீக் : ஒரு வாய்ப்பு இருக்கிறது என்றே தான் கருதுகிறேன். பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதற்காக எமது குரலை ஒலிக்கச் செய்வதற்கு நாம் போராட வேண்டியிருக்கின்றது என்பது வெளிப்படை. வாய்ப்பு எமக்கு தட்டில் வைத்துக் கொடுக்கப்படமாட்டாது. ஆனால் ஈராக்கிய அரசியல் கட்சிகளுக்குள்ளும், கூட்டுப்படையின் இடைக்கால நிர்வாக ஆட்சியிலும், அமெரிக்காவிலும், பெண்கள் அரசியலில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்பதில் போதிய விழிப்புணர்வு இருக்கிறது. பெண்கள் அதிகளவில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும் என்று ஈராக்கில் பெண்கள் அமைப்புகளிடமிருந்தும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றது.

> "பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்தப் படுவதற்காக எமது குரலை ஒலிக்கச் செய்வதற்கு நாம் போராட வேண்டியிருக்கின்றது என்பது வெளிப்படை. வாய்ப்பு எமக்கு தட்டில் வைத்துக் கொடுக்கப்பட மாட்டாது"

இந்த விடயத்தில் மதம் எவ்வாறு தொடர்புபடுகிறது?

சித்தீக் : ஈராக் ஒரு பழமைவாத பாரம்பரிய சமூகம். ஆயினும் அது எப்போது ஒரு மதசார்பற்ற சமூகமாகவே இருந்து வந்துள்ளது. அரசியலமைப்பை மதம் கட்டுப்படுத்துவதற்கு அனுமதிக்காத பல்லின, பல்சமயத் தன்மை காரணமாக சமூகத்திற்குள் போதியளவு அழுத்தம் இருக்கின்றது. அரசாங்கம் பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்டதன் பின்னர், மதத்தன்மையுடைய இயக்கங்கள் புதிய ஈராக்கில் செயற்படக் கூடியவையாக மாறிவருகின்றன. புதிய நூற்றுக் கணக்கான அரசியற் கட்சிகள் உருவாகி வருகின்றன. அவை ஒவ்வொன்றும் தமக்குரிய அரசியல் குறிக்கோளைக் கொண்டுள்ளன. மதம் எவ்வளவு தூரம் ஈராக்கின் எதிர்காலத்தைப் பாதிப்படையச் செய்யும் என்பது ஒரு ஈராக்கிய பிரச்சினையாக இருக்கும்.

அரசாங்கத்தின் மதச்சார்பற்ற முறை ஒன்றுக்காகவும் அரசாங்கத்தினதும் மதத்தினதும் பிரிவிற்காகவும் குர்திஷ் மக்கள் எப்போதும்

கோரிக்கை விடுத்து வருகின்றனர். மதச்சார்பின்மையை பேணுவதற்கு ஈராக்கிற்கான புதிய அரசியலமைப்பை எழுதுவதற்கான போராட்டம் குறிப்பிடத்தக்கதொன்றாக இருக்கும். ஆனால் தீவிரவாத மதமுறை ஒன்று உருவாகுவதிலிருந்து எவ்வாறு நாம் எமது சமூகத்தைப் பாதுகாக்க முடியும்? இதற்காகத்தான் நாம் அனைவரும் பாடுபட வேண்டியுள்ளது. இப்போது சுயபாதுகாப்பும், ஸ்திரத்தன்மையும் குறைவாக உள்ள நிலையில், தீவிரவாதம் இதற்கான கவர்ச்சிகரமான ஒரு தீர்வாக இருக்கின்றது. ஈராக்கின் அரசியற் கட்டமைப்பின் அபிவிருத்தியிலும், மதச்சார்பற்ற அரசியலமைப்பை உருவாக்குவதிலும், பொருளாதார அபிவிருத்தியிலும் சாத்தியமான விரைவில் முதலிடவேண்டிய தேவை இருக்கின்றது. ஏனெனில் அதுதான் எமது சமூகத்தைப் பாதுகாக்கும்.

உங்களையொத்த ஆண் அமைச்சர்களைவிட நீங்கள் வித்தியாசமாக செயற்படுவதாக உணர்கிறீர்களா?

சித்தீக் : நான் ஒரு நுட்பமான தன்மையுடைய அமைச்சொன்றிற்கு பொறுப்பாக இருப்பதால், நான் உண்மையில் தொழில் ரீதியாகவே விடயங்களைக் கையாள்கிறேன். கல்வி, நீர்விநியோகம், தெருக்கள் போன்ற சமூகங்களது சுய தேவையை பூர்த்தி செய்வதற்கான நீடித்த ஏற்பாடுகளைச் செய்வதே எனது வேலையாக இருக்கின்றது. என்னால் பெண்கள், சிறுவர்கள் பற்றியும், ஒரு நிறுவனமாக குடும்பத்தை எவ்வாறு எனது வேலை பாதிக்கின்றது என்பது பற்றியும் சிந்திப்பதை தவிர்க்க முடியாது. அத்தோடு ஒரு பெண்ணாக பெண்களது தேவைகள் தொடர்பான உணர்வு எனக்கிருக்கின்றது. எனது பெண் ஊழியர்கள் மீதான தாக்கமாக அது இருக்கின்றது. எனது தற்போதைய நிலையின் துணை உற்பத்திகளாக நான் அவர்களை ஊக்குவிக்கிறேன். நிச்சயமாக, சமூகத்திற்காக நான் ஏற்படுத்தும் முழுமையானதொரு உதாரணம் அதில் இருக்கின்றது.

> "அனைத்து விடயங்களிலும் பெண்களைப் பாதுகாக்கின்ற அரசியலமைப்பை எவ்வாறு எம்மால் உருவாக்க முடியும்? ஒரு திட்டமாக, அனைத்து பிரிவுகளிலும் பெண்களது விடயங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தச் செய்வது. இருக்கின்றது. அல்லது இன்னொரு திட்டமாக பெண்களுக்கான தனியான அமைச்சை உருவாக்குவது இருக்கின்றது. நான் இரண்டையும் தேவை என்று கருதுகிறேன்"

ஏனைய மத்திய கிழக்கு சமூகங்களில் உள்ள பெண்களுடன் தொடர்புகளைக் கொண்டும், அவர்களுடன் அரசியல் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுக் கொண்டும் இருக்கிறீர்களா?

சித்தீக் : துரதிருஷ்டவசமாக இல்லை. எனது நாடு தனிமைப்படுத்தப்பட்டதாக இருப்பதால் (அதனால் நாம் இன்னமும் துன்பப்படுகிறோம்), நான் அவர்களுடன் ஆழமான உறவுகளை வளர்த்துக் கொள்ளவில்லை. பெண்கள் தமக்கிடையில் ஒருவரிடமிருந்து ஒருவர் அறிந்து கொள்வதற்கு அதிகமிருக்கின்றது என்று நான் கருதுகிறேன் ஆனால் நான் சென்ற சில வெளிநாடுகளைப் பார்க்கும் போது உலகம் முழுவதும் பெண்கள் ஒரேமாதிரியான பிரச்சினைகளை எதிர்கொள்வது போல் தெரிகிறது. தமது குரலை ஒலிக்கச் செய்வதற்கும், ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அவர்கள் அனைவரும் பாடுபட வேண்டியிருக்கின்றது. இது இலகுவான காரியமல்ல. இதற்கு இன்னமும் அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் கூட, எதிர்ப்பு இருக்கின்றது. நாம் செய்யக்கூடிய நல்ல விடயம் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருப்பதே என்று நான் கருதுகிறேன்.

இந்தப் பிராந்தியத்தை மாற்றுவதற்கு அமெரிக்கா முயற்சிப்பது போல் தெரிகிறது. அதன் நோக்கங்களில் நிச்சயமாக பெண்களது உரிமைகளும் ஒன்றாக இருக்கின்றது. இந்த வெளிப்பங்கை முக்கியமான ஒன்றாக நீங்கள் கருதுகிறீர்களா?

சித்தீக் : சமுதாய மாற்றத்தையும், சமூகத்தின் அங்கத்தவர்களான பெண்கள், ஆண்கள், இளைஞர்கள் என்போரை நோக்கும் ஒரு முறையையும் உள்ளடக்காமல் ஈராக்கின் மாற்றம் இருந்தால் அது நடைபெற முடியாது. நாம் ஒரே மக்களாக மாறினால் மட்டுமே ஈராக்கின் மாற்றம் வெற்றிகரமாக இருக்கும். அத்தொடு பெண்களது பாத்திரத்தை சமூகம் நோக்கும் முறையும் அதில் அடங்குகிறது.

இன்று ஈராக்கிலுள்ள பெண்கள் சனத்தொகையில் 55 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். கல்விநிலை, அரசியல் நிலை மற்றும் சமூக விழிப்புணர்வு உயர்வாக இருக்கின்றது. சமூகத்தின் இந்த 55 சதவீதமானோரைப் புறந்தள்ளிவிட்டு உங்களால் முன்னேறமுடியாது. ஏனெனில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக பெண்களே பலிப்பொருட்களாக இருக்கின்றனர். அவர்களே பயன்படுத்தப்பட்டனர். துஷ்பிரயோகம் செய்யப்பட்டனர். போரிலும் மரண தண்டனைகளாலும் தமது கணவன்மாரை, சகோதரரை, தந்தைமாரை இழந்து துன்பப்பட்டனர்.

அனைத்து விடயங்களிலும் பெண்களைப் பாதுகாக்கின்ற அரசியலமைப்பை எவ்வாறு எம்மால் உருவாக்க முடியும்? ஒரு திட்டமாக, அனைத்து பிரிவுகளிலும் பெண்களது விடயங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தச் செய்வது. இருக்கின்றது. அல்லது இன்னொரு திட்டமாக பெண்களுக்கான தனியான அமைச்சை உருவாக்குவது இருக்கின்றது. நான் இரண்டையும் தேவை என்று கருதுகிறேன். ஒன்று மற்றதிலிருந்து விலகியதல்ல. பெண்களுக்கான தனியான அமைச்சு இருப்பது பெண்களது பிரச்சினைகளை வெளிப்படுத்தக்கூடும். ஆனால் அது போதுமானதல்ல. அனைத்து பிரிவுகளிலும் பெண்கள் பற்றிய உணர்வு எமக்கு இருக்க வேண்டும். அத்தோடு பெண்களது பிரச்சினைகளை விரிவாக ஆராய்வதற்கு ஒவ்வொரு பிரிவிலும் ஒரு செயற்குழு இருக்க வேண்டும்.


எதிர்காலம் குறித்து நீங்கள் நம்பிக்கையுடையவராக இருக்கிறீர்களா அல்லது அது குறித்து கவலைப்படுகிறீர்களா?

சித்தீக் : நாங்கள் நம்பிக்கையை வைத்திருக்க வேண்டும். பாத் அரசின் வீழ்ச்சியை நாம் கண்ட கணம் எமது எதிர்பார்ப்பின் கணமாக இருந்தது. அது எம்மைப் பிரகாசமான எதிர்காலம் குறித்து கனவுகாண அனுமதித்தது. அன்று முதல் ஈராக்கில் இடம்பெறும் தொடர்ச்சியான அழிவை ஏற்படுத்துகின்ற பயங்கரவாத செயற்பாடுகள் எம்மை கவலையடையச் செய்து வருகின்றன. ஆனால் அரைமில்லியன் மக்களை இடம்பெயரச் செய்ததிலிருந்து தொடங்கி, குர்திஷ் பிராந்தியத்தின் 90 சதவீதமான உட்கட்டமைப்பை அழித்தது, 200,000 ஆண்களைக் கொன்றது உட்பட ஒரு சர்வாதிகார அரசு தனது மக்களுக்கு செய்யக்கூடிய மோசமான நடவடிக்கைகள் அனைத்தையும் அனுபவித்த இனக்குழுவிலிருந்து வந்த நாள் அந்தப் பாத் அரசு அகற்றப்பட்டதன் பின்னர் நிலைமைகள் எதிர்காலத்தில் ஒன்றாக மாற்றமடையும் என்றே எதிர்பார்க்கிறேன். எவ்வாறாயினும், ஈராக்கிய சமூகத்தின் அனைத்து சிக்கல்கள் மத்தியில் புதிய ஈராக்கை மீள் கட்டியமைப்பது ஒரு பெரும் சவாலே. முன்னைய ஆட்சியில் பிரிக்கப்பட்டிருந்த சமூகத்திலுள்ள பல்வேறு இனக்குழுக்களுக்கிடையில் ஒரு ஆறுதல் தரக்கூடிய செயற்பாடு இடம்பெற வேண்டியது அவசியம். அமெரிக்கர்களிடமும் பிரிட்டிஷாரிடமும் மட்டும் மீள் கட்டமைப்பிற்கான பொறுப்பை நாம் விட்டுவிட முடியாது. அயற் பிராந்திய வல்லரசுகளும் ஒரு நல்ல பங்கை வகிக்க முடியும் என்றே நான் கருதுகிறேன். இதில் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு பெரும் வாய்ப்பு இருக்கின்றது. பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுதல், சமத்துவமான சமூகத்தை உருவாக்குதல் மற்றும் சமூக, பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துதல் என்ற நோக்கங்களுக்காக நாம் ஒன்றாக செயலாற்றி வருகின்றோம். இதனுடாக மட்டுமே நாம் மத்திய கிழக்கின் அறிவின்மைக்கும் ஜனநாயகக் குறைவிற்கும் எதிராக போராட முடியும்.

நன்றி : அரசியலில் பெண்கள் – வெப்தள ஆங்கில இதழ்

# பயணமோ நீண்டது. இன்னமும் முதல் அடி வைத்த நிலையில்......

-சிரால் லக்திலக-



இலங்கையின் தற்போதைய சமாதானச் செயல்முறை, அதில் பெண்களின் பங்கேற்பு மற்றும் சர்வதேச அனுபவம் என்பவை குறித்துக் கலந்துரையாடுவதற்கு முன்னர் சமாதானச் செயல்முறையென்றால் என்ன என்பது குறித்தும், இலங்கையின் தற்போதைய சமாதானச் செயல்முறையின் கட்டம் குறித்தும் விளங்கிக் கொள்வது அவசியமாகும். சமாதானச் செயல்முறையை நாம் மூன்று பிரிவுகளாக இனங்காணலாம். நேரடியான சமாதானப் பேச்சுவார்த்தை, சமாதானத்தைத் தொடர்ந்து பேணுதல் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்பவையே அவையாகும்.

இவ்வாறு நோக்குகையில் தற்பொதைய அரசாங்கம் மூன்று உத்திகளினுடாக மேற்கூறிய மூன்று பிரிவான சமாதானச் செயல்முறையில் பிரவேசித்துள்ளது. சர்வதேச ஒத்துழைப்பின் மூலம் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் இதுவரை நிலவிய யுத்தச் சூழலுக்கு முடிவுகட்டி, சமாதானத்தை நிலை நிறுத்தும் எதிர்பார்ப்பைக் கொண்டதாகும்.

இரண்டாவதாக, சர்வதேச ஒத்துழைப்புடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருகின்றன. மூன்றாவதாக, நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளன.

எப்படியாயினும், இதுவரை எம்மால் முடிந்தது போர் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் சமாதானத்தைப் பேணுவது மாத்திரமே.

"ஆண் ஆதிக்க அரசியல் மூலம் உருவாகியுள்ள சிவில் யுத்தம் உறவினர்களின் மரணம், அங்கவீனம், இடப்பெயர்வு, பொருளாதார இன்னல்கள், யுத்தம் முடிந்த பின்னர் தனியாகக் குடும்ப வருமானத்தைத் தேடும் சுமைகள் உயிர்வாழும் வரை பொருளாதார மற்றும் சமூகச் சிக்கல்கள் என்பவற்றை பெருமளவுக்கு எதிர்நோக்கி நிற்போர் பெண்களேயாவர்"

சமாதானச் செயல்முறையில் நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலம் நிலைபேறான, நிரந்தரத் தீர்வொன்றை எட்டுவதும், அதற்காகச் சமூகத்தின் பங்களிப்போடு சமாதானத்தைக் கட்டியெழுப்பும் வகையில் மேலும் நீண்டகால நடவடிக்கைகள் பலவற்றை எடுப்பதும் செய்யப்படவேண்டிய கருமங்களாக எஞ்சியுள்ளன.

இந்தவகையில் நோக்குகையில் இன்று நாம் அனுபவிப்பது நிலைபேறான சமாதானம் அல்ல என்பதும், வெறுமனே யுத்தமல்லாத ஒரு சூழல் என்பதும் தெளிவாகும். இந்த பலவீனமான சமாதானத்தை ஆக்கபூர்வமான சமாதானமாக நிலைமாற்றம் செய்வதற்கு அரசாங்கமும், சிவில் சமூகமும் பாரிய பொறுப்பைக் கொண்டுள்ளன. ஆக்கபூர்வமான சமாதானமென்பது இருதரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய, நியாயம் நீதி, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்கள் உள்ளடங்கிய சமாதானமாகும்.

சமாதானச் செயல்முறையை நாம் மூன்று பிரிவுகளாக இனங்காணலாம். நேரடிச் சமாதானப் பேச்சுவார்த்தை, சமாதானத்தைத் தொடர்ந்து பேணுதல் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்பவையே அவையாகும்.

இவை அரசாங்கத்தினால் பேச்சுவார்த்தைகள் மூலம் எட்டப்படும் இறுதித் தீர்வினுள் உள்ளடக்கம் பெறுதல் வேண்டும். ஆயினும் இதுவரை உலகில் ஏற்பட்ட சமாதானச் செயல்முறைகளையும், எட்டப்பட்ட இறுதித் தீர்வுகளையும் பார்க்கும் போது அதை அரசாங்கம் மாத்திரம் நிறைவேற்ற முடியாதென்பது தெளிவாகும். இதில் சிவில் சமூகத்தின் பிரிவினரும் துடிப்பான பங்கேற்பை வழங்கியுள்ளனர். சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயல்முறையென்று நாம் அழைப்பது இதையேயாகும். சமாதானச் செயல்முறையை மக்கள் தமதென்று எண்ணுவது இச் செயற்பாட்டின் மூலமேயாகும்.

இது சம்பந்தமான சர்வதேச அனுபவத்தை நோக்குமுன்னர் பெண்கள் இச்செயல்முறையின் பங்குதாரர்களாவது எவ்வாறென்பதைச் சிந்திக்க வேண்டும். நிலைபேறான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதென்பது கட்டமைப்பு ரீதியான தீர்வொன்றைத் தேடுவது என்பதோடு, பழுதற்ற மனித உறவுகளை மீண்டும் கட்டியெழுப்பும் மீளிணக்கம் ஏற்படுவது என்பதுமாகும். (Reconciliation) அரசியல் மீளிணக்கம், சமூக மீளிணக்கம், உரிமைகளை மீறியோர் மற்றும் பாதிக்கப்பட்டோரிடையில் நல்லிணக்கம் என்பவை அவசியமாகும். உதாரணமாக, தென்னாபிரிக்காவில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) மற்றும் வெள்ளை இனத்தவரின் அரசாங்கத்துக்கிடையில் ஏற்பட்ட அரசியல் உடன்படிக்கை மற்றும் அதன் பின்னர் அமைக்கப்பட்ட உண்மை மற்றும் மீளிணக்க ஆணைக்குழு (Truth and reconciliation commission) என்பவை மூலம் நிகழ்ந்தவற்றைக் குறிப்பிடலாம்.

அரசியல் மீளிணக்கத்தை ஏற்படுத்துவது இலகுவானதென்றபோதிலும், பிளவுள்ள இரு சமூகங்களுக்கிடையிலும் மீளிணக்கத்தை ஏற்படுத்துவதும் உரிமைகளை மீறியோர் மற்றும் பலியானோரிடையில் மீளிணக்கத்தை ஏற்படுத்துவதும் அத்தனை சுலபமான காரியமல்ல.

எப்படியாயினும், இதைச் செய்ய முடியாவிடில் தற்போதுள்ள சமாதானத்தை நிலைபேறுள்ள சமாதானமாக மாற்றுவது இயலாத காரியமாகும். இதனால்தான் சமாதானச் செயல்முறையில் பெண்களின் தலையீடு தீர்மானகரமான ஒன்றாகின்றது. பெண்கள் யுத்தத்தின் விளைவுகளோடு நேரடியாகச் சம்பந்தமுற்றிருப்பதால் சமாதானச் செயல்முறையைக் கட்டியெழுப்புவதில் அவர்களின் பங்கு தீர்மானகரமான முக்கியத்துவம் பெறுகின்றது. இதை உறுதி செய்வதற்கான

தரவுகள் ஏராளம் எம்மிடத்தில் உள்ளன. யுத்தத்தினால் அகதிகளானோர் குறித்த புள்ளிவிபரங்களில் ஆண், பெண் வித்தியாசங்கள் இல்லையென்ற போதிலும், இந்த அகதிகளில் 60 – 70 சதவீதமானோர் பெண்களென்றும் தெரிவிக்கப்படுகின்றது. அரசாங்க அறிக்கைகளின்படி 1996 டிசம்பரில் அகதிகளின் எண்ணிக்கை 7,68,356 ஆகும். INFORM அமைப்பின் ஆகஸ்ட் மாத அறிக்கையின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் விதவைகள் 18,000 பேர் உள்ளனர்.

தனிநபர் வருமானம் பெறும் குடும்ப அலகுகளின் எண்ணிக்கை வளர்ச்சி வீதத்துக்கு ஏற்பவே நாம் இந்த நிலையை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். 1994இல் அறிக்கையிடப்பட்டதன் பிரகாரம் அந்த வருடத்தில் பெண்களில் 21 வீதமானோர் தனிவருமானம் பெற்றுத் தமது குடும்பங்களைக் காப்பாற்றுவோராக இனங்காணப்பட்டுள்ளனர். இந்த விகிதாசாரம் 1981ல் 16 வீதமாகும். அப்படியாயின், ஒரு தசாப்த காலத்துக்கும் சற்றுக் கூடுதலான காலப்பகுதியில் இந்த விகிதாசாரம் 5 வீதமாக அதிகரித்திருப்பது வேறு காரணங்களோடு இலங்கையின் சிவில் யுத்தம் காரணமாகவும் ஆகுமென்பதை தம்மால் குறைத்து மதிப்பிட முடியாது.

அவ்வாறே உத்தியோகபூர்வமற்ற முறையில் நோக்குகையில் கடந்த 20 வருட காலத்தினுள் தெற்கில் 164,000 பேர் மரணமடைந்துள்ளனர் என்றும் 84,000 பேர் அங்கவீனமுற்றுள்ளனரென்றும் அறிக்கையிடப்படுகின்றது. யுத்தம் காரணமாகப் பெருமளவுக்கு இன்னல்கள், துயரங்களுக்கு ஆளாகியோர் பெண்கள் என்பதை இப்புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ஆண் ஆதிக்க அரசியல் மூலம் உருவாகியுள்ள சிவில் யுத்தம் உறவினர்களின் மரணம், அங்கவீனம், இடப்பெயர்வு, பொருளாதார இன்னல்கள், யுத்தம் முடிந்த பின்னர் தனியாகக் குடும்ப வருமானத்தைக் தேடும் சுமைகள் உயிர்வாழும் வரை பொருளாதார மற்றும் சமூகச் சிக்கல்கள் என்பவற்றை பெருமளவுக்கு எதிர்நோக்கி நிற்போர் பெண்களேயாவர்.

அப்படியாயின் இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான தீர்மானகரமான சூழலை எழுப்புவதற்கும் சமாதானத்தை ஏற்படுத்தும் வாழ்வாதாரமான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் உண்மையான சக்தி படைத்தவர்கள் பெண்களேயாவர்.

எமது யுகத்தின் இன்றைய் சவால் நவீன இலங்கை அரசைக் கட்டியெழுப்புவதும், அதனிடாகப் பெண்களின் பங்களிப்பை சரியான முறையில் பெற்றுக் கொள்வதுமாகும்.

இது இலங்கைப் பெண்களுக்கு மட்டுமல்லாது, உலகப் பெண்கள் அனைவருக்குமே பொதுவான குணாம்சமாகவுள்ளது.

இதனால் உலகில் நிகழும் பல்வேறு சிவில் யுத்தங்களை முடிவுறுத்தும் நோக்கில் தென்னாபிரிக்காவிலும், வட அயர்லாந்திலும், எல் – சல்வடோரிலும் பெண்கள் முன்னணிக்கு வந்துள்ளனர். வட அயர்லாந்தில் பெண்கள் சமூக மீளிணக்கம் உரிமை மீறல்களில் -டுபட்டோர் மற்றும் பலியானோர் இடையிலான மீளிணக்கம் என்பவற்றுக்காக மட்டுமன்றி, அரசியல் மீளிணக்கத்துக்காகவும் முன்வந்தனர். இதற்காக அவர்கள் 1995இல் ஓர் அரசியல் கட்சியாக ஒன்றிணைந்தது மட்டுமன்றி, வட அயர்லாந்து பாராளுமன்றத்துக்குத் தமது பிரதிநிதி ஒருவரையும் தெரிவு செய்து அனுப்பினார் அவர்கள் ஆண் ஆதிக்க அரசியல் மூலம் உருவாகும் சிந்தனையற்ற அரசியல்வாத நிலைப்பாடுகளிடையே பேச்சுவார்த்தைகளில் பேரம் பேசுகையில் எதிரித்தரப்பினர் இருவருக்குமே அழுத்தங்களைப் பிரயோகிப்பதன் மூலம் யுத்தத்தின் தீய விளைவுகளை எடுத்துக் காட்டி, அதி தீவிர நிலைப்பாடுகளைத் தவிர்த்து உடனடித் தேவைகளினடைப்படையில் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு தலையீடு செய்தது மாத்திரமன்றி அது சம்பந்தமான விசாலமான சமூக இயக்கத்தையும் கட்டியெழுப்பினர்.

தென்னாபிரிக்காவின் ANC பெண்கள் இவ்வாறான அழுத்தங்களைப் பிரயோகித்து, பெண்களின் உரிமைகள் உள்ளடங்கிய அரசியலமைப்புக் கோட்பாடுகளை தென்னாபிரிக்காவின் அரசியலமைப்பில் சேர்த்துக் கொள்வதில் வெற்றி கண்டனர்.

எல் – சல்வடோரின் பெண்களும் அவ்வாறே செயற்பட்டு எட்டப்படும் உடன்பாட்டினுள் தமது பொருளாதாரத்தேவைகளை உள்ளடக்குவதிலும் வெற்றி கண்டுள்ளனர்.

அப்படியாயின், இலங்கைப் பெண்களும் இதே வழியில் செல்வதற்கு சர்வதேச அறிவுமட்டத்தில் குறைபாடோ, தமது நாட்டில் யதார்த்த நிலைமைகளில் வேறுபாடுகளோ கிடையாது எமது யுகத்தின் இன்றைய சவால் நவீன இலங்கை அரசைக் கட்டியெழுப்புவதும், அதனுடாகப் பெண்களின் பங்களிப்பைச் சரியான முறையில் பெற்றுக் கொள்வதுமாகும்.

நன்றி : சாம விமர்சி

# சுடுகாட்டுச் சாம்பலிலிருந்து மீண்டும் உயிர்பெற்றெழுதல்



## கௌதமாலா விதவைகள் தேசிய சங்கம் அமைப்பாளர் ரொஜலினா டூயூக்கின் நேர்முகம்

"1982 ஜுன் மாதம் ஓர் இரவில் வந்த கௌதமாலா இராணுவம் அவளின் தந்தையைக் கொண்டு சென்றனர். அவரின் உடலை ஒப்படைக்காத இராணுவபலம் பின்னர் அவர் மரணமுற்றார் என்று அறிவித்தனர். 1985 மே மாதம் நடு இரவொன்றில் வந்த அவர்கள் கிராமத் தலைவராகிய அவளின் கணவரையும் கொண்டு சென்றனர். ஆயினும் 43 வயதான கக்விகுவல் மாயன் இந்திய இனத்தைச் சேர்ந்த ரொஜலினா டூயூக் தைரியத்தை இழக்கவில்லை. அவள் 1988இல் கௌதமாலா விதவைகள் தேசிய சங்கத்தை (கொனட்டிகுவா) நிறுவினார். இச் சங்கத்தின் 15000 அங்கத்தினர்கள் யுத்தத்தில் பலியானோரை மறக்காது நினைவு கூரும் முகமாக இன்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ரொஜலினா 1995இல் இடதுசாரிக் கட்சிக் கூட்டு அரசாங்கத்தின் பிரதிநிதியாக பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். கௌதமாலா ஊடகவியலாளர் மெட்ரிகோ அவரை நேர்முகம் கண்டபோது பின்வரும் வினாக்களுக்கு விடையளித்தார்."

தான் நேசித்த ஒருவரை இழந்துவிட்ட ஒரு நபரின் துன்பம் காலத்தால் இல்லாமல் போய்விடக் கூடியதா?

இல்லை. அதனால் ஒரு போதும் அமைதி ஏற்பட்டுவிட முடியாது. என் பிள்ளைகள் தமது தந்தைக்கு என்ன நடந்ததென்றும், அவர் வீட்டுக்குத் திரும்பி வருவாரா என்றும் இன்னமும் என்னிடம் கேட்கின்றனர். காணாமற் போனவர்களின் உறவினர்களாகிய நாம் எமது அன்புக்குரியவர்கள் திரும்பி வருவார்களென்று காத்திருக்கின்றோம். ஆயினும் அவர்கள் உயிரோடு இருக்கின்றார்களா அல்லது இறந்து விட்டார்களா என்பதை நாம் அறிந்து கொள்ள முடியாது. அநீதியும், அநியாயமும் இடம்பெற்றுள்ளனவென்று இப்போது அரசாங்கம் ஏற்றுக்கொள்வதால் இறந்து போன தமது உறவினர்களை புதைத்த இடத்தை எமக்குக் காண்பிப்பது அரசாங்கத்தின் தார்மீகப் பொறுப்பாகும். அவர்களில் பலர் இராணுவத் தலைமை தளங்களில் மரணித்துள்ளனர். அந்த இடம் எதுவென்று ஐக்கியத்தின் பெயரால் இராணுவம் தெரிவிக்க வேண்டும். பலருக்குத்

தேவைப்படுவதெல்லாம் தமது வாழ்க்கைத் துணைவரை அல்லது பிள்ளைகளை கிறிஸ்தவ முறையில் அடக்கம் செய்வதாகும்.

1996ல் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் வரலாற்றுப் புகழ்மிக்க தெளிவுபடுத்தல் ஆணைக்குழுவின் அறிக்கை 1999 பெப்ரவரியில் வெளியிடப்பட்ட நிலையில் கொனட்டிகுவா அமைப்பின் நோக்கங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா?

அடக்குமுறையின் பரிமாணம் சம்பந்தமாக நாம் தெரிவித்தவை உண்மையென்பதை அறிக்கை ஊர்ஜிதம் செய்துள்ளது. நாம் இப்போழுது போராடுவது சமாதான உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தி இந்திய இனத்தவர்களின் உரிமைகளைப் பெறுவதற்காகும். ஆயினும் நாம் தொடர்ச்சியாக முயற்சி செய்வது யுத்தத்தில் பலியோனோருக்கு இழப்பீடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும், பாரிய மனிதப் புதைகுழிகள் உள்ள இடங்களை அறிவதற்கும், தண்டனை பெறாமல் தப்பிக் கொள்வதைத் தடுப்பதற்குமாகும்.

எத்தகைய இழப்பீடு?

மின்சாரம் வழங்குதல், பாடசாலைகள், பாலங்கள் அமைத்தல் போன்ற, குடிமக்களுக்கு இழப்பீடு வழங்கும் திட்டங்களை அரசாங்கம் செயற்படுத்தியபோதிலும், விதவைகளுக்கான கவனிப்பு எதுவும் இல்லாத நிலையே உள்ளது. உளவியல் ரீதியில் உதவிவழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களும் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்கள் மற்றும் பெயர் குறிப்பிடப்பட்ட மனிதப் புதைகுழிகளிலிருந்து உறவினர்களின் உடல்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் உதவி உள்ளிட்ட, பொங்களுக்கான தனிப்பட்ட நேரடி இழப்பீடுகளையும் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

தண்டனை பெறாமல் தப்பித்துக் கொள்வதற்கெதிராக ஏதாவது மேலதிக நடவடிக்கை எடுக்க முடியுமா?

அது குறித்துப் பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கெதிராகத் தொடர்ச்சியாக வழக்குகளை நடத்த வேண்டும். எமக்குப் பழிதீர்க்க வேண்டிய அவசியமில்லை. நீதி நிலைநாட்டப்படவேண்டுமென்பதே எமது கோரிக்கையாகும். இக்குற்றச்சாட்டுகளைச் சர்வதேச நீதிமன்றத்தின் முன் வைப்பதற்கு நாம் விரும்புகிறோம். இதற்குக் காரணம் கௌதமாலாவில் நீதியைப் பெற்றுக் கொள்வது மிகவும் கடினமாக இருப்பதாகும். வழக்குகளுக்குப் பெருமளவு பணம் செலவாகின்றது. வழக்குகள் முடிவடைவதற்குப் பல வருட காலம் தாமதமாகின்றது. அவை சம்பந்தமாகப் பெருமளவு நம்பிக்கை வைக்கவும் முடியாது ஆயினும் நாம் பட்டியலிட்டுள்ள 80,000 சம்பவங்களில் குறைந்தது ஒரு சிறு தொகையான விடயங்களையாவது நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

பலியானோரின் குடும்பங்களின் கோரிக்கைகளும் நிலைமாற்றச் செயல்முறையைப் பாதுகாக்கும் வகையில் நிவாரணம் வழங்கும் அரசியல் யதார்த்தத்துக்குமிடையில் இணக்கத்தை ஏற்படுத்துவது எவ்வாறு?

மன்னிப்பு வழங்குவது என்பதன் கருத்து மறந்து விடுவது என்பதல்ல. யாருக்கு மன்னிப்பு வழங்கப்படவேண்டுமென்பதை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். அனேகமான குடும்பங்களுக்குத் தமது உறவினர்களைக் கொலை செய்தவர்கள் யாரென்று தெரியாது. இவற்றுக்குப் பொறுப்பானவர்கள் யாரென்று எமக்குத் தீர்மானிக்க முடியாது போனால் கடந்த காலத்தில் நிகழ்ந்த விடயங்கள் மீண்டும் நிகழ்வதற்கு இடமுள்ளது. சில பிரிவுகளில் வன்செயல்கள் இடம்பெற்றனவென்ற பயம் எப்பொழுதும் நிலவுகின்றது. ஆயினும் நீதி நிலைநாட்டப்படும்வரை நாம் தவறுக்கு மன்னிப்பு வழங்க முடியாது.

சமாதான உடன்படிக்கை பலியானோர் சம்பந்தமாகக் கவனம் செலுத்துகின்றதா?

உடன்படிக்கையின் காரணமாக அரசாங்க மன்னிப்பு என்று நாம் கருதும் "சமத்துவ உடன்படிக்கைச் சட்டத்துக்கு" வழிசெய்தது. இன ஒழிப்பு, பலாத்காரமாகக் கடத்திச் செல்லுதல் மற்றும் ஏனைய வன்செயல்களுடன் அது தொடர்பற்ற ஒன்றாகும். இச்சட்டத்துக்கு எதிராக நாம் வாக்களித்தோம். அவ்வாறே வேறு ஏதாவது அரசாங்க மன்னிப்புக்கும் நாம் எதிர்ப்புத்தெரிவிக்கின்றோம். யுத்தம் குறித்த பொறுப்பு அளவு குறித்து மாறுபட்ட போதிலும் அது இராணுவத்திற்க்கும் கெரில்லாப் போராளிகளுக்குமிடையில் பகிரப்படவேண்டிய ஒன்றாகவுள்ளது. அவர்களின் தலைவர்கள் தம்மிடையே சமாதானத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பது பொதுவான நிகழ்ச்சியாகும். ஆயினும் கிராமங்களில் மீளிணக்கம் ஏற்படுவதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

நன்றி : சாம விமர்சி

> "மனிதன் வீண் தற்பெருமை கொள்பவன். அவன் தன்னைச் சுற்றிலும் தன் உருவத்தைக் காட்டும் கண்ணாடிகள் சூழ்ந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறான். மேலும் அக்கண்ணாடிகள் தன் உருவத்தை மிகவும் பெரிதாக்கிக்காட்டுபவையாக இருந்தால் எவ்வளவு நல்லதாக இருக்கும் என்று கருதுகிறான்"
>
> ஜூலியன் ஹக்ஸ்லீ

# சமாதானத்தில் பெண்கள் வகிக்கும் துணிச்சல் மிக்க பாத்திரம்.

-சுமிகா பெரேரா-




சமாதானச் செயல்முறையில் பெண்களின் பங்களிப்புக்குறித்துப் புதிதாக எதுவும் கூறவேண்டிய அவசியமில்லை. இந்த நாட்டில் சமாதானத்துக்காகத் துடிப்பான பங்களிப்பை வழங்கியோரும், வழங்கிக்கொண்டிருப்போருமாகிய பெண்களும், மகளிர் அமைப்புகளும் உள்ளனர். இவற்றுட் பல அமைப்புகள் 20 வருடங்களுக்கு முன்பிருந்தே சமாதானம் குறித்த பிரச்சாரங்களையும், செயற்பாடுகளையும் ஆரம்பித்தவையாகும். ஆயினும் இச்செயற்பாடுகள் தற்போதைய சமாதானச் செயல்முறையை வெற்றிகரமாக்குவதற்கு எவ்வளவு தூரம் பயன்படும் என்பது குறித்தும், அதைப் பலப்படுத்துவதற்கு உதவுமா என்பது குறித்தும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

இந்த நாட்டில் சுயாதீனமான பெண்கள் அமைப்புகள் ஆரம்பித்த எண்பதுகளிலிருந்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று அவசியமென்றும் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமென்றும் அவை கூறி வந்துள்ளன. 1982இல் இடம்பெற்ற பொலிடெக்ஸ் பெண் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் சம்பந்தமாக 15 பெண்கள் அமைப்புகள் ஏற்படுத்திய "பெண்கள் செயற்பாட்டுக் குழு" ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட 1983 மார்ச் 08ந் திகதி சர்வதேச பெண்கள் தினத்தில் முன்வைக்கப்பட்ட பிரதான கோரிக்கைகளுள் ஒன்று தமிழ்ப் பெண்களின் அடக்குமுறைக்காகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்பதாகும். அந்த நேரத்தில் சிறையிலிருந்த முதலாவது தமிழ்ப் பெண் கைதியாகிய நிர்மலா நித்தியானந்தன் விடுதலை செய்யப்படவேண்டுமென்றும் இப்பெண்கள் அமைப்புகள் கோரிக்கை விடுத்தன.

1983 கறுப்பு ஜூலைக்குப் பின்னர் இந்த நாட்டின் பெண்கள் அமைப்புகள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு அவசியமென்று மீண்டும், மீண்டும் வலியுறுத்தி வந்துள்ளன. அன்றிலிருந்து இன்றுவரை இலங்கை அரசியல் யாப்பில் சமாதானத்துக்கான பெண்கள் குரலை அவர்கள் பல்வேறு வழிகளில் பதிவு செய்து வந்துள்ளனர்.

1984இல் சர்வ கட்சி மாநாடு தோல்வியைத் தழுவிய பின்னர் அரசாங்கம் மீண்டும் யுத்தச் செயற்பாடுகளை ஆரம்பித்தபோது அதற்கு எதிராக இந்த நாட்டின் மகளிர் அமைப்புகள் பகிரங்கமாகக் குரல் எழுப்பின. அனேகமான மக்கள் அமைப்புகள் மௌனமாகவிருந்த காலகட்டத்தில் சமூகத்தில் மரியாதை மிக்க 300 பெண்களின் கையொப்பத்துடன் கூடிய சமாதானத்துக்கான வேண்டுகோள் ஒன்று செய்திப்பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. இந்த வேண்டுகோளினூடாக இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. பின்னர் இந்த வேண்டுகோள் சாதாரண மட்டத்திலுள்ள ஆயிரக்கணக்கான பெண்களின் கையெழுத்துகளுடன் ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் இம்முயற்சிக்குப் பங்களிப்பு நல்கிய அமைப்புகளும், தனி நபர்களும் ஒன்று சேர்ந்து "சமாதானத்துக்கான பெண்கள் இயக்கத்தை" நிறுவி செயற்பட்டு வந்தனர்.

எமது இயக்கம் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தவர்களைப் போன்றே, தென்னிலங்கையில் சிறைகளில் இருந்த வடக்கின் தமிழ் சகோதரிகள் விடயத்திலும் கவனம் செலுத்தியது. இது விடயத்தில் எமது மக்களுக்கு அறிவூட்டும் கருத்தரங்குகள் மற்றும் சுவரொட்டி இயக்கங்களில் ஈடுபட்டது. 1987இல் ஆரம்பித்த வன்செயல் அரசியல் யுகத்திலும் "சகல பக்கங்களிலும் இடம்பெறும் மனிதப்படுகொலைகளை நிறுத்த வேண்டும் என்றும் பகிரங்க அறிக்கையைத் தென்னிலங்கை மகளிர் விடுத்ததோடு தாய்மார் மற்றும் புதல்வியர் சங்கத்தையும் நிறுவினர்."

1990இல் சமாதானத்துக்கான சர்வமத தியான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து இதில் வடக்கு கிழக்கின் சகோதரிகளையும் பங்குபற்றச் செய்தனர். பெண்கள் இயக்கம் இந்த நாட்டில் வன்செயல் அரசியலை நிறுத்தவும், இன, மத, சாதி வேறுபாடுகளின்றி சமாதானச் சூழலைக் கட்டியெழுப்பவும் கோரிக்கை விடுத்து இயக்கத்தை முன்னேடுத்தது.1990க்குப் பின்னர் தீவிரமடைந்த யுத்தச் சூழலிலும் விதவைகள் அமைப்பை உருவாக்கி சமூக, அரசியல் உரையாடலில் அவர்களின் பிரச்சினைகளும் இடம்பெறுவதற்கு வழி அமைப்பதில் பெண்கள் இயக்கம் முன்னின்றது. விசேடமாக யுத்தத்தினால் பாதிப்புற்ற பெண்களின் பிரச்சினைகள், உணர்வுகள் மற்றும் கருத்துக்களையும் பிரதிபலிக்கும் பெண் இலக்கியத்தை உருவாக்குவதற்கும் அது துணிச்சலான முயற்சியை முன்னெடுத்தது.

யுத்தம் தீவிரமடைந்த வேளையில் நாட்டினுள் வளர்ச்சியடைந்த சமாதான இயக்கத்தினுள் பெண்களின் குரல் கணிசமான அளவுக்கு ஓங்கி ஒலித்தது. அன்றிலிருந்து இன்றுவரை தென்னிலங்கைப் பெண்கள் இயக்கம் போரை எதிர்த்தும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் கோரியும் பிரசாரம் செய்தது.

இவ்வாறு சமாதானச் செயற்பாடுகளில் ஈடுபட்டோர் தென்னிலங்கைப் பெண்கள் மாத்திரமே என்று கூறுவதற்கில்லை. 1984இல் யாழ்ப்பாணத்தில் வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் இடம்பெற்ற இராணுவ சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட 15 – 35 வயதுக்கிடைப்பட்ட தமிழ் சகோதரர்களும், சகோதரியரும் தென்னிலங்கை பூஸா முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் தாய்மார் ஒன்று சேர்ந்து





அன்னையர் முன்னணியை உருவாக்கினர். அவர்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் காரியாலயத்துக்கு ஊர்வலமாகச் சென்று தமது பிள்ளைகளை விடுதலை செய்யுமாறு ஆர்ப்பாட்டம் செய்தனர். ஸ்தாபன ரீதியாக அணிதிரண்ட இத்தாய்மாரின் செயற்பாடு காரணமாக ஒரு வார காலத்தினுள் 30 பேர் தவிர்ந்த ஏனையோர் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இப்பெண்கள் முன்னணி "பெண்களைப் பாலியல் வல்லுறவில் -டுபடுத்துவதை நிறுத்து" என்னும் பரவலான எதிர்ப்பியக்கத்தையும் முன்னெடுத்தனர். அவர்களுக்குத் தென்னிலங்கைப் பெண்களின் ஆதரவும் கிடைத்தது. அதன் பின்னர் தொடர்ச்சியாக வடக்கு – கிழக்கு மாகாணங்களின் யுத்தத்தினால் நேரடியாகப் பாதிப்புற்ற பெண்கள் தமது உரிமைகளுக்காகவும், பேச்சுவார்த்தை மூலமான தீர்வொன்றுக்காகவும் இயக்கங்களை நடத்தினர். தென்னிலங்கையைப் போன்றே வடக்கிலும் பெண்கள் தமது அமைப்புகளை நிறுவினர். கடந்த இரு தசாப்த காலத்தில் தென்னிலங்கையிலும், வடக்கு, கிழக்கிலும் பெண்கள் யுத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், சமாதானத்தை வேண்டியும் நடத்திய இயக்கங்கள் அதிவிசாலமானவையாகும். 1990க்குப் பின்னர் யுத்தத்தினால் நேரடி அச்சுறுத்தலை எதிர்கொண்ட கிராமங்கள் உருவாகிய வேளையில் இப்பிரதேசங்களின் பெண்களும் இவற்றுக்கு முகங்கொடுக்கும் வகையில் இணைந்து கொள்ள வேண்டியேற்பட்டது. புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னரும், பெண்கள் அபிவிருத்தி ஆதார நிறுவனம் போன்ற அமைப்புகள் வடக்கு, கிழக்கின் பெண்கள் அமைப்புகளுடன் ஒன்றிணைந்து அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்கள், சர்வதேசப் பெண்கள் தினக் கொண்டாட்டங்கள் போன்றவற்றில் துடிப்பாகப் பங்கேற்றதன் மூலம் சகோதரத்துவ உணர்வு மேலும் கட்டியழுப்பப்பட்டுள்ளது.

சமாதானச் செயல்முறை

இனத்துவ உரிமைகள், மனித உரிமைகள் போன்றவற்றை மட்டுமல்லாது, பால்நிலையையும் அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளாக அமைய வேண்டியது அவசியமாகும்.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சகல அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பெண்களின் அபிப்பிராயங்களும் இலட்சிய தரிசனங்களும் உள்ளடக்கப்படுதல் வேண்டும். விசேடமாக, மீள் குடியேற்றம், புனர்வாழ்வு நடவடிக்கைகள் மற்றும் சேவைகள், நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல், மதியுரை சேவைகளை நிறுவுதல் பிரதேச அகநிலை அமைவுகளை அபிவிருத்தி செய்தல் போன்ற விடயங்களில் திட்டங்களை நடைமுறைக்கிடும் வேளைகளில் மாத்திரமன்றி, திட்டத் தயாரிப்பிலும், பெண்களின் கருத்துரைக்கும், பங்களிப்புகளுக்கும் இடமளிக்கப்படல்வேண்டும். இத்தகைய திட்டங்களில் பெண்களின் தேவைகளுக்கு கட்டாயமாக இடமளிக்கப்படுவதோடு, பெண்களின் உரிமைகளையும் பெற்றுக்கொடுக்கும் வேளைகளில் பாலியல் லஞ்சம் பெறுதல்போன்ற ஒழுங்கீனங்களை முற்றாக நிறுத்தக்கூடிய வழிமுறையமைப்புகளை உருவாக்குதல்

வேண்டும். பெண்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு, இத்தகைய வழிமுறையமைப்புகளை ஏற்படுதல் வேண்டும். இதனால், பெண்களுக்கு இது குறித்த அறிவைப்பெற்றுக்கொடுத்தல் அவசியமாகும்.

அத்தோடு, புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் பெண்களுக்குக் கிட்ட வேண்டிய உரிமைகள் குடும்பங்களின் ஆண்களுக்கு வழங்கப்படாது, நேரடியாகப் பெண்களுக்கே வழங்கப்படுவதை உறுதிசெய்யும் சூழலை உருவாக்குதல்வேண்டும். நஷ்டங்களுக்கும், அழிவுகளுக்கும் இழப்பீடுகள் வழங்கப்படும் வேளையில் பெண்களின் கோரிக்கைகளுக்கு விசேட கவனம் செலுத்தும் நடைமுறைகள் உருவாக்கப்படுவதும் அவசியமாகும். விசேடமாக இங்கு சொத்துரிமை சட்டரீதியான காணி உறுதிப்பத்திரம், சட்டரீதியான திருமணம் போன்ற பெண்களைப் பாதிக்கும் பல விடயங்களில் கடுமையான சட்டங்கள், விதிகளுக்குப் பதிலாக, பெண்களுக்குச் சாதகமான நெகிழ்சித்தன்மையை உருவாக்குவதும் அவசியமாகும்.

இணக்கம் ஏற்படக்கூடிய அரசியல் தீர்வொன்றினுள் பெண்களின் பூரண பங்களிப்பை உறுதி செய்யக்கூடிய கொள்கை மற்றும் நடைமுறைத் திட்டத்தை ஏற்படுத்துவதும் முக்கியமானதாகும். விசேடமாகப் பெண்களின் உரிமைகள் சம்பந்தமான சர்வதேச நியமங்கள் சகல தரப்பினருக்கும் இயைபான உடன்படிக்கைகள் மற்றும் திட்டங்களில் இடம்பெறுதல் வேண்டும். இங்கு பெண்கள், முரண்பாடுகள் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் சம்பந்தமான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 1325 ஆம் இலக்க தீர்மானத்துக்குக் கவனம் செலுத்தப்படுதல் அவசியமாகும். இந்தத் தீர்மானம் ஆயுதம்தரித்த மோதல்களின்போது பாதிப்புக்குள்ளானோரின் பெரும்பான்மையானோர் பெண்களும், சிறுவர்களுமே என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒன்றாகும். இத் தீர்மானம் முரண்பாடுகளைத் தடுப்பதிலும் தீர்ப்பதிலும் சமாதான்தைக் கட்டியெழுப்புவதிலும் பெண்களின் பங்கேற்றம் பங்களிப்பும் தீர்மானகரமானவை என்பதை மேலும் வலியுறுத்தும் ஒன்றாகும்.

இவ்வாறு நோக்குகையில் சகல செயற்பாடுகளையும் பால்நிலை அடிப்படையிலான பெண்களின் தேவைகளை வலியுறுத்தும், அவர்களின் பூரணமான பங்களிப்பை உறுதிசெய்யும் செயற்பாடுகளாக மாற்றுவதற்கான பூரண உரிமை இந்த நாட்டின் பெண்களாகிய எம்மனைவருக்கும் உண்டு. அது மாத்திரமின்றி பொறுப்பும், கடமையும் இயைபுள்ள தரப்பினருக்கு மாத்திரமின்றி சமாதானத்தை எதிர்பார்த்து நிற்கும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் சகல குடிமக்களினதும் கடமையும், பொறுப்புமாகும்.

யுத்தத்தினால் அல்லலுற்று, இடம்பெயர்ந்து பாலியல் வல்லுறவுகளுக்கு உள்ளாகிய இந்த நாட்டின் சாதாரணமான பெண்கள் மத்தியில் இந்த நம்பிக்கை, சகோதரத்துவம் மற்றும் பலத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் மாத்திரமே சமாதானத்தைச் செயல்முறை மூலம் நிரந்தரமான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் கைகூடும். அப்பொழுதுதான் தற்போதைய சமாதானச் செயல்முறையை பால்நிலை அடிப்படையிலான பெண்களுக்குப் பாகுபாடு இழைக்காத ஒரு செயல்முறையாக மாற்றியமைக்க முடியும். இது வெறுமனே தானாக இடம்பெறக்கூடிய ஒன்றல்ல. இது எமது பாரிய முயற்சிகள் மூலம் கட்டியெழுப்பப்பட வேண்டிய ஒன்றாகும்.

நன்றி : சாம விமர்சி

**ச மா தா ன த் தை க் கு லை த் த ல் எ ப் ப டி ச் சா த் தி ய மா கு ம் . . . . . .**

**செய்ய முடியாத நிபந்தனைகளை விதித்தல், இழுத்தடித்தல், நட்புத் தன்மைகளை—சூழலை இல்லாதொழித்தல், சமாதானத்திற்குச் சாதகமான கோட்பாட்டாளர்களை அழித்தல், சிறுபான்மைக் கருத்துள்ளோரை அழித்தல், திரும்பவும் திரும்பவும் ஆயுதங்களாலும் — கொலைகளாலும் சமாதானம் ஏற்படும் என நம்பவைத்தல்**

நன்றி : விபவி செய்தி மடல் 1999 பெப்ரவரி



# பெண்கள் குழு : சமாதானப் பேச்சுவார்த்தைகள் எது எத்தகையது? எவ்வாறு செயற்படுகின்றது?

–சீதா ரஞ்சனி–

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தை வரலாற்றில் பெண்களின் தரிசனக்கண்ணோட்டத்தில் சமூகப்பிரச்சினைகளை முன்வைப்பதற்காக உத்தியோகபூர்வமான பெண்கள் குழுவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெண்கள் குழுவொன்றை அமைப்பதற்கு இருதரப்பினரும் இணங்கியுள்ளனர் என்ற விடயம் ஒஸ்லோ நகரில் இடம்பெற்ற முதலாம் கட்ட, நான்காம்கட்ட சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் நோர்வே அரசாங்கம் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் வெளியிடப்பட்டிருந்தது. 2003 ஜனவரி 05ம் திகதி முதல் 10ம் திகதி வரை தாய்லாந்தின் நகொம் பத்தொம் நகரில் இடம்பெற்ற நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் பத்துப் பேர் கொண்ட பெண்கள் குழுவொன்று ஏற்படுத்தப்பட்டது. பேச்சுவார்த்தை முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் அரசாங்கத்தரப்பில் 05 பேரினதும், விடுதலைப் புலிகள் தரப்பில் 05 பேரினதும் பெயர்களுடன் குழுவொன்று ஏற்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. மூன்றாவது அமர்வின் அறிக்கையில் ஒரு தரப்பினர் 04 பேர் வீதம் நியமிக்க வேண்டுமென்று இணக்கம் காணப்பட்டதென்று தெரிவிக்கப்பட்டிருந்தனர். இக்குழுவின் இலகுபடுத்துனராக நோர்வே அரசின் மூலவளப் பகிர்வாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டதாக அறிக்கை தெரிவித்தது. இதன்பின்னர் இந்த நியமனமும் இடம்பெற்றது.

பெண்களைக் குறைத்து மதிப்பீடு செய்யும், அலட்சியப்படுத்தும் சம்பிரதாயச் சிந்தனை பரவலாகக் காணப்படும் சமூகத்தில் இது ஒரு முக்கியமான நடவடிக்கையாகத் தோன்றாதிருக்கலாம். எம்முடையதைப் போன்ற ஒரு சமூகத்தில் பெண்களின் சமூக நிலைமை மிகவும் பாரதூரமானதென்று எமக்குத் தோன்றிய போதிலும், "பாரம்பரியமான பெண்களின் பிரச்சினைகள் சிலவற்றை வெளியிடக்கூடிய ஒன்று" என்று இக்குழுவைப்பற்றி எண்ணத் தோன்றும் எனினும் இக்குழுவினர் தமது விடயப்பரப்பை நன்கு விளங்கிக் கொண்டால் பாரம்பரிய சமூகப் பிரச்சினைகளை மட்டுமன்றி, இனவாத யுத்தம் நிகழ்ந்த ஒரு சமூகத்தில் பெண்களுக்கு விசேட

> "திரதிருஷ்ட வசமாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டாலும் யுத்தத்தின் விளைவுகள் காரணமாக பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த பெண்களுக்கு வழங்கக் கூடிய அதிகூடுதலான ஒத்துழைப்பை வழங்குவதற்கு அவர்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றுவது அவசியமாகும்."

முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளையும், பொதுவான சிவில் சமூகப் பிரச்சினைகளையும், பொதுவான சிவில் சமூகப் பிரச்சினைகளையும் சமாதானச் செயல்முறையினுள் உள்ளடக்கக் கூடிய ஒரு குழுவாக தம்மை மாற்றிக்கொள்ள முடியும். அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று குழு நியமிக்கப்பட்டுள்ளது சமாதானச் செயல்முறையினுள் பால்நிலை சம்பந்தமான பிரச்சினைகளையும் பயனுள்ளவகையில் உள்ளடக்குவதை உறுதிசெய்யும்நோக்கத் தொடரும் (Following and agreement made at the third .... of talks, a committee was established to ensure the effective .... of gender various in the peace forum) இதன் பிரகாரம் பெண்களின் கண்ணோட்டத்தில் இனங்காணக்கூடிய தீவிர சமூகப் பிரச்சினைகளின் ஆழத்தை வெளிக்கொணர முடியும். இனங்கள் மத்தியில் நம்பிக்கை மற்றும் புரிந்துணர்வு இன்மை காரணமாக பிளவுபட்ட சமூகத்தில் யுத்த மனோபாவத்தால் ஒடுக்கப்பட்ட அலட்சியப்படுத்தப்பட்ட சிவில் சமூகத்தின் குரலை, மரணமடைந்த மனிதர்களின் குரலோடு உணர்வு பூர்வமாக ஒன்றிணைக்க முடியும். இந்த அர்த்தத்தில் பார்க்கும் போது சமாதானப் பேச்சுவார்த்தை வரலாற்றில் சிவில் சமூகப்பிரச்சினைகளுக்கு உணர்வுபூர்வமான முக்கியத்துவமளித்து ஏற்படுத்தப்பட்ட முதலாவது சிவில் குழுவாக இதைக் கருதலாம். சமூகத்தோடு ஒன்றிணைய வேண்டிய தேவை இருப்பின், ஆழமான பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய அர்ப்பணிப்புணர்வு இருப்பின், பெண்களின் இலட்சிய தரிசனநோக்கில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்ட இப்பெண்கள் குழு தமது செயற்பாட்டு விடயப்பரப்பைத் தெளிவாக வகுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இப்பெண்கள் குழுவின் விசேட முக்கியத்துவம் என்ன? யுத்தத்தை நிறுத்தி இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்வகையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் மிக நீண்டகாலப் போர்நிறுத்தம் இந்த முறை ஏற்பட்டது. இப்பொழுது ஒன்றரை வருட காலத்துக்குமேலாக யுத்த நிறுத்தம் நீடிக்கின்றது. சமாதானப் பேச்சுவார்த்தைகளின் ஆறு அமர்வுகள் பூர்த்தியாகியுள்ளன. இதற்கு முன்னரும் சில சமாதானச் செயல்முறைகள் இடம்பெற்றுள்ளன. 1984 சர்வகட்சி மாநாடு, 1985 திம்புப் பேச்சுவார்த்தைகள், 1987 இந்திய – இலங்கை சமாதான உடன்படிக்கை, 1990இல் ஜனாதிபதி பிரேமதாசவுக்கும், விடுதலை புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள், 1995ல் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் போன்றவை இப்பொழுது வரலாற்றின் ஒரு பகுதியாகியுள்ளன. அவ்வாறே 2002 பெப்ரவரி 22ந் திகதி ஐ.தே.மு அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஆரம்பமாகிய பேச்சுவார்த்தை வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதிக் கொண்டிருக்கின்றது. தற்போதைக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளபோதிலும், சமாதானச் செயல்முறை முடிவடைந்துவிடாதென்று இரு தரப்பினரும் நம்பிக்கை அளித்துள்ளனர். இதுவரை எழுதப்பட்ட பேச்சுவார்த்தைகள் குறித்த எந்த அத்தியாயத்திலும் பெண்களின் கண்ணோட்டத்தில் பெண்கள் மற்றும் பொது சமூகப் பிரச்சினைகளை ஒன்று சேர்ப்பதற்கு எத்தகைய முயற்சிகளும் மேற்கொளள்ளப்படவில்லை. இதனால்தான் பெண்களைக் கொண்ட ஒரு குழுவொன்று வரலாற்றில் முதல்தடவையாக இடம்மாறியாவது பிரத்தியேக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகப் பேசப்பட வேண்டியுள்ளது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த எந்தத் தீர்வும் எட்டப்படும் சந்தர்ப்பத்தில் பெண்கள் பங்கேற்பின் முக்கியத்துவம் கவனத்தில் கொள்ளப்படும் சந்தர்ப்பம் இதுவரை ஏற்படவில்லை. எவராவது பெண் ஒருவர் அதில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்த வேளையிலும், அது எவ்விதமான சாதகமான விளைவையும் ஏற்படுத்தியிருக்கவில்லை, உண்மையில் முக்கியத்துவம் பெறுவது அச் செயல் முறையில் பெண் ஆற்றும், கருமங்களே. இந்தக் தடவை பேச்சுவார்த்தைச் செயல்முறையில் திருமதி. அடேல் பாலசிங்கம் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவில் தொடர்ச்சியாகப் பங்குப்றறியிருந்தார். ஆயினும் அவரின் பணி மரபுரீதியான செயலாளர் ஒருவரின் பாத்திரமாகவே தோன்றுகின்றது. இக்குறைபாடுகளை இட்டு நிரப்பும் வகையில் நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழு சமாதானச் செயல்முறைக்கு அதன் அதி உயர்வான பங்களிப்பை வழங்க முடியுமாயின் பால்நிலைச் சமத்துவத்தைக் கருத்தில் கொள்ளும் சமூகத்தின் பயணத்தில் முதல் அடியை எடுத்து வைப்பது சாத்தியமாகும்.

நீண்ட காலச் செயல்முறையின் விளைவு? குழுவொன்றை நியமிப்பது தானாகவே இடம்பெறக்கூடிய ஒரு விடயமல்லவென்பது இது குறித்த ஆயிவின்போது தெளிவாகியது. இது

விடயத்தில் சமாதானத்துக்காகச் செயலாற்றிய பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளோடு முன்னெடுத்த நடவடிக்கைகள் உள்ளன. இக்குழுவை நியமிக்கும் விடயத்தில் துடிப்பாகச் செயலாற்றியவரும் குழுவில் இடம்பெற்றுள்ளவருமான திருமதி. குமுதினி சாமுவேல் பின்வருமாறு இது குறித்து விளக்கமளிக்கின்றார்:

"போர் நிறுத்தத்தின் பின்னர் கொண்டாடப்பட்ட முதலாவது பெண்கள் தினத்தில் பெண்கள் அமைப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து சமாதானச் செலய்முறையை அர்த்தமுள்ள வகையில் பலப்படுத்தும் ஆலோசனைகள் அடங்கிய செய்தியொன்றை வெளியிட்டன. யுத்தம் குறித்துக் கவனம் செலுத்தப்படாமையால் பெண்களுக்கு ஏற்பட்ட பல பிரச்சினைகள் சம்பந்தமாக இது எமக்கு அறிவுறுத்தும் செய்தியாக அமைந்தது. இதன் பயனாக பெண்களின் பங்களிப்பின் முக்கியத்துவம் குறித்து நாம் கலந்துரையாடினோம். சமாதானச் செயல்முறை அர்த்தமுள்ள ஒன்றாக அமைய வேண்டுமமெனில், இப்பிரச்சினைகளுக்கு நிச்சயம் தீர்வுகள் அவசியமாகும். சில பெண்கள் குழுக்கள் சர்வதேசப் பெண்கள் பிரதிநிதிகள் சிலரோடு சேர்ந்து வடக்கு, கிழக்கு மற்றும் எல்லைப் புறக்கிராமங்களுக்குச் சென்று அப்பிரதேசங்களிலுள்ள பெண்களினதும், பொது மக்களினதும் குறித்துரைத்த பிரச்சினைகளை ஆராய்ந்தனர். இதன் பின்னர் எமது விதந்துரைப்புகள் அடங்கிய அறிக்கையொன்றை நாம் தயாரித்தோம். அதைச் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள அரசாங்கத் தரப்பின் சபை பிரதிநிதிகளிடமும், விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும், நோர்வே தூதருக்கும் கையளித்தோம். ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நோர்வே தூதுவர் என்போரைச் சந்தித்துக் கலந்துரையாடி எமது வேண்டுகோள்களைச் சமர்ப்பித்தோம். நவம்பரில் ஒஸ்லோ நகரில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளிலும் எமது தேவைகளைச் சமர்ப்பித்தோம். டிசம்பரில் இடம்பெற்ற கலந்துரையாடல்களின்போது பெண்கள் குழுவொன்றை நியமிப்பதற்கு இணங்குவதாக அறிவிக்கப்பட்டவுடன் நாம் நீண்ட காலமாக இனங்கள் மத்தியில் சமாதானம் மற்றும் பெண்களின் குறித்துரைத்த பிரச்சினைகளை இனங்கண்டு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த துடிப்பான பெண்செயற்பாட்டாளர்கள் 35 பேரின் பெயர்களைச் சமர்ப்பித்தோம். அவர்களுள் சிலரை உள்ளடக்கிய வகையில் அரசாங்கத் தரப்பில் ஐந்துபேரை நியமித்திருப்பதாக நான்காவது பேச்சுவார்த்தைகள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

யுத்தம் காரணமாக எழுந்துள்ள குறித்துரைப்பான பிரச்சினை மீள்குடியேற்றத்தின் போது எங்கு செல்வது என்பதாகும். உயிர் வாழ்வதற்கான வழிவகைகளைத் தேடிக்கொள்வது எவ்வாறு? பாடசாலை மற்றும் சுகாதார வசதிகள் கிட்டுமா? இக்கேள்விகள் சம்பந்தமான எந்தவிதமான தகவல்களையும் அறிந்து கொள்ளாத நிலையில் பொதுவாக அதிகாரிகள் தடுக்கும் தீர்மானங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டிய நிலை இடம்பெயர்ந்தோருக்கு ஏற்படுகின்றது. இத்தோடு, பெண்களைத் தலைவர்களைக் கொண்ட குடும்பங்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளன. அப்படியாயின், தீர்மானங்களை மேற்கொள்ளும் இடங்களில் இடம்பெயர்ந்தோரின் பிரதிநிதிகளை ஏற்படுத்துதல், புனர் வாழ்வுக்குக் கிடைக்கும் உதவிகள் எவ்வாறு செலவிடப்படுகின்றன என்பதை மதியுரைஞர் மட்டத்திலிருந்து ஆய்வு செய்தல், புனர்வாழ்வு நடவடிக்கைளோடு உருவாகும் தொழில்வாய்ப்புகள் தொழில் பாதுகாப்பின் கீழ் இடம்பெறுகின்றதாவென்பதை ஆய்வு செய்தல், காணி உரிமை, பொதுமக்கள் புரிந்துகொள்ளக் கூடிய உணர்வுபூர்வமான ஊடக முறைமைகளினூடாக இடம்பெறுபவை குறித்து சாதாரணமக்களுக்கு அறிவூட்டுதல் போன்ற பல்வேறு விடயங்களில் இக்குழு ஈடுபட்டுப் பணியாற்ற முடியுமென்று நாம் கருதுகின்றோம்.

இப்பெண்கள் குழு வன்னியில் சில தடவைகள் கூடியதாக அறிகின்றோம் ஆயினும், அவர்களின் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்த வேளையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆயினும் அவர்கள் தமது திட்டங்களை வகுத்துக்கொள்வதற்கு இது தடையாக அமையவேண்டிய அவசியமில்லை. துரதிருஷ்டவசமாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டாலும் யுத்தத்தின் விளைவுகள் காரணமாக பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த பெண்களுக்கு வழங்கக் கூடிய அதிகூடுதலான ஒத்துழைப்பை வழங்குவதற்கு அவர்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றுவது அவசியமாகும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் வரலாற்றில் பெண்களின் முக்கியத்துவத்தை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த உத்தியோகபூர்வமான குழு சமாதானச் செயல்முறையை அர்த்தமுள்ளதாக்குமென்று நாம் பிரார்த்திக்கின்றோம்.

பெண்கள் குழுவுக்கு நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள்:

அரசாங்கப் பிரதிநிதிகள்:

கலாநிதிதிருமதி குமாரி ஜயவர்தன
கலாநிதி. தீபிகா உடகம
திருமதி. குமுதினி சாமுவேல்
திருமதி. பயிஸின் சக்கரியா
கலாநிதி. பஸீலா ரியாஸ்

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள்:

திருமதி. சிவமணி சுப்பிரமணியம்
திருமதி. ரேணுகா சண்முகராஜா
திருமதி. மதிமலர் பாலசிங்கம்
திருமதி. ஸ்ரீதேவி சின்னத்தம்பி
திருமதி. வசந்தா பிரேமினி சோமசுந்தரம்.

நன்றி : சாம விபர்சி



# சமாதானச் செயல்முறைகளில் பெண்கள்: பெண்களின் பிரசன்னம் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றதா?

–அமீனா மோஷின்–

தலைப்பில் கவனம் செலுத்துகையில் பெண்கள் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த முடியுமா? என்பதே பொருத்தமான கேள்வியாகவிருக்குமென்பது அவரின் கருத்தாகும். சமாதான மேசையில் இரு தரப்பிலுமான பெண்களின் எண்ணிக்கை மற்றும் சமத்துவமான பெண்கள் பங்கேற்பு போன்ற அகநிலை மற்றும் புறநிலை நிபந்தனைகள் பெண்கள் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துவதற்கு அவசியமாகும். அத்தோடு, அதிகாரம் மற்றும் பாதுகாப்பு போன்ற பிரச்சினைகளில் பெண்களின் தனித்தன்மை வாய்ந்த கருத்துணர்வுகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அதிகாரம் குறித்த மரபு ரீதியான எண்ணப்பாடு அது ஆண்களின் கட்டுப்பாடு மற்றும் ஆதிக்கத்துக்குரிய ஒன்று என்பதாகும். மறுபுறத்தில் பெண்கள் அதிகாரம் குறித்துப் பேசுகையில், அவர்கள் கூட்டு வலுவளித்தலைப் பற்றிப் பேசுகின்றனர். அத்தோடு, எத்தகைய பாதுகாப்பு உணர்வைப் பற்றி நாம் பேசுகின்றோம் என்பதும் முக்கியமானதாகும். நாம் மனிதர்களின் பாதுகாப்புக் குறித்துப் பேசுகின்றோமா, அல்லது தேசிய பாதுகாப்புக் குறித்துப் பேசுகின்றோமா? பெண்களின் பிரசன்னம் இடம்பெறும்போது அவர்கள்தான் பாதுகாப்பு எண்ணப்பாடு குறித்துக் கேள்வியெழுப்புகின்றனர். அவர்கள் பசியிலிருந்தும், நோயிலிருந்தும் விடுதலை, அன்றாட வாழ்க்கைப் பாணி திடீர் வன்செயல்கள் மூலம் சீர் குலையாமை போன்ற மனிதப் பாதுகாப்புகள் குறித்துப் பேசுகின்றனர். ஆகவே இவையே சகல மனிதர்களும் தம்மை இனங்காட்டக்கூடிய பொதுவான கரிசனை விடயங்களாகும். பேச்சுவார்த்தைகள் ஒரு செயல் முறையாகும். முதலில் நீங்கள் மனிதப் பாதுகாப்புக் குறித்தும் பின்னர் படிப்படியாக ஏனைய கருத்து வேறுபாடுகளுக்குரிய பிரச்சினைகள் குறித்தும் பேசவேண்டிய ஒரு கருமப்பாட்டுப் பிரச்சினை குறித்தே நான் பேசுகின்றேன் என்று பங்களாதேஷைச் சேர்ந்த ஆமினா மோஷின் தெற்காசிய மனித உரிமைகளுக்கான அமைப்பின் "சமாதான செயல்முறையில் பெண்களின் பங்களிப்பை வலுப்படுத்தல்" நேபாள் காத்மண்டுவில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையின் போது வலியுத்திக் கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்....

தெற்காசியச் சூழமைவில் நோக்குகையில் சமாதான உடன்படிக்கைகளுக்கான பேச்சுவார்த்தைகளில் பெண்கள் உள்ளடக்கப்படவில்லை. ஆயினும் அவர்கள் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயல்முறையில் ஒரு பகுதியாக விளங்கியுள்ளனர். இது ஒருவர் ஈட்டக்கூடிய சமாதானத்தின் தன்மையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றது.

எனது நாட்டில், சிட்டகொங் மலைப் போராட்டத்தில் பெண்கள் மிகவும் துடிப்பான பாத்திரத்தை வகித்திருந்த போதிலும், உடன்படிக்கை கைச்சாத்தாகியதும், பெண் பிரதமர் ஒருவரும், பெண் எதிர்கட்சித் தலைவரொருவரும் இருந்த போதிலும், பெண்களின் பிரச்சினைகள் பூரணமாகவே உதாசீனம் செய்யப்பட்டன. முக்கிய பதவிகளில் பெண்கள் இருந்ததில் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்திவிடாது என்பது தெளிவாகும். சமாதானச் செயல்முறையில் பெண்களை உள்ளடக்க வேண்டிய தேவை அதிகரித்து வருகின்றது. 1985ல் நைரோபி மாநாட்டில் இந்த விடயம் அங்கீகரிக்கப்பட்டதோடு, பிரத்தியேகமாக சமாதானம் மற்றும் ஆயுதக் களைவு போன்ற பேச்சுவார்த்தைச் செயல்முறைகளில் பெண்களும் தூதுக்குழுக்களில் உள்ளடக்கப்பட வேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. துரதிஷ்டவசமாக இது இன்னமும் நிறைவேறவில்லை. பேச்சுவார்த்தைகள் மூலம் உடன்படிககைகளை எட்டும் செயல்முறையில் பெண்களும் உள்ளடக்கப்படவேண்டுமென்பது சர்வதேச சமூகம் உணர்கையில் அது குறித்த இரு அனுமானங்கள் உள்ளன. ஏற்பாட்டில் மத்தியஸ்தர்களென்ற கலாசாரப்பாத்திரம் மற்றும் வீட்டில் சமாதானக் கல்வியாளர் என்னும் விடயம் காரணமாக அவர்கள் உள்ளடக்கப்பட வேண்டுமென்பது ஒன்று. இது பிரச்சினைக் குரிய ஓர் அனுமானமாகும். இது பெண்களை மென்மேலும் வீட்டினுள் பூட்டிவைக்கும் ஒன்றாகும். பெண்கள் வீடு குறித்த கருத்துணர்வுகளுக்கு மேலாக விடயங்களைச் சாதிக்கக் கூடியோராவர் (தனிப்பட்ட) இல்லம் மற்றும் பொது விவகாரங்களுக்குமிடையிலான இப்பிரிவினை செயற்கையானதும், அரசியல் உள்நோக்கங்களைக்கொண்டதுமாகும். இரண்டாவது அனுமானம் பல்வேறு மட்டங்களில் பெண்கள் துடிப்பாக யுத்தத்தில் பங்கேற்பதால் முரண்பாடு முடிவுற்றதும் எத்தகைய சமூகம் கட்டியெழுப்பப்பட வேண்டுமென்பதைத் தீர்மானிப்பதில் பெண்கள் பங்கெடுக்க வேண்டும் என்பதாகும். பெண்களைச் சமாதானச் செயல்முறையினுள் ஒன்றிணைப்பதற்கான சர்வதேச இயக்கம் இந்த அனுமானங்களின் மீதே தனது நடவடிக்கைகளைக் கட்டியெழுப்புவதோடு ஒரு வகையில் பார்த்தால் பெண்கள் கலாசார மத்தியஸ்தர்களென்று அல்லது அவர்கள் வீட்டுக் கருத்தோட்டத்தைக் கொண்டுவருகின்றன என்பதும் கூறுவதன் மூலம் தந்தைவழி நியமங்களை மேலும் பலப்படுத்துகின்றனர்.

இவ்வாறாக, "பெண்கள் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றனரா?'' என்றும் கேள்விக்குப் பதிலளிப்பதற்குப் பதிலாக, "பெண்களால் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த முடியுமா?'' என்றே நான் கேட்பேன். ஒரு குறிப்பிட்ட வகையிலான மானசீகவாத மற்றும் புறநிலை யதார்த்தவாத சூழலொன்று உருவாக்கப்படாதவரையில் பெண்கள் சமாதான உடன்படிக்கைகளுக்கான பேச்சுவார்த்தைகளில் அர்த்தமுள்ள பங்களிப்பு எதனையும் செய்ய முடியாது. பின்வரும் நிபந்தனைகள்

> "ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த முடியுமா? என்றே நான் கேட்பேன். ஒரு குறிப்பிட்ட வகையிலான மானசீகவாத மற்றும் புறநிலை யதார்த்தவாத சூழலொன்று உருவாக்கப்படாத வரையில் பெண்கள் சமாதான உடன்படிக்கைகளுக்கான பேச்சுவார்த்தைகளில் அர்த்தமுள்ள பங்களிப்பு எதனையும் செய்ய முடியாது"

முக்கியமானவையாகத் தோன்றுகின்றன. நீங்கள் அவற்றோடு மேலும் பல விடயங்களைச் சேர்த்துக் கொள்ளுவீர்களென்று நான் நம்புகின்றேன். முதலாவதாக எங்களைச் சமாதான மேசையில் இணைத்துக்கொள்வது குறித்து நாம் பேசும்போது எண்ணிக்கைகள் மிகவும் முக்கியமானவையாகும். அதாவது எத்தகைய பெண்கள் பிரதிநிதிகள் குழுவில் இடம்பெற்றுள்ளனர்? பங்களாதேஷில் ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும் பெண்களாகவிருந்தபோதிலும், அரசியல் ரீதியில் அவர்கள் ஆண்களைவிட கூடுதலாக இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளனர். விதிமுறையான அரசியலிலுள்ள பெண்களை நான் நேர்முகம் கண்டுள்ளேன். இந்த இராணுவ நிலைப்பாடுகளை அவர்கள் எடுத்துள்ளதற்கான காரணத்தை நான் கேட்டுள்ளேன். தாம் ஓரங்கட்டப்படும் கட்சிக்கட்டமைப்புகள் காரணமாக தமது குரலை மற்றவர்கள் செவிமடுக்கப்படுவதை உறுதிசெய்வதற்குத் தாம் இத்தகைய நிலைப்பாடுகளை தடுப்பதாக அவர்கள் தெரிவித்தனர். ஆகவே பெண்களுக்குச் சமத்துவமான பிரதிநித்துவம் கொடுத்தால் அவர்கள் குறைவான இராணுவ நிலைப்பாடுகளை தடுக்கக்கூடியதாகவிருக்கும். அத்தோடு பேச்சுவார்த்தைச் செயல்முறைகளில் பங்கேற்போர் அனேகமான சந்தர்ப்பங்களில் எண்ணிக்கைகளின் அடிப்படையிலேயே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதாக என்னிடம் தெரிவித்தனர். உதாரணமாக சி.எச்.ஐ உடன்படிக்கையில் பெரும்பான்மையினரின் தீர்மானத்தின்படியே கைச்சாத்திடப்பட்டது. ஆகவே, பெண்ககளின் சமமான பிரதிநிதித்துவம் இல்லாதவேளையில், ஒரு பெண் எவ்வளவுதான் முயன்றாலும் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்திவிட முடியாது. பெண்கள் சமாதான மேசையின் இருபக்கத்திலும் இடம்பெறுதல் வேண்டும். அவர்கள் இவ்வாறு மனிதாபிமானப் பிரச்சினைகளில் ஒருவரோடொருவர் சம்பந்தமுற்று சமாதானச் செயல்முறைக்கு உதவமுடியும்.

இரண்டாவதாக சமாதான உடன்படிக்கைகள் சமத்துவ அடிப்படையில் கைச்சாத்திடப்பட வேண்டும் என்பது போலவே பெண்களும் சமத்துவ அடிப்படையில் இடம்பெறுதல் வேண்டும். இந்த

> "பெண்கள்
> சமாதான
> மேசையின்
> இருபக்கத்திலும்
> இடம்பெறுதல்
> வேண்டும்.
> அவர்கள் இவ்வாறு
> மனிதாபிமானப்
> பிரச்சினைகளில்
> ஒருவரோடொருவர்
> சம்பந்தமுற்று
> சமாதானச்
> செயல்முறைக்கு
> உதவமுடியும்"

உடன்படிக்கைகள் பலனளிக்காதிருப்பதன் ஒரு காரணம் அது வழக்கமாக ஓர் ஆதிக்கத்தரப்பினால் கையாளப்படுவதாகும். தமது கருத்துக்களை விவாதித்து நிலைநாட்ட முடியாத பெண்களை வைத்திருப்பதில் பிரயோசனமில்லை. ஆண்களும் தமது ஆண்மை ஆதிக்கத்தைக் கைவிடாதவரையில் பெண்கள் அர்த்தமுள்ள பாத்திரங்களை வகிக்கமுடியாது. இராணுவக் குழுக்கள் மற்றும் அரசாங்கத்தரப்பிலிருந்து ஆண்களையும், பெண்களையும் சேர்த்து பேட்டி கண்டபோது பெண்கள் வாயைத் திறக்கவில்லையென்பதையும் நான் அவதானித்துள்ளேன். ஆண்கள் பேசிக்கொண்டிருப்பார்கள், பெண்கள் தலையாட்டிக்கொண்டிருப்பார்கள். அவர்களை நான் பேசவைக்க முயன்றபோது அவர்கள் "இவர்கள் கூறுவதோடு நாம் உடன்படுகின்றோம்'' என்று தெரிவித்தனர். ஒரு வழியில் பார்த்தால் இப்படிச் செய்வதன் மூலம் பெண்கள் தமது கீழ்நிலையை ஏற்றுக்கொள்ளுகின்றார்கள். இதனால்தான் பெண்கள் சமத்துவமான அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதை நான் வலியுறுத்துகின்றேன்.

மூன்றாவது காரணி பெண்கள் ஓரளவுக்குத் தமது இனத்துவ அல்லது தேசிய அடையாளங்களுக்கு அப்பாற்பட்டவகையிலான கருத்துணர்வுகளைக் கொண்டு வரவேண்டும் என்பதாகும். பெண்கள் பெண்களின் கருத்துணர்வுகளைக்

கொண்டுவரவேண்டுமென்று கூறுகையில் நான் வெறுமனே பிரச்சினைகளைப் பற்றி மட்டும் குறிப்பிடவில்லை. அவர்கள் எவ்வாறு அதிகாரத்தை நோக்குகின்றனர் என்ற அதிகாரம் குறித்த கருத்துணர்வுகளையும் கொண்டுவருதல் வேண்டும் மரபுரீதியான அதிகாரம் குறித்த ஆணாதிக்க எண்ணப்பாடு அதைக்கட்டுப்பாடு என்றும் ஆதிக்கம் என்றும் கருதுகின்றது. ஆயினும், பெண்கள் அதிகாரம் குறித்துப் பேசுகையில் அவர்கள் கூட்டு வலுவூட்டல் பற்றியே பேசுகின்றனர். இத்தகைய எண்ணப்பாடுகளுக்கு இடமளிக்கப்படல் வேண்டும்.

> "தேசிய அடையாளமென்பது மீண்டும் மீண்டும் மேலெழும் ஒன்றாகவுள்ளது. பெண்கள் பேச்சுவார்த்தை மேசையில் இடம்பெற்றிருந்தால் அவர்கள் வித்தியாசமான ஒரு உடன்படிக்கைக்காய் கையெழுத்திட்டிருப்பார்களா என்பது குறித்து அவர்களிடம் வினாத்தொடுத்தேன்"

நாம் என்ன விடயங்களுக்குத் தீர்வு காணவிரும்புகிறோம் என்ற முன்னுரிமை இருத்தல் வேண்டும். பிரத்தியட்சமாகவே, பாதுகாப்புப் பிரச்சினையை நாம் கையாளவேண்டும். எத்தகைய பாதுகாப்புக் குறித்து நாம் பேசுகின்றோம்? மனிதப்பாதுகாப்புச் சம்பந்தமாகவா அல்லது தேசிய பாதுகாப்புச் சம்பந்தமாகவா பேசுகின்றோம்? பெண்கள் பிரசன்னமாக விருக்கும்போது அவர்கள் பாதுகாப்பு என்பதும் எண்ணப்பாடு குறித்துக் கேள்வி எழுப்புகின்றனர். இது பசியிலிருந்தும், நோயிலிருந்தும் விடுபட்டிருக்கும் சுதந்திரம் மற்றும் திடீர் வன்செயல்கள் மூலம் அன்றாட வாழ்க்கை பாதிப்புறாதிருக்கும் சுதந்திரம் என்பவற்றை உள்ளடக்குகின்றது. பேச்சுவார்த்தைகளென்று ஒரு செயல்முறையாகும். நான் இங்கு பேசுவது மிகவும் கருமப்பாடான ஒரு விடயம் சம்பந்தமாக ஆகும். முதலில் நாம் மனிதப் பாதுகாப்புக் குறித்தும், பின்னர் படிப்படியாக ஏனைய கருத்து மோதல்களுக்குரிய பிரச்சினைகள் குறித்தும் பேசுதல் வேண்டும்.

இறுதியாக, பெண்களின்மூலம் இடம்பெறும் மீள் வகுத்தமைப்புகள் ஏற்கனவே சமூகத்தில் வேரோடியிருப்பின், அவர்களால் மிகவும் கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்த முடியும். பேச்சுவார்த்தை மேசையில் இது மிகவும் முக்கியமான ஒரு விடயமாக அமையும் உதாரணமாக, சிட்டகொங் சமாதான உடன்படிக்கையின் பின்னர் நான் ஜே.எஸ்.எஸ் கட்சியின் தலைவராகிய ஷான்டு லர்மாவைப் பேட்டிகண்டு, சமாதான உடன்படிக்கையில் எங்களின் பிரச்சினைகள் ஏன் உள்ளடக்கப்படவில்லையென்று வினாத்தொடுத்தேன். பெண்களின் பிரச்சினைகளில் தனக்கு நம்பிக்கையில்லையென்று அவர் மொட்டையாகத் தெரிவித்தார். சமூகத்தில் விடுதலை ஏற்பட்டால், அது பெண்களுக்கும் விடுதலையைக் கொண்டு வரும். நான் துடிப்பான பெண் செயற்பாட்டாளர்களிடமும் இதே கேள்வியைக் கேட்டபோது அவர்களும் இதே விதமாகப் பதிலளித்தனர். தேசம் விடுதலை பெறும்போது பெண்களும் விடுதலையை ஈட்டிக்கொள்ளலாம், பெண்களுக்கான காணி உரிமைகளை அவர்கள் ஏன் கோரவில்லையென்று கேட்டபோது அவர்கள், எமது தேசம் ஏற்கனவே அழிவுற்ற ஒரு தேசமாக விருப்பதால் நாம் அவற்றைக் கோரவில்லை. எமது பெண்கள் வங்காளி ஆண்களைத் திருமணம் செய்தால் அவர்கள் நிலங்களைத் தாமே எடுத்துக்கொள்வார்கள். ஆகவே அதன் பின்னர் காணி சிட்டகொங் சுதேசவாசிகளின் அரசுக்கெதிரான போராட்டத்தில் காணியே முக்கிய விடயமாக மாறும் என்று கூறினார்கள். (போராட்டத்தில் துடிப்பாக ஈடுபட்டுள்ள சி.எச்.டி பெண்கள் அமைப்பாகிய) மலைஜாதிப் பெண்கள் சம்மேளனம் தமது உரிமைகள் குறித்து அறியாதவர்களென்று நான் கூறவில்லை. அ'வர்கள் தமது உரிமைகள் குறித்து நன்கு அறிந்துள்ளனர். ஆயினும் அவர்கள் அதைத் தமது தேசிய மற்றும் ஜனசமூக அடையாளக் கோரிக்கைகளுக்குக் கீழ்ப்படுத்துகின்றனர்.

தேசிய அடையாளமென்பது மீண்டும் மீண்டும் மேலெழும் ஒன்றாகவுள்ளது. பெண்கள் பேச்சுவார்த்தை மேசையில் இடம்பெற்றிருந்தால் அவர்கள் வித்தியாசமான ஒரு உடன்படிக்கைக்காய் கையெழுத்திட்டிருப்பார்களா என்பது குறித்து அவர்களிடம் வினாத்தொடுத்தேன். நேரடியான பதிலொன்றை அவர்களால் தரமுடியவில்லை. இந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளாத கருத்து வேறுபாட்டாளர்கள் குழுவொன்றைப் பற்றியும் நான் இவ்விடத்தில் தெரிவிக்க வேண்டும். இவர்கள் உடன்பாட்டுச் செயல்முறையில் சேர்த்துக் கொள்ளப்படாத, பாலியல் வல்லுறவுக்கு ஆளானோருக்கான இழப்பீடுகள் போன்ற நீதிப் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுகின்றார்கள். எப்படியாயினும், நான் உடன்படிக்கையை ஆதரிக்கும் பெண்கள் குழுக்களோடு பேசினால், அவர்கள் பதிலளிப்பதில்லை. ஆகவே, பெண்கள் ஒரே மொழியைப் பேசுவதில்லை. நாம் கட்டமைப்புகளை மாற்றியமைத்து, பெண்களின் கருத்துணர்வுகளுக்கு இடமளிக்காதவரையில், பொதுவான விடயங்களிலன்றி அடிப்படையான பிரச்சினைகளில் இதைச் செய்யாதவரையில் பெண்களால் ஓர் அடிப்படையான மாற்றத்தைக் கொண்டுவர முடியாது.

நன்றி : பெண்கள் சமாதானத்தை கட்டியெழுப்புதல் – புத்தகம் 2001




பெண்கள் சமூக கட்டமைப்பை உடைத்தல், தேசிய இன விடுதலையில் பங்குகொண்டு இனத்துக்கான விடுதலையை அடைய முற்படுதல் என்ற இரு வேறு விடயங்கள் என்பன யுத்தத்தால் களையப்பட்ட சமூக கலாச்சார அதிகார விழுமியங்கள், ஆண் தலைமைத்துவத்தின் கீழுள்ள இனவிடுதலை இயக்கங்களில் பெண்களுக்கென பெண்கள் பிரிவுகளை உருவாக்குவதும் என்றுமே முரண்பட்ட ஒன்றாகும். பாரிய நோக்கெல்லைகளை கைப்பற்றும் அல்லது ஆக்கிரமிக்கும் செயல்களில் முன்னிறுத்தப்படும் பெண்கள் விளம்பரங்களில் பாவிக்கப்படும் பாவனைப்பொருளைப்போன்றே பாவனைக்குட்படுத்தப்படுகின்றார்கள். இங்கே நோக்கெல்லைகளை பிடிப்பதும், விளம்பரங்களின் ஊடாக இலாபத்தை அடைவதும் ஒரு ஆதிக்க மையம் சார்ந்ததாகும். ஆகவே அதிகார உடைப்புகள் விடுதலையைப்பெற்றுக்கொடுக்கும், அல்லது ஒடுக்கப்படும் இனச்சமூகத்தின் விடுதலையில் பெண்களுக்கான விடுதலையைப் பெற்றுக்கொடுக்கும் என்பதெல்லாம், வெறும் பூச்சுற்றலாகத்தான் இருக்கும் என்பதில் முழு நம்பிக்கைக்குரியவர்களாக அதை கூறுபவர்களே இருக்கிறார்கள்.

பேச்சுக்களின் மேசையில் பங்களிப்புச் செய்வது சகல தரப்பாகவும் இருக்கவேண்டும் என்பதில் ஒவ்வொரு பிரிவுகளுக்காக வாதாடும் ஜனநாயகவாதிகள் அழுத்தம் கொடுக்க வேண்டிய தரப்புகளை அழுத்த வேண்டியதுடன், அழைத்துச்செல்வதிலும் பொறுப்புமிக்கவர்களாவர். பெண்கள் பலதரப்பட்ட மட்டங்களில் சமாதானம். என்பதைக் கட்டியெழுப்புவதில் முன்வைக்கப்படும் கருத்துக்கள் ஆண் ஆதிக்க மையங்களை பலப்படுத்துவதாக இருப்பதால் அடுத்த கட்டத்தின் செயல் அசைவற்றதாகி மீண்டும் விடுதலை, சமாதானம் என்பதிற்கு வரவேண்டியேற்படும். அது ஏக ஆதிக்க மையங்களின் உலகலாவிய தவீரவாதம், பயங்கரவாதம் என்ற கூவல்களாலும்....

–பாவிசா–

# தெற்காசிய பெண்களின் பயிற்சிப் பட்டறையிலிருந்து



**தெற்காசிய மனித உரிமைகளுக்கான அமைப்பினால், 2001 நேபாள்–காத்மண்டுவில் நடைபெற்ற "சமாதான செயல்முறையில் பெண்களின் பங்களிப்பை வலுப்படுத்தல்' பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்டவர்கள் மூன்று செயற்பாட்டுக்குழுக்களாக பிரிந்து கலந்துரையாடப்பட்ட விடயங்களின் தொகுப்பே கீழே தரப்படுகின்றது. இப்பயிற்சிப்பட்டறையில் பெண்கள் தொடர்பான புதிய விடயங்கள் கலந்தாராயப்பட்டது குறிப்பிடத்தக்கது.**

1) பெண்களைச் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்தல்
2) ஓரப்படுத்தலை எதிர்த்தல்
3) பெண்களின் பேச்சுவார்த்தைப் பாணி மற்றும்
4) பெண்களின் வருகையால் முழுச் செயல்முறையிலும் ஏற்படக்கூடிய மாற்றம் போன்ற கொத்தணிக் கருப்பொருட்களைச் சுற்றி மூன்று சிறு செயற்பாட்டுக் குழு அமர்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டன. இச் சிறிய செயற்பாட்டுக்குழு அமர்வுகள் அனைத்துமடங்கும் உத்திகள் பகிர்வு, வேறுபாடுகளின் ஒப்பீட்டுப் பகுப்பாய்வு, முரண்பாட்டுச் சூழல் மற்றும் துடிப்பான சமாதானச் செயற்பாடு காணப்படும் பொதுவான தன்மைகள் குறித்த பகுப்பாய்வு என்பவற்றுக்கான சந்தர்ப்பத்தை வழங்கின. பரந்த அளவில் கூறுவதாயின் மூன்று செயற்பாட்டுக்குழுக்களிலும் கலந்துரையாடப்பட்ட கருப்பொருட்கள் பின்வருமாறு.

- சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான பெண்களின் உத்திகள்.

- கடினமான சமூக மற்றும் ஆட்புலப்பிரிவினைகளை ஊடறுக்கும் வகையில் கூட்டணியைக் கட்டியெழுப்புதல்.

- ஜனசமூக அடிப்படையிலான துடிப்பான சமாதானச் செயற்பாட்டுக்கு மரபுரீதியான கட்டமைப்புகளைப் பயன்படுத்துதல்.
- துடிப்பான அமைப்பு ரீதியான செயற்பாடுகளுக்கான இயலுமைகளும், அவை பிராந்தியங்களுக்கிடையே வேறுபடுவதற்கான காரணங்களும்.
- மன்னிப்பு வழங்குதல் மற்றும் மீளிணக்கச் செயல்முறைகள் : நிலைமாற்ற நீதி.
- விதிமுறையான எதிர் விதிமுறையற்ற அரசியலில் பெண்கள் ஈடுபடுவதும், சுய - அடையாளப்படுத்தலும்.
- பெண்களும், அடையாளப்படுத்தலும் அரசியலும், மற்றும் ஜனசமூகம் அல்லது அரசைக் கட்டியெழுப்புவது குறித்த உறவுகளும்.

பிரதிவிளைவு காட்டல் : குழு ஏ, பி மற்றும் சி

சமாதான மேசையை அமைத்தல்

சமாதான மேசையை அமைப்பதில் யுத்தம் செய்தல், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் புனர்வாழ்வு என்பவற்றில் ஈடுபட்ட சகல செயற்பாட்டாளர்களும் இனங்காணப்படுதல் வேண்டும். இச் செயல்முறை ஜனசமூக மட்டத்திலிருந்து அரசு மட்டத்துக்கும், சர்வதேச அமைப்புகள் மட்டத்துக்கும் செல்வதாக இருக்க வேண்டும் பல்வேறு இனத்துவ மற்றும் சமூகக் குழுக்களைச் சேர்ந்தோர் இனங்காணப்படுதல் வேண்டும். தமது கண்ணோட்டங்களைப் பகிர்ந்து கொள்ளக் கூடியவகையில் சமாதான மேசையில் அல்லது செயல்முறையில் சகல தரப்பினரும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும். மீளிணக்கம் சாத்தியமாக வேண்டுமெனில், நேர்மையான ஆக்கபூர்வமான சமாதான உரையாடலொன்று இடம்பெறக்கூடிய வகையில் ஒவ்வொருவரது துயரம் குறித்தும் ஏனையோர் அறிந்து கொள்வதும், அதை அங்கீகரிப்பதும் அவசியமாகும்.

வெளியார் மத்தியஸ்தம் அல்லது இலகுபடுத்தல் தெற்காசிய யதார்த்தத்தின் வரலாற்று மற்றும் சமூகச் சூழமைவு குறித்த அறிவின்மை காரணமாக பயனுறுதி குறைந்ததாகின்றது. மத்தியஸ்த மற்றும் பேச்சுவார்த்தைச் செயல்முறைகள் பாதிப்புற்ற தரப்பினரிடையே நேரடித் தொடர்புகளின் அடிப்படையில் நிகழ்வதே மிகச் சிறந்ததாகும். வெளியார் மத்தியஸ்தம் அவசியப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களின் சொந்த நிகழ்ச்சிநிரல்கள் மற்றும் கருத்துணர்வுகள் குறித்த தீர்மானகரமான விழிப்புணர்வு அவசியமாகும். வெறுமனே அவர்களைப் பக்கச்சார்ப்பில்லாத தரப்பினராக நோக்குவதில் பயனில்லை. தெற்காசிய ஜனசமூகம் தமது சொந்தப் பிராந்திய மத்தியஸ்தர்கள் மற்றும் அவதானிப்பாளர்கள் குழுவொன்றை உருவாக்குவதில் முதலீடு செய்ய வேண்டியது அவசியமாகும். முரண்பாடு சம்பந்தமான ஒரு பால்நிலைக் கருத்துணர்வு முரண்பாட்டில் பெண்கள் வகிக்க வேண்டிய குறித்துரைப்பான பாத்திரங்களை வெளிப்படுத்துவதாகவுள்ளது. பிரத்தியேமான பிரசாரத்திலிருந்து பாதுகாப்புக் கருவிகளாகப் பயன்படுவது வரை தீர்மானமெடுப்பதில் ஓரப்படுத்தல் தவிர்ந்த பாத்திரங்களை வெளிப்படுத்துவதாகவுள்ளது. ஜனசமூகங்கள் மன்னிக்கவும், மறக்கவும் கற்றுக் கொள்ள முடியுமா? அது ஈட்டப்படும் சமாதானத்தைப் பொறுத்துள்ளது. சமாதானத்தின் கருத்து வன்செயல்களினதும், வேற்றுமைகளினதும் வரலாற்றை மறந்து மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவதென்றால் மன்னிப்பதும், மறப்பதும் சாத்தியமாகாது. குறைசொல்லும் போக்கைவிட மற்றவர் நிலையிலிருந்து விடயங்களைப்பார்த்தல் மற்றும் பரஸ்பர விளக்கம் என்பவை மேலோங்குதல் வேண்டும். பாகிஸ்தானியப் பெண்கள் பங்களாதேஷ் பெண்களிடம் 1971 யுத்தத்தின் போது இடம்பெற்ற அட்டூழியங்களுக்காகக் கூட்டாக மன்னிப்புக்கோரியதை ஓர் உதாரணமாகக் குறிப்பிடலாம். துயரத்தையும், பொறுப்பையும் ஏற்றுக்கொண்டமை இரு குழுக்களுக்குமிடையில் மேலும் திறந்த முறையிலான உரையாடலுக்கு வழிவகுத்துள்ளது.

பெண்களை அணிதிரட்டுதல்

பெண்கள் தம்மைத்தாமே ஒழுங்கமைத்து அணி திரள வேண்டும். இதைத் தடுக்கும் காரணிகள் பின்வருமாறு:

- நிறுவன ரீதியான கட்டமைப்புகள் பெரும்பாலும் சமூகத்தின் ஆண்களின் ஆதிக்கத்தில் இருக்கும் அதே வேளையில், கலாசார மற்றும் மத சம்பிரதாயங்கள் பெண்கள் வீடுகளுக்கு வெளியே பொது விடயங்களில் செயற்பாட்டாளர்களாக விளங்குவதைத் தடை செய்கின்றன. இவ்வாறாகப் பெண்களின் துடிப்பான செயற்பாடுகள் பெரும்பாலும் இலகுவில் ஓரங்கட்டப்படக்கூடிய விதிமுறையற்ற அரசியல் கட்டமைப்புகளையே பயன்படுத்துகின்றன.

- முரண்பாட்டுத் தீர்வு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவது குறித்த எண்ணக்கரு ரீதியான மொழியோடு பெண்கள் பரிச்சயமற்றிருத்தல்.
- பெண்கள் துடிப்பாகச் செயலாற்று முன்னர் அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட மட்டத்திலான பாதுகாப்பு உணர்வு அவசியம். பாலியல் வல்லுறவுக்கு உட்படுதல் (மற்றும் சமூக ரீதியில் ஒதுக்கி வைக்கப்படுதல்) குறித்த பீதிகள் மிகவும் உண்மையானவையாகும்.
- சலுகைபடைத்தோர் - அதிகாரம், செல்வாக்கு மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியோர் முரண்பாட்டுச் சூழல்களிலிருந்து அன்னியப்பட்டுள்ளனர். இதற்கான காரணம் இவர்கள் வன்செயல்களினால் நேரடியாகப் பாதிப்புறாது இருப்பதேயாகும். இது சமாதான இயக்கங்களில் அவர்கள் ஈடுபடும் இயலுமையை மட்டுப்படுத்துகின்றது.
- துடிப்பான அரசியல் செயற்பாட்டைப் பொறுத்தவரையில் (விதிமுறையற்ற எதிர் விதிமுறையான அரசியல்) சகல பெண்களும் பல்வேறு மட்டங்களில் உள்ளனர். பலர் இதற்குத் தயாராக இருப்பதில்லை, அல்லது துடிப்பான அரசியல் செயற்பாடு உடல் ரீதியில் அல்லது சமூகரீதியில் ஆபத்தானதென்று எண்ணுகின்றனர்.
- வடக்கு, கிழக்கைச் சேர்ந்த பெண்கள் சமாதானத்தைக் கட்டியெழுப்புதிலும், முரண்பாட்டுத்தீர்விலும் மரபுரீதியான முறைகளைப் பயன்படுத்துவது குறித்துப் பேசினர். விடயங்களைச் செய்துகாட்டுவதற்கு அல்லது பாதுகாப்பதற்கு பிரசித்த சடங்குகளை உபயோகிப்பது அவர்களின் முயற்சிகளுக்குச் சட்டநிலைத் தகவலை வழங்குவதோடு, கைது மற்றும் கொடூரத்தனம் என்பவற்றையும் தடுக்கின்றது.

விதிமுறையற்ற எதிர் விதிமுறையான அரசியலைப் பொறுத்தவரையில் நாகலாந்து அன்னையர் முன்னணியில் அனுபவம் உள்ளது. அதிகரித்த போதைப் பொருள் கடத்தல் மற்றும் வன்செயலுக்கான பிரதிவிளைவாக ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு சமூக ரீதியில் துடிப்பாகப் பணியாற்றும் தனது பாத்திரத்தை மேலும் சுய-உணர்வுமிக்க அரசியல் செயற்பாடாக நிலைமாற்றம் செய்துள்ளது.

சமூகப் புனர்நிர்மாணம் என்பது ஆழமான அரசியல் தன்மை கொண்ட ஒரு விடயமாகும். பெண்கள் "துடிப்பான சமூகச் செயற்பாடு" என்றும் இந்த முகமூடியைப் பயன்படுத்தி, வழமையான அரசியல் அமைப்புகளின் ஊழல்களிலிருந்து தம்மை வேறுபடுத்துகின்றனர். அத்தோடு தமது செயற்பாடு காரணமாக எழக்கூடிய சமூக மற்றும் உடல்ரீதியான வன்செயல்களையும் தவிர்த்துக் கொள்ளுகின்றனர்.

பெண்கள் வீட்டிலிருக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பயன்படுத்தி சிறுவர்களையும் ஏனைய குடும்ப அங்கத்தினர்களையும் மனிதாபிமானம் மற்றும் சகிப்புத் தன்மை என்பவற்றில் பயிற்றுவிக்கின்றனர். வீட்டில் அவர்களின் உழைப்பு பொருளாதார உழைப்பாக நிலைமாற்றம் பெற்றுள்ளது. என்பதை நாம் ஏற்றுக்கொண்டால், பெண்களின் வீடு குறித்த துடிப்பான செயற்பாட்டை அரசியல் தன்மை கொண்டதென்று மீள் எண்ணக்கருவாக்கம் செய்தல் கூடுமா?

நாக - குக்கி பிணக்கின் அனுபவத்தில் பெண்களின் மரபுரீதியான சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பாத்திரம் பெண்களின் தலையீட்டுக்கு வகை செய்கின்றது.

தாய்மையென்பது மிகவும் சக்திமிக்க அணிதிரட்டும் தத்துவார்த்தமாகும். அரசு யுத்தப் பிரயத்தனங்களுக்கு வலுவூட்டுவதற்குத் தாய்மையைப் பயன்படுத்திக் கொள்ளும் அபாயம் உள்ளது. மேலும் தாய்மை மற்றும் துக்கம் அனுஷ்டித்தல் குறித்த பெண்களின் அமைப்புச் செயற்பாடுகள் பெண்கள் பலியாவோர் என்றும் பிரதிபிம்பத்தை வலுப்படுத்துவதோடு, விதிமுறையான அரசியலுக்கான நிலைமாற்றத்தைத் தடை செய்கின்றது.

தாம் சமத்துவமானவர்கள் என்றும் சுய - உணர்வு பெண்களில் ஏற்படுத்தப்பட வேண்டும். பெண்கள் தமது சொந்தக்

கருத்துணர்வுகளை நிலைமாற்றம் செய்யாதவரையில், இச்செய்தியை அவர்களால் ஏனையோருக்கு வழங்க முடியாது.

பெண்கள் சமாதானத்தை ஏற்படுத்துதல்

பெண்கள் அந்தந்த வேளைகளின் அவசரத்தேவைகளுக்குப் பயன்படுத்தப்படாமல், சமத்துவ அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளும் சமாதானச் செயல்முறையின் பங்காளர்களாதல் வேண்டும். இவ்வாறு அவர்களையும் சேர்த்துக் கொள்ளுதல் அடிமட்டங்களிலிருந்து மேல் நோக்கிய குறித்துரைத்த தேவைகளின் அடிப்படையில் சமாதானச் செயல்முறைக்கு ஒரு மீள் - சூழமைவை வழங்கும்.

சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் அதிகரித்த அளவிலான பிராந்தியக் கூட்டங்களும் பிராந்தியப் பரிமாணத்தைக் கடந்த கூட்டங்களும் பல்வேறு சிக்கல் தன்மைகள் கொண்ட முரண்பாடுகளைப் புரிந்து கொள்ளவும், பேச்சுவார்த்தை மேசைகளிலும் அவற்றுக்கு வெளியிலும் கூறப்படுபவை மற்றும் கூறாமல் விடப்படுபவை சம்பந்தமான விமர்சன ரீதியிலான பரிசீலனை செய்யவும் காலம் எடுக்கும்.

தேசியவாதம் காரணமாக இழந்துவிட்ட அல்லது மறைக்கப்பட்டுள்ள பல்கலாசார வரலாறுகளுக்கும், அமைப்புகளுக்கும் புத்துயிரூட்டப்படுதல் வேண்டும், சகல தரப்பினரிடையிலும் பக்கஞ்சாராத, பாதுகாப்பான, அர்த்தமுள்ள பகிரப்படும் அடையாள உணர்வை உருவாக்குவதற்கு இந்த வரலாறுகளைப் பயன்படுத்தலாம். பேச்சுவார்த்தைகளுக்கான பாதுகாப்பான சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு மரபு ரீதியான பொதுவான விழாக்களைப் பயன்படுத்தலாம்.

ஊடகங்களை ஒரு மூன்றாவது யுத்த முறையாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக அவற்றை பிரத்தியேகமாக ஊடகப் பெண்களை சமாதானம், சகிப்புத்தன்மை மற்றும் நீதி போன்ற செய்திகளை வழங்குவோராகப் பயன்படுத்த வேண்டும்.

பெண்கள் குழுக்கள் மனித உரிமைகள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கிடையிலான உறவிணைப்புகள் குறித்த விழிப்புணர்வு இயக்கங்களை ஆரம்பித்தல் வேண்டும். பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகங்கள் வரை பாடவிதானங்களில் மனித (மற்றும் பெண்கள்) உரிமைகள் மற்றும் சமாதானக் கல்வி என்பவை உள்ளடக்கம் பெறுதல் வேண்டும்.

பெண்கள் தமது செயற்பாடுகள் அரசியல் தன்மை வாய்ந்தவையென்ற சுய - உணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பல பெண்கள் அரசியலை அழுக்கும், ஊழலும் நிறைந்ததாகவே நோக்குகையில், அவர்களைப் பிரதான பிரிவாக அரசியலில் ஈடுபடுவதற்கும், கலாசாரத்தை மாற்றும் பிரயத்தனங்களை மேற்கொள்வதற்கும் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

பெண்கள் தமது சொந்தத் தேவைகளினடைப்படையில் அறிவை வரைவிலக்கணப்படுத்த ஆரம்பிக்க வேண்டும். அவர்கள் தமது சொந்தக் கருத்துணர்வுகள் மற்றும் அனுபவங்களினடிப்படையில் பிரச்சினைகளைத் தத்துவார்த்தப்படுத்தும் எண்ணக் கருவாக்கம் செய்யவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

பெண்கள் தமது இலட்சியங்களை மேலும் முன்னெடுப்பதற்காக நிறுவனங்களையும், அரசியல் கட்டமைப்புகளையும் பயன்படுத்தல் வேண்டும். உதாரணமாக, பெண்கள் இராணுவச் செலவினங்களைக் குறைக்குமாறும் பிரத்தியோகமாக பாலியல் வல்லுறவை ஒரு தனிப்பட்ட பால்நிலை வன்செயல் நிகழ்வாகவன்றி ஒரு தந்தைவழித் தத்துவார்த்த மட்டத்தில் எதிர்க்கும் வகையில் உள்ளூரிலும், சர்வதேச ரீதியாகவும் ஆதரவு திரட்டும் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும்.

பல விடயநிகழ்வுகளில், பதற்றமான சூழல், நடமாட்ட சுதந்திரத்தில் மட்டுப்பாடுகள் மற்றும் பெருமளவிலான இராணுவப் பிரசன்னம் காரணமாக எதிர்க்கட்சிக்குழுக்களைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் இல்லாமல் போகின்றது. உள்ளூர் மத்தியஸ்தக் குழுக்கள் உள்ளூரில், இலகுவாக உரையாடக்கூடியவர்களுடன், நடுநிலை உரையாடல்களை முன் முயற்சியாக ஆரம்பிக்க

வேண்டும். இத்தகைய "சமையல் கட்டு அரசியல்" (போராளிக் குழுக்களை ஓரிடத்தில் உட்கார்ந்து ஒன்றாக உரையாட வைப்பதற்காக அவர்களுக்கு உணவளிக்கும் உதாரணமொன்று கூறப்பட்டது). பெண்களின் நிறுவன ரீதியான செயற்பாடுகளுக்கு சட்டநிலைத்தகவலை வழங்கும்.

சமூக அல்லது பொருளாதாரப் பிரச்சினைகளை ஆத்திரமூட்டல் குறைவாக இடம்பெறும் பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்ப சூழ்நிலையை உருவாக்குவதற்கும் பயன்படுத்தலாம். ஒரு மட்டத்திலான நம்பிக்கை உருவாக்கப்பட்டதும், பெண்களின் அமைப்புகள் முரண்பாட்டுத் தவறு குறித்த அம்சங்களைக் கையாளலாம். உ-ம்: இலங்கை மற்றும் வடக்கு, கிழக்கு (இந்தியா)

எமக்கு எத்தகைய சமாதானம் தேவை என்பது குறித்து நாம் வரைவிலக்கணப்படுத்த வேண்டும். சமாதானமென்ற பெயரில் நாம் அனேக சந்தர்ப்பங்களில் ஏனையோருக்குத் துன்பங்களை ஏற்படுத்துகின்றோம். சமாதானமென்பது வெறுமனே போரின்மையா அல்லது மற்றவர்களின் நிலைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதா? செயற்படு சமாதானமொன்றை நாம் வரைவிலக்கணப்படுத்துவது எவ்வாறு? ஒரு செயற்பாடு சமாதானத்தில் சமத்துவமின்மையும், அடக்குமுறையும் தொடர முடியுமா? ஓர் உடன்படிக்கை சமாதானத்துக்குச் சமமாகாது.

கடினமான எல்லைகள் பெண்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்குகின்றன. பிரிவினைகளை இணைப்பதற்கும், சமாதான வலைப்பின்னல்களை உருவாக்கி நிலைபேறாக்குவதற்கும் மென்மையான எல்லைகள் தீர்மானகரமானவையாகும் பெண்கள் மென்மையான எல்லைகளுக்காக ஆதரவுப் பிரசாரம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஆரம்பத்தில், அரசு மட்டத்திலான உண்மை ஆணைக்குழுக்களைவிட, உள்ளூர் மக்களின் நியாய சபைகள் மேலும் பயனுறுதிமிக்கவையாக அமையக் கூடும். பெண்கள் ஆணைக்குழுக்களும், பெண்கள் நீதிமன்றங்களும் வன்செயல் அனுபவம் மற்றும் மீளிணக்கத்தை நோக்கிய பயணம் என்பவற்றைக் கையாளும் பயனுறுதிமிக்க வழிகளாக அமையக்கூடும்.

சார்க் அமைப்பு சிவில் சமூகத்தையும், பிரத்தியேகமாக சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பெண்களையும் அங்கீகரித்தல் வேண்டும்.

நன்றி : பெண்கள் சமாதானத்தை கட்டியெழுப்புதல் - புத்தகம் 2001

## Project Plan

யாழ்ப்பாணக்குடாநாட்டில் 21,000 ற்கும் மேலான கணவனை இழந்த பெண்கள் என அதிசயத்தக்க தகவல்களை பொறுக்கி அதற்கும், அவ்வாறு கணவனை இழந்த மற்றும் ஊனமுற்ற கணவனைக் கொண்ட பெண்களுக்கென்று மறுவாழ்வு, அபிவிருத்தியென முண்டியடித்துக்கொண்டு நிதிகளைப்பெறும் வேலைத்திட்டங்கள் முன்னேறிக்கொண்டு நடைபெறுகின்றது. அது பெண்களுக்கல்ல....! ஆனால், யாழ்ப்பாணக்குடாநாட்டிற்கு வெளியேயும், குறிப்பாக வன்னியிலும் கணவனை இழந்த, ஊனமுற்ற கணவனைக் கொண்ட, கணவனோடு வாழாத, கணவனை ஆக்கிக்கொள்ளாத, பெற்றோரை இழந்த சகோதரங்களற்ற, ஊனமுற்ற பெண்களைப் பற்றியும் அவர்களின் மறுவாழ்வு பற்றியும், அபிவிருத்தி பற்றியும் தகவல்கள் திரட்டப்படவில்லை... திரட்டுவதற்கான முயற்சிகள் நடைபெறவில்லை.... யுத்தம் நடைபெறவில்லை.... வேறு நிர்வாகம் நடைபெறுகிறதால் அவசியமில்லையென்ற அதிசயத்தக்க தகவலை பொறுக்க நேரிட்ட....? (எனக்கு இதைச் சொல்லுறதுக்கும், எழுதுறதுக்கும் சுதந்திரம் கிடைச்சிட்டுது என்டு நினைச்சிடாதீர்கள்..! எல்லாம் கடைசியில கலக்கிவிடுறதான்.. பின்னால காது சிவக்கும்)

-- பச்சிளம்மா --

# முரண்பாட்டின் வகையொழுங்கு

(குறிப்பு : 2001 நேபாள் – காத்மண்டுவில் நடைபெற்ற "சமாதான செயல்முறையில் பெண்களின் பங்களிப்பை வலுப்படுத்தல்'' என்ற பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றியவர்களால் தயாரிக்கப்பட்ட முரண்பாட்டு வகையொழுங்கு)

## இராணுவ ரீதியான பிரசன்னம்

இராணுவ வீரர்கள் : எண்ணிக்கை
போராளிகள் : எண்ணிக்கை

பாடாசலைகள், விடுதிகள், ஹோட்டல்கள், விளையாட்டரங்குகள், பொதுப்பூங்காக்கள், எல்லைப் பண்ணை நிலங்கள், தனியார் வீடுகள் என்பவற்றை பாதுகாப்பு படைகள் அல்லது போராளிகள் ஆக்கிரமித்து வைத்திருத்தல். முகாம்கள், விசாரணை நிலையங்கள், கண்ணிவெடிப் பிரதேசங்கள் மற்றும் தெருக்கள் என்பவற்றுக்காக மத வணக்கத்தலங்களை உபயோகித்தல்

படைகள் ரோந்து செல்லுதல், கறுப்பு அதிரடிப்படையினரின் ஆயத வாகனத்தொடர்கள், வெள்ளை ஆளணியினரைத் கொண்டு செல்லும் கவச வாகனங்கள்.

நடு இரவில் கதவு தட்டப்படுதல். போர் வீரர்கள் போராளிகள் உணவிற்கும், இருப்பிடத்திற்கும்

சிவிலியன் அதிகாரிகளின் இடம்பெயர்வு. சிவில் சுதந்திரங்களைத் தடுத்து வைத்தல் அதி தீவிர அடக்குமுறைச் சட்டம், ஊடகத்தணிக்கைகள்

பாதுகாப்புபடை அல்லது இராணுவ அபிவிருத்திச் செயற்பாடுகள் – சாத்தி லாகோ

## செயற்பாடு

தேடுதல் நடவடிக்கைகள்
சுற்றிவளைப்பு தேடுதல்– சந்தேகநபர்களைச் சுற்றிவளைத்தல், விசாரணை, தாக்குதல், கைது, சித்திரவதை, பாலியல் வல்லுறவு, கடத்தல், கொலைகள்

துப்பாக்கிச் சமர்கள் – இடையில் அகப்பட்டு மரணிப்போர், விரட்டிச் செல்லுதல், வீடுகளையும், கடைகளையும் தரைமட்டமாக்குதல், உடல் ரீதியான சோதனைகள்

சிவிலியன்களை ஆயுத பாணியாக்கல் அல்லது எதிர்க்குழுக்கள் மக்கள் போராளிகள் உருவாக்குதல், சரணடைந்த போராளிகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்படாமை, தகவல் வழங்குவோர் வலைப்பின்னல்


கொத்தணிக் கிராமங்கள், குடியேற்ற உத்தி

காடுகள் பயிர்களை அழித்தல். எவரின் கட்டுப்பாட்டிலும் இல்லாத இடைப்பிரதேசத்தை இராணுவமயப்படுத்தல்

கலகக்காரர் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் முற்றுகையிடப்பட்ட மக்கட் தொகை. அடிப்படை உணவு, மருந்து வழங்கல் தடை, போராளிகளையும் சிவலியன்களையும் பட்டினிபோடுதல்


கலாசாரப் பாதுகாப்புச் செயற்பாடுகள்– திரைப்பட அரங்குகள், அழகுக்கலை இல்லங்கள் என்பவற்றைத் தரைமட்டமாக்குதல், ஆடை அணிதல் சம்பந்தமான அறிவுறுத்தல்கள்

இனப்பெருக்க உரிமைகள் கட்டுப்பாடு, கருச்சிதைவுத்தடை, வன்செயல் கருத்தரிப்புகள். இனத்துவப்படுகொலைகள்


தாக்கம்
சமூக கலாசார
ஏனையவை
துப்பாக்கி கலாசாரம், சமூகத்தில் கொடூரம், நம்பிக்கை குறித்த சமூகப் பிணைப்புகள் அழிவு, வலுவழிப்பு உணர்வு, தொடர்ச்சியான பாதுகாப்பின்மை உணர்வு, சிவில் சமூகம் அழிவடைதல் மற்றும் விரக்தி
சிறுவர் மத்தியில் குழப்பம், போதைப்பொருள், மனஅதிர்ச்சிகளுக்குப் பிந்திய பாதிப்புகள், எச்ஐவீ, தற்கொலை
இல்லங்களில் வன்செயல், எதிர் விளைவுகள் அதிகரிப்பு
மரபு அல்லாத பாத்திரங்கள்
பால்நிலை உறவுகளில் மாற்றங்கள்
போர் செய்யும் இரு தரப்பினரிடையில் அகப்படுதல், நடுநிலையான சந்தர்ப்ப சூழல்கள் இல்லாமல் போதல், துருவப்படுத்தல், முற்றுகை உணர்வு – ஜனசமூக அடையாளத்தை நாடுதல்
கருச்சிதைவுத்தடை, தாய்மை அரசியல் மயப்படுத்தல்
கொலைகள், காணாமல்போதல், கடத்தல், தன்னிச்சையான கைதுகள், சித்திரவதை, பாலியல் வல்லுறவு, அங்கவீனம், பயமுறுத்தல், பலாத்கார ஆட்சேர்ப்பு, கட்டாய உழைப்பு
ஆண்கள் அல்லது குடும்பங்கள் இல்லாது போதல், விதவைகள், அரை விதவைகள், அநாதைகள்
பால் விகிதாசாரம், திருமண வயது
சிறுவர் உழைப்பு
அகதிகள், உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர்
சாதி கலப்பு
பாடசாலை மாணவியர் காணாமல் போதல், பாடசாலை யிலிருந்து இடையில் விலகுவோர்
ஊரடங்குச் சட்டம், பாடசாலைகள், கடைகள், வியாபாரங்கள் மூடுதல், பிரயாண மட்டுப்பாடுகள், அவசரசேவைகள் மருந்துவ உதவிகள் பெற்றுக்கொள்ள முடியாமை
பெண்கள் தலைவர்களாக விளங்கும் குடும்பங்கள், பெண்களின் துடிப்பான இல்லச் செயற்பாடுகள், குடும்பத்தையும், ஜனசமூகத்தையும் பாதுகாப்பதற்கு பொதுப் பேச்சுவார்த்தைகளுள் பெண்கள் தள்ளப்படுதல்
பொருளாதார, கல்வி சுகாதார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் குழப்பம், தெருக்கள், மின்சாரம், நீர், வைத்தியசாலைகள், பாடசாலைகள் – அகநிலையமைவுகள் உதாசீனம்
வறுமை, ஜீவனோபாயம் இன்மை, திறன்கள் இல்லாமல் போதல், வேலைகளுக்குத் தகுதியின்மை
காணாமற்போன ஆசிரியர்கள், வைத்தியர்கள்
சூழல் அழிவு

முரண்பாட்டு செயற்பாட்டில் பெண்களின் பாத்திரங்கள் – முகவர்கள்

எதிர்ப்பு



சுவிஸில் 11.10.2003 அன்று நடந்த...

# பெண்கள் சந்திப்பு - ஒரு குறிப்பு



புகலிடத்தில் வாழும் பெண்கள் தங்கள் கருத்துக்களையும் அனுபவங்களையும் பரிமாறிக்கொள்ளும் முகமாக 1990இல் ஜேர்மனியில் உள்ள சில பெண்களால் ஆரம்பிக்கப்பட்டது. இப் பெண்கள் சந்திப்பு ஜேர்மனியின் பல்வேறு மாநிலங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற அதேநேரம், அது தனது எல்லைகளை விஸ்தரித்து சுவிஸ், பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் சந்திப்புகளை நடாத்தி வருகின்றது. ஐரோப்பாவில் வாழும் பெண்கள் மட்டுமன்றி இலங்கை, இந்தியா அவுஸ்திரேலியாவிலிருந்தும்கூட பெண்கள் வந்து கலந்து கொள்ளும் சந்திப்பாக வளர்ந்திருக்கிறது. சுவிஸில் மூன்றாவது தடவையாக நடைபெறும் பெண்கள் சந்திப்பின் 22வது தொடர் ஒக்டோபர் மாதம் 11ம் திகதி சுவிஸ் சூரிச் நகரில் நடைபெற்றது. இச் சந்திப்பு தனது 13வது வருடத்தை பூர்த்தி செய்வதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---

ஒரு நாள் நிகழ்ச்சியாக நடைபெற்ற இச் சந்திப்பில் பெண்ணியச் சிந்தனை நோக்கிலான கருத்தாடல்கள், அனுபவப் பகிர்வுகள், விமர்சனங்கள் என்பன இடம்பெற்றன. வழமைபோல் சுய அறிமுகத்துடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. தமிழ்ப் பெண்களின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும் கலாச்சாரமும் பெண்களும் என்ற தலைப்பில் பிரான்ஸைச் சேர்ந்த பரிமளா தனது கருத்தை வெளியிட்டார் அவர் கூறும்போது சகல பெண்களும் ஒடுக்குமுறைக்கு உட்பட்டிருக்கின்றோம், வெள்ளை இனப் பெண்களாக இருந்தால்கூட. குறிப்பாக வறிய வெள்ளை இனப் பெண்கள், ஆபிரிக்கப் பெண்களைவிட இந்திய, இலங்கைப் பெண்கள் கலாச்சாரத்தினால் கூடுதலாக ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்றே நினைக்கிறேன். இந்திய இலங்கைப் பெண்கள் "தாலி" என்ற பதத்தை வைத்து சென்றிமென்டாகவும் பெண் ஒடுக்குமுறைக்குள் தள்ளிவிடப்பட்டுள்ளார்கள். பண்டைய காலத்தில் மாடுகளை தங்களுடைய மாடுகள்தாம் என அடையாளம் காண்பதற்காக நிறம் பூசிய கயிறுகள் மூலம் கட்டுவர் அதேபோல்தான் இந்தத் தாலியும் என்று கூறினார். கலாச்சாரத்தை பெண்கள் மட்டும்தானா கட்டிக்காக்க வேண்டும் என்றும் கேள்வி எழுப்பினார். தாய்வழிச் சமூகம் இருந்த காலத்தில் பெண்கள் கடின உழைப்பாளிகளாகவும் ஆண்கள் வீட்டு வேலைகளை செய்பவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். தாய்வழிச் சமூகம் மாறி தந்தைவழிச் சமூகம் வந்தபின் அவர்கள் பெண்களை அடக்குவதற்காக தாலி, சாமர்த்திய சடங்கு, பொட்டு பூ நகை போன்ற அடையாளங்களை வேண்டுமென்றே கலாச்சார சின்னங்களாக திணித்து பெண்களை அடிமையாக்கியுள்ளனர். இவ்வாறாக தனது கருத்துக்களை முன்வைத்தார் பரிமளா.

கலந்துரையாடல் ஒன்றரை மணிநேரம் நடைபெற்றது மட்டுமல்லாமல் பயனுள்ளதாகவும் அமைந்தது.

மதியபோசனத்தின் பின் சாந்தினி வரதராஜன் புலம்பெயர் தமிழ்ப் பெண்களின் முற்போக்கு சிந்தனையும் அவர்கள் வாழும் பிற்போக்கு வாழ்க்கையும் என்ற விடயத்தினை முன்வைத்து தனது கருத்தை வெளியிட்டார். இன்று பெண்கள் தாங்கள் வாழும் வாழ்க்கையில் பின்தங்கியே உள்ளார்கள் என்றும் மனம்விட்டுப் பேசக்கூட அவர்களால் முடியாமல் உள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், தாங்கள் முற்போக்கு சிந்தனையுடன் தான் வாழ்கிறோம் எனக் கூறிக்கொண்டு தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறினார். இதையடுத்து பலர் அங்கு மனம்விட்டுக் கதைத்தார்கள். இது அங்கு சமூகமளித்த பெண்களை உணர்வுரீதியில் ஒன்றுகூட வைத்தது சிறப்பான அம்சமாக அமைந்தது.

அடுத்த நிகழ்ச்சியாக பெண்கள் சந்திப்பு மலர்2002 இன் மீதான ஓர் வாசிப்பை ஜேர்மனியைச் சேர்ந்த சந்திரவதனா செய்யவிருப்பதை அறிவித்த நான், அதற்குமுன் இம் மலர் பற்றிய சில கருத்துக்களை எனது தலைமையுரையின் ஒரு பகுதியாகக் குறிப்பிட்டேன். பால்வினைத் தொழில் பற்றிய விடயங்களை கருப்பொருளாகக் கொண்டு இம் மலர் வெளிவந்துள்ளது. பால்வினைத் தொழில் என்ற சொல்லே எம்மில் பலருக்கு அலர்ஜியை ஏற்படுத்தக்கூடியது. இது என்ன சாக்கடை, இந்த அசிங்கத்தை எழுதுவதன் மூலம் நாமும் கெட்டவர்கள் ஆகிவிடுவோமா என்ற பயமும் எம்மில் சிலருக்கு. ஒரு தலைப்பைத் தெரிவு செய்து இதுபற்றி எழுதுங்கள் என வரையறுப்பது படைப்பாளியின் சுதந்திரத்தில் தலையிடுவது போன்றது என்றாலும், சமூகத்தில் நடைமுறையில் இருக்கும் பாலியல் சுரண்டல், சமப்பாலுறவு போன்ற விடயங்கள் ஏனைய சமூகங்களில் பேசப்படுவது போன்று தமிழ்பேசும் மக்களிடையே உரத்துப்பேசப்படுவதில்லை. பால்வினைத் தொழிலை பேசு பொருளாக்குவதன் மூலம் பெண்கள் மீது சமூகமும் அதனுடன் தொடர்புடைய சகல நிறுவனமயப்படுத்தபட்டவைகளும் எவ்வாறு அடக்குமுறையை திட்டமிட்டுப் பேணுகின்றன என்பதை நாம் வேறு ஒரு பரிமாணத்தில் காணலாம். பெண்ணியம் பற்றிய புரிதலில், உணர்தலில் பால்வினைத் தொழில் பற்றிய கருத்தோட்டத்தையும் வாதப்பிரதிவாதங்களையும் ஏற்படுத்த வேண்டிய தேவையின் அடிப்படையில் இதனை நாம் தெரிவு செய்திருந்தோம் என தொகுப்பாளர்கள் கூறியுள்ளார்கள்.

ஆனால் இப் பெண்கள் சந்திப்பு மலர் வெளிவந்தவுடன் பல ஆண்கள் தங்களது காழ்ப்புணர்ச்சிகளை கொட்டவும் தவறவில்லை. அவர்களுக்குத் துணையாக யாழ் இணையம் இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. யாழ் இணையத்தில் தங்களது ஆணாதிக்கக் கருத்துக்களை வலுப்படுத்துவதற்காக பெண்கள் சந்திப்புமலரை கொச்சையாக எழுதியதும் மட்டுமல்லாமல், தங்களது சொந்தப் பெயர்களில் எழுத திராணியற்ற ஆண்கள் வேறு பெயர்களில் பெண்கள் சந்திப்பு மலரைப் பற்றி மிகக் கேவலமான முறையில் யாழ்.கொம்மில் 14 பக்கங்கள் வரை தங்களது காழ்ப்புணர்வுகளை கொட்டித்தீர்த்தனர். அதற்குப் பதிலடி கொடுத்து இளைஞனும், சந்திரவதனாவும் தமது கருத்துக்களை கூறியிருந்தனர். அம் மலரை கண்ணால்கூட பார்க்காமல், அதில் வந்த கட்டுரைகளை வாசிக்காமல் கருத்துச் சொல்ல வருமளவுக்கு ஆண் மேலாதிக்கச் சிந்தனை எழுத்துத் தர்மத்தையே மீறி செயற்பட வைத்தது. இதற்குத் துணைபோன யாழ்.கொம் போன்ற இணையத்தளங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளாமைக்கு எனது வன்மையான கண்டனத்தைத் முன்வைத்தேன். இதன்பால் அபிப்பிராயம் தெரிவித்த பலரும், இவர்களைப் போன்றவர்களை நாம் கணக்கில் எடுத்து விவாதிப்பதும் விமர்சிப்பதும் தேவையில்லாதது இவர்கள் எல்லாவற்றுக்கும் மூக்கை நுழைப்பவர்கள் அதனால் இவர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் எமக்கு இல்லை எனவும் அத்துடன் சொந்தப் பெயர்களில் எழுதுவதை விடுத்து புனைபெயர்களின் பின்னால் ஒளிந்துகொள்வதே அவர்களது கருத்துகளின்மீதான திராணியற்ற தன்மையை வெளிப்படுத்துவதாகவும் கருத்துக்கள் கூறப்பட்டதுடன் யாழ்.கொம் மீது கண்டனமும் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து இம் மலர் பற்றிய சந்திரவதனாவின் கட்டுரை வாசிக்கப்பட்டது.

பால்வினைத்தொழில் சம்பந்தமான தகவல்களைத் திரட்டும் இந்தக் கால கட்டத்தில் என்னால் வேறெதிலும் கவனம் செலுத்த முடியாதபடி மனசு

ஏதோ ஒரு சோகத்தில் ஆழ்ந்து போயிருந்தது. இப்படியும் நடக்கிறதா..? இப்படியெல்லாம் சின்னஞ்சிறு சிறுமிகளும், பெண்களும் துயருறுகிறார்களா..? உலகம் இத்தனை ஏமாற்றுத்தனமும் நயவஞ்சகமும், சுயநலமும் நிறைந்ததா..? என்றெல்லாம் கேள்விகள் எனக்குள் எழுந்து கொண்டே இருந்தன. சில விடயங்களை நம்பவும் முடியாமல், நம்பித்தான் ஆக வேண்டும் என்ற நிலையில் உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் பால்வினைத் தொழிலுக்காகவும், பாலியல் துர்ப்பிரயோகத்துக்காகவும் பலிக்கடாக்கள் ஆக்கப்பட்ட பெண்களின் துயர்களை மனசை விட்டு அகற்றவும் முடியாமல்.. அவஸ்தைப்பட்டேன் என உணர்வைக் கொட்டியபடி தொடங்கிய அவரின் விமர்சனம் எல்லோரையும் பாதிப்பதாக இருந்தது.

இதற்கு கருத்துச் சொன்ன பெண்கள், இப்படியான பிரச்சினைகள் எமது சமூகத்தினரிடமும் இருக்கின்றது அதை மூடி மறைத்து வருகின்றனர் என்றும் சென்ற ஆண்டில் வவுனியாவில் ஒரு சிறுமி 65 வயது நிரம்பிய ஆணால் பாலியல் வன்முறைக்கு ஆளாகியதை ஒரு உதாரணமாகவும் அந்த ஆண் குற்றவாளிக்கு நீதிமன்றம் 1500 ரூபா அபராதமும் 6 மாதச் சிறைத்தண்டனையும் விதித்த மலினமான தண்டனை பற்றியும் பேசப்பட்டது. புலம்பெயர் தேசத்திலும்கூட நிகழ்ந்த இவ்வாறான வன்முறை பற்றியும் (குறிப்பாக பிரான்ஸ் இல் கொலைசெய்யப்பட்ட சிறுமி நிதர்சினி உதாரணமாக்கப்பட்டார்) கருத்துக்கள் பரிமாறப்பட்டது. இந்தியா போன்ற நாடுகளில் பால்வினைத் தொழிலாளர்கள் உருவாக்கப்படுவதில் ஆட்கடத்தல் மூலமாக அதாவது சிறுமிகள் யுவதிகளைக் கடத்திச் சென்று பலவந்தமாக இத் தொழிலுக்கு உட்படுத்தி பின் அதிலிருந்து மீளமுடியாமல் ஆக்கிவிடுவதின் மூலமும் பால்வினைத் தொழிலாளர்கள் உருவாக்கப்படுவது பற்றியும் பேசப்பட்டன.


அடுத்த நிகழ்ச்சியாக நளாயினி ஒரு பெண்ணின் எழுதுகோலுக்குப் பின்னால் என்ற தலையங்கத்தில் உரையாடினார். அவர் கூறும்போது ஒரு ஆண் எழுத்தாளன் ஒரு பெண் எழுத்தாளரை விட எத்தனை தவறுகள் செய்தாலும் இந்த சமூகம் எதையுமே கூற தலைப்படாது என்றும் ஒரு பெண் எழுத்தளருக்கோ இச்சமூகம் எழுந்தமானமான விமர்சனங்களால் சந்தேகப் பார்வைகளால் மனம் நொந்து தற்கொலை செய்யுமளவுக்கு தள்ளிவிடுகின்றனர் என்றும் கூறினார். அத்தோடு ஆண் எழுத்தாளர்கள் எதை வேண்டுமானாலும் எழுதிவிட்டு போகலாம்ளூ அது கருத்தோடு நோக்கப்படும் விமர்சனம்ளூ அந்த ஆணையோ அல்லது அவனின் குடும்பத்தையோ சாடாது எழுத்தோடு மட்டுமே நின்று கொள்ளும். ஒரு ஆண் எழுத்தாளன் காதலை காமத்தை சமூக வரம்பு மீறலை எதையும் எழுதலாம். ஆனால் ஒரு பெண் எழுத்தாளர் இதையே காமத்தை காதலை ஏன் பாலியல் சம்பந்தமாக எழுதிவிட்டால் அவளே அதை செய்ததாக குற்றச்சாட்டு வைத்து, விமர்சனத்தை கூறி, மனஅழுத்தத்தை ஏற்படுத்தி, அவளை எழுதவிடமால் பண்ணிவிடுகிறார்கள் என தனது பல கருத்துக்களை முன்வைத்தார்.

கடைசி நிகழ்ச்சியாக அடுத்த பெண்கள் சந்திப்பு மலர்க் குழு தெரிவுசெய்யப்பட்டதுடன், பெண்களின் பிரச்சினைகளை மையமாக வைத்து எடுக்கப்பட்ட குறுந் திரைப்படங்களான மத்தம்மா, மல்லி, தூக்கம், ஆயிஷா, ராஜாங்கத்தின் முடிவு ஆகிய படங்கள் காண்பிக்கப்பட்டன. . இப் பெண்கள் சந்திப்பினால் என்ன பலன் ஏற்பட்டுவிடப் போகிறது. பெண்கள் சந்திப்பு மலர் தேவைதானா? கவிதை, கட்டுரை, கதை, ஓவியம், விமர்சனங்களினால் என்ன நிகழ்ந்துவிடப்போகிறது? இவைகளால் பெண்களின் பிரச்சினைகள் இல்லாமல் போய்விடுமா? அல்லது பெண்ணுரிமை தான் கிடைத்துவிடுமா? இவ்வாறான கேள்விகளோடு இச் சந்திப்பிலிருந்து சில பெண்கள் ஒதுங்கிக் கொண்டனர். காலம்காலமாக எழும் இப்படியான சலனங்களுக்கு விடைகளை அவர்கள் தமது தரப்பிலேயே தேடிக்கொள்ள வேண்டியிருப்பதால் அவை எந்த சமூகச் செயற்பாட்டையும் இல்லாமல் செய்துவிடுவதில்லை. பெண்கள் சந்திப்பும் அதன் தொடர்ச்சியைப் பேணிக் கொண்டு ஒக்ரோபர் 11ம் தேதியன்று சுவிஸில் ஆக்கபூர்வமாக நடந்துமுடிந்தது.

அடுத்த பெண்கள் சந்திப்பு (2004 ம்ஆண்டு) பிரான்சில் நடைபெறவுள்ளது.

றஞ்சி (சுவிஸ்)

நன்றி : தேனீ வெப்தளம்



"ஒடுக்கப்பட்டவர்கள் ஒடுக்கப்பட்டவர்களைத்தான் ஆய்வுசெய்ய வேண்டும், உண்மை ஆய்வு என்பது அதுதான் மற்றவர்கள் செய்யும் ஆய்வுகள் இருட்டடிப்புச்செய்யக்கூடியதும், கற்பனைத்தகவல்களை இணைக்கக்கூடியதுமாக இருக்? இங்கே ஒடுக்கப்பட்டவர்கள் பெண்களாகலாம், இனமாகலாம், சாதியாகலாம், வர்க்கமாகலாம் ஆனால் எது அங்கீகரிக்கப்படுகிறது? யார் அங்கீகரிப்பது?''